உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 27 வெள்ளிக்கிழமை (11.03.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 105



02
காலிறுதிக்குள் கால் வைத்தது இலங்கை



13
இதுதான் ஜனநாயக அரசியலா?



16
புலிகளைப் போலவே கூட்டமைப்பும் கேட்கிறது...?



24
மாற்றாட்சி காண்பது உறுதி



30
அமைச்சர் விமலுக்கு சாட்டை

# தமிழகத்தில் புலிகள் முகாம்களா? அடியோடு மறுக்கின்றது இந்தியா

## ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று சீறுகிறார் தமிழக டி.ஜி.பி லத்திகா

புதுடில்லி,மார்ச் 11

விடுதலைப் புலிகளின் மூன்று பயிற்சி முகாம்கள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன எனப் பிரதமர் டி.எம்.ஜயரட்ண நாடாளுமன்றத்தில் தெரிவித்த குற்றச்சாட்டை இந்தியா அடியோடு மறுத்துள்ளது.

தமக்கு தெரிந்தவரை இந்தியாவுக்குள் எங்கும் புலிகளின் முகாம்கள் கிடையாது என இந்திய உள்துறை அமைச்சு நேற்றுக் கூறியது.

அதே சமயம் இந்தக் குற்றச்சாட்டு அடிப்படையற்றது, ஆதாரமற்றது எனத் தமிழக பொலிஸ் மா அதிபர் (டி.ஜி.பி) லத்திகா சரண் சீற்றத்துடன் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பதற்கான விவாதத்தை நாடாளுமன்றத்தில் ஆரம்பித்து நேற்றுமுன்தினம் உரையாற்றிய பிரதமர் டி.எம். ஜயரட்ண, விடுதலைப் புலிகளின் 3 பயிற்சி முகாம்கள் இந்தியாவின் தென் மாநிலமான தமிழகத்தில் இயங்கி வருகின்றன எனத் தெரிவித்திருந்தார்.

அரசியல் தலைவர்கள் (29 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைக்காட்சியில் ஜனாதிபதி இன்று உரையாற்றுவார்

கொழும்பு, மார்ச் 11

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று இரவு 9.00மணிக்கு தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகின்றார்.

சிரச, சுவர்ணவாஹினி, ரி.என்.எல், தெரண, ரூபவாஹினி, சுயாதீன தொலைக்காட்சி ஆகிய தொலைக்காட்சி சேவைகளில் ஜனாதிபதியின் உரையைப் பொது மக்கள் கேட்கலாம் என ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது.

## இலங்கை - கனடா வாரம் 7 விமான சேவை

கொழும்பு, மார்ச் 11

ஸ்ரீலங்கன் விமான சேவை கொழும்பில் இருந்து முதன்முறையாகக் கனடாவுக்கு வாராந்தம் ஏழு விமான சேவைகளை நடத்தவுள்ளது.

இலங்கைக்கும், பிரிட்டனுக்கும் இடையில் சமீபத்தில் கைச்சாத்தான ஒப்பந்தத்தின் மூலம் இந்தச் சேவைகள் நடத்தப்படவுள்ளன.

இந்த விமானசேவை மூலம் இலங்கைக்கும், கனடாவுக்கும் இடையில் பயணிக்கும் விமானப் பயணிகளுக்கு நன்மைகள் ஏற்படவுள்ளன.

இந்தப் புதிய ஒப்பந்தத்தின் பயனாக இதுவரையில் இலங்கைக்கும், லண்டனுக்கும் இடையில் நிலவிவந்த (29 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாகவே இலங்கைக் குழு பான் கீ-மூனுடன் பேச்சு

### அமைச்சர் சம்பிக்க விளக்கம்

கொழும்பு, மார்ச் 11

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசு மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட இடைக் காலக் குழு குறித்தும், ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்தும் இலங்கைத் தூதுக்குழு ஐ.நாவுக்கு விளக்கமளித்துள்ளது.

இவ்வாறு மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஐக்கிய நாடுகள் சபைக்கு விஜயம் மேற்கொண்டு ஐ.நா. செயலாளர் நாயகத்தை சந்தித்த இலங்கைத் தூதுக்குழு விடயம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை விரைவில் வெளிவரவுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட இடைக்கால முகவர் குழுவின் தற்போதைய நடவடிக்கை குறித்தும், நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கை குறித்தும் இலங்கைத் தூதுக்குழு அண்மையில் ஐக்கிய நாடு களின் செயலாளர் நாயகம் பான் கீ-மூனை சந்தித்தபோது (29 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்குழு-பான் கீ-மூன் சந்திப்புக்கு ஐ.தே.க. வரவேற்பு

கொழும்பு, மார்ச் 11

இலங்கைத் தூதுக் குழுவினர் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ- மூனுடன் பேச்சு நடத்தியதை வரவேற்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நாம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மிகவும் வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றோம். நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தல் இடம்பெற்றால் நிச்சயம் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெறும். மக்கள் எம்மை நோக்கியே வந்துகொண்டிருக்கின்றனர்.

தோல்வியை நன்கு அறிந்த அரசு எம் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. எமது (29 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் விமலுக்கு சரவணபவன் எம்.பி சபையில் சாட்டை

கொழும்பு, மார்ச் 11

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீதான தாக்குதல் தொடர்பில் முறையற்ற கருத்தைத் தெரிவித்த அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்குச் சபையில் வைத்தே முறையான சாட்டையடி வழங்கினார் நாடாளுமன்றஉறுப்பினர் சரவணபவன்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்பதைப் பொலிஸ் மா அதிபர் ஆதாரத்துடன் தெரிவிக்கும் போது அமைச்சருக்கு மட்டும் அது எப்படிச் சோடிக்கப்பட்ட வித்தையாகத் தெரிந்தது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

"உண்மை ஒன்றாக இருக்க, அமைச்சர் விமல் வீரவன்ஸ பொறுப்பற்ற வகையில் பேசிக் கூட்டமைப்பினர் மீது சேறுபூச முயல்கிறார். இந்தச் சபையில் பேசுபவர்கள் தாம் எங்கு பேசுகிறோம் என்பதை உணர்ந்து பேச வேண்டும். உண்மையான விடயங்களைக் கூற வேண்டும். இங்கு பேசப்படுபவை பொது மக்களுக்கும் உலக நாடுகளுக்கும் சென்று சேர்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்" என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்.

(30 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவே புலிகள் தொடர்பாகப் பிரதமர் பூரளி

### மங்கள சாட்டை

கொழும்பு, மார்ச் 11

அவசரகாலச்சட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்காகவே தமிழ் நாட்டில் புலிகள் பயிற்சி பெறுகின்றனர் என்று பிரதமர் நாடாளுமன்றில் கூறினார்.

-இப்படி ஐ.தே.க.எம்.பி. மங்கள சமரவீர நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்தியாவின் தமிழ்நாட்டில் புலிகள் பயிற்சி எடுத்து வருகின்றனர் என்று பிரதமர் டி.எம்.ஜயரட்ன நாடாளுமன்றில் அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தின்

(29 ஆம் பக்கம் பார்க்க)

## இரு பிரதி அமைச்சர்களிடையே மாத்தளையில் நேற்று மோதல்

கொழும்பு, மார்ச். 11

அரசின் இரு பிரதியமைச்சர்களுக்கிடையில் வாக்குவாதம் முற்றியதில் பிரதியமைச்சர்களில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் மாத்தளையில் நேற்று இடம்பெற்றபோது போக்குவரத்துப் பிரதியமைச்சரான ரொஹான் திசாநாயக்க மற்றும் உயர்கல்வி பிரதியமைச்சர் நந்தமித்திர ஏக்கநாயக்க ஆகியோருக்கு இடையிலேயே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் பிரசார கூட்டத்திற்கு நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்டிருந்தார். ஆனால் இச்சம்பவம் இடம்பெற்றபோது நாமல் ராஜபக்ஷ அங்கு இருக்கவில்லை.

பிரதியமைச்சர் நந்தமித்திர ஏக்கநாயக்க அவரது உரையில் கடுஞ்சொற்களைப் பிரயோகித்து பிரதியமைச்சர் திசாநாயக்கவை

(29 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



டில்ஷானின் 'ஹட்றிக்கை' மஹேல தவறவிட்டபோது...



இணைப்பாட்ட சாதனை புரிந்த டில்ஷான் - தரங்க



# காலிறுதிக்குள் கால் வைத்தது இலங்கை

- டிலீப் -

டில்ஷான் கலக்கினார் சகலதுறைகளிலும். வெற்றி தேடி வந்தது இலங்கையின் கைக்கு. சிம்பாப்வேயும் சிறப்பான ஆட்டம். இதனால் நீடித்தது இரு அணியினதும் வெற்றிக்கான போராட்டம்.

கண்டியில் நேற்றைய 26 ஆவது ஆட்டம். சிம்பாப்வே நாணயச் சுழற்சியில் வென்று இலங்கையைப் பணித்தது துடுப்பெடுத்தாட. இந்த முடிவு பிழையென்று இப்போது உணர்ந்திருப்பார்கள். வில்லங்கத்தை சிம்பாப்வே விலை கொடுத்து வாங்கியது.

சிம்பாவேயின் பந்துகளைச் சிதறடிக்கக் களத்துக்கு வந்தது டில்ஷான்-தரங்க ஜோடி. வந்தது முதலே நாலா பக்கமும் பந்துகள் சிதறின. அதிரடி என்னவென்பது காட்டியது இந்த ஜோடி. பந்துகள் இவர்கள் மட்டையில் பட்டதும் சென்றது எல்லைக் கோட்டுக்கு. ஆரம்ப ஓவர்களில் அதிரடி காட்டியது. பின்னர் சுழல் பந்துக்கு அடக்கி வாசித்தனர். இருந்தும் சந்தர்ப்பம் கிடைக்கையில் அதிரடி காட்டத் தவறவில்லை.

இறுதி ஆட்டங்களில் தவறவிட்ட அதிரடிகளை காட்டி முடித்தனர் இந்த ஆட்டத்தில். பிடிகள் சிலது தவறியது சிம்பாப்வே கைகளிலிருந்து, இது வாய்ப்பாகியது ஆரம்ப இணைப்புக்கு.

இவர்களின் இணைப்பு புதிய சாதனையையும் படைத்தது. இருவரும் முதலாவது விக்கெட்டுக்காகப் பகிர்ந்தனர் 282 ஓட்டங்கள். டில்ஷான் முதலில் கடந்தார் சதம். உலகக் கிண்ணத்தில் பெற்றார் முதல் சதம். தரங்க அவரைத் தொடர்ந்து கடந்தார் சதம். இருவரது சதமும் இலங்கையின் அத்திவாரத்தை உரப்பாக்கியது. எடுத்தனர் 'பட்டிங் பவர்பிளே'. வீணாகியது இவர்களின் இணைப்பாட்டம். 44 ஆவது ஓவரில் பிரிந்தது சாதனை ஜோடி.

மொப்வூ பந்தில் தரங்க வெளியேற்றம். 133 ஓட்டங்கள் 141 பந்துகளில் பெற்றுக் கொடுத்தார் அணிக்காக. ஆரம்ப இணைப்பு பிரிக்கப்பட்டதும் சரியத் தொடங்கியது இலங்கையின் விக்கெட்டுக்கள். மறுமுனையில் சிறப்பான ஆட்டம் வழங்கிய டில்ஷானும் வெளியேற்றம். ஆறு ஓட்டங்களால் அவரது 150 ஓட்டங்கள் இலக்கு தவறியது. அடித்தாட முற்பட்டதால் தொடர்ந்து சரிந்தது இலங்கையின் விக்கெட்டுக்கள்.

துடுப்பாட்ட வரிசையை மாற்றியது இலங்கை. மூன்றாவது ஆட்டக்காரராக களம் புகுந்தார் பெரேரா. புகுந்த வேகத்தில் வெளியேறினார். ஜெயவர்த்தன, மத்தியூஸ், சாமர சில்வா தொடர்ந்து வெளியேறியது இலங்கையின் துடுப்பாட்ட வரிசை. இறுதிக் கட்டத் தாக்குதலை அதிரடியாய் முடிக்க முனைந்ததால் ஏற்பட்டது இழப்பு இலங்கைக்கு.

சங்கக்காரா- சமரவீர இறுதிவரை அணியை சிறப்பாய் கொண்டு சென்றனர். முற்றுப்பெற்றது ஐம்பது ஓவர்கள். 327/6 ஓட்டங்கள். நிறைவுக்கு வந்தது இலங்கையின் ஆட்டம்.

சிம்பாப்வேயின் பந்துகள் சிறப்பாய் இல்லை. இருந்தும் இலங்கையின் இறுதிக் கட்டத்தாக்குதலில் இழப்புக்கள் ஏற்படுத்தினார் மொப்வூ. அதில் அவர் கைப்பற்றியது நான்கு விக்கெட்டுக்கள்.

எட்ட முடியாத இலக்கு நிர்ணயித்தது இலங்கை. இதனால் அசண்டையீனமாக இருந்தது இலங்கை. சிம்பாப்வே ஆட்டத்தை ஆரம்பிக்க ரெயிலர்-சக்பாவா இறங்கினர் களத்தில். இருவரும் அடித்து ஆடினர் இலங்கையின் பந்து வீச்சை. திணறியது இலங்கை. முன்னணி வீரர்கள் எவரது பந்தும் தப்பவில்லை அவர்களது அடியிலிருந்து. ரெயிலர் அதிரடியான ஆட்டம். மறுமுனையில் சக்பாவா நிதான ஆட்டம். இலங்கைக்கு எதிராய் நின்றது இயற்கை. கடும் பனிப் பொழிவு குழப்பியது இலங்கையின் களத் தடுப்பை. இதனால் தடு மாறியது இலங்கை களத்தடுப்பில். இவை யெல்லாம் சாதகமாகியது சிம்பாப்வே துடுப்பாட்டத்துக்கு. இலங்கைக்கு இணையாய் இருந் தது சிம்பாப்வே ஆரம்ப துடுப்பாட்டம். சதம் கடந்தது அவர்க ளின் இணைப்பு. அரைச்சதம் அதிரடியாய் கடந்தார் ரெயிலர். முரளியின் சுழலில் சிம்பாப்வேயின் பிரிவு ஆரம் பம். 116 ஓட்டங்களில் இழந்தது முதலாவது விக்கெட்டை. சக்பாவா வெளியேற்றம். தைபு உள்நுழைந்தார். நீடிக்கவிடவில்லை சிம்பாப்வே ஆட்டத்தை. மத்தியூஸ் காட்டினார் கைவரிசை. தைபு பிடியை மத்தியூஸ் பந்தில் எடுத் தார் சங்கக்காரா. அது அபாரமான பிடியெடுப்பு. மீண்டும் மத்தியூஸ் கலக்கல். அதிரடியாய் ஆடிய ரெயிலர் வெளியேறினார் 80 ஓட்டங்களுடன்.



பந்து வீச்சிலும் கலக்கினார் டில்ஷான். மத்திய வரிசையை கலங்கடித்து பறித்தெடுத்தார் சிம்பாப்வே விக்கெட்டுக் களை. இவரும் ஹட்றிக் சாதனையை நெருங்கினார். இருந்தும் தவறியது ஜெயவர்த்தனவால். பின்வரிசை விக்கெட்டுக்கள் சரிந்தது இலகு வாய்.

188 ஓட்டங்களுடன் முடிந்தது சிம்பாப்வே இன்னிங்ஸ். டில்ஷானின் பந்து வீச்சில் சரிந்தது நான்கு விக்கெட்டுக்கள். அதற்காய் அவர் கொடுத்தது நான்கு ஓட்டங்கள்.

சிம்பாப்வேயை சிதறடித்த டில்ஷான் ஆட்ட நாயகன்.

## அணிகளின் நிலைகள்

| பிரிவு A | M | W | L | T | N/R | Pt | Net/R |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை | 5 | 3 | 1 | 0 | 1 | 7 | +2.705 |
| நியூஸிலாந்து | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +1.848 |
| பாகிஸ்தான் | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | +0.760 |
| ஆஸ்திரேலியா | 3 | 2 | 0 | 0 | 1 | 5 | +1.813 |
| சிம்பாப்வே | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -0.690 |
| கனடா | 4 | 1 | 3 | 0 | 0 | 0 | -2.083 |
| கென்யா | 4 | 0 | 4 | 0 | 0 | 0 | -3.403 |

| பிரிவு B | M | W | L | T | N/R | Pt | Net/R |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 4 | 3 | 0 | 1 | 0 | 7 | +0.992 |
| இங்கிலாந்து | 4 | 2 | 1 | 1 | 0 | 5 | +0.054 |
| தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +1.754 |
| பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -1.764 |
| நெதர்லாந்து | 4 | 0 | 4 | 0 | 0 | 0 | -2.728 |
| அயர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.296 |
| மே.தீவுகள் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +2.677 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றைய சுவாரஸ்யங்கள்

- ★ முதலாவது விக்கெட்டுக்காக உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களைப் பகிர்ந்தது டில்ஷான்-தரங்க ஜோடி. முன்னைய சாதனையாக இருந்த பாகிஸ்தானால் ஏற்படுத்தப்பட்டிருந்த 194 ஓட்டங்கள் என்ற இணைப்பினை முறியடித்து புதிய சாதனையாக 282 ஓட்டங்கள் பகிரப்பட்டுள்ளன. அத்துடன் எந்தவொரு விக்கெட் இணைப்புக்காகவும் பெறப்பட்ட இரண்டாவது அதிகூடிய இணைப்பு இது.
- ★ முரளி இலங்கை மண்ணில் 150 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். அவர் மொத்தமாக 526 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார்.
- ★ மலிங்கவின் வேகத்தில் சிம்பாப்வே வீரர் ரெயிலரின் துடுப்பு முறிந்தது.

## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண இருபத்தைந்தாவது ஆட்டம்

ஆட்டம்: இலங்கை Vs சிம்பாப்வே நாணயச் சுழற்சி: சிம்பாப்வே
முடிவு: 139 ஓட்டங்களால் இலங்கை வெற்றி ஆட்டநாயகன்: டில்ஷான்

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| தரங்க | c சிக்கம்புரா b மொப்வூ | 133 | 141 | 17 | 0 |
| டில்ஷான் | c பனியங்கரா b உர்ஷேயா | 144 | 131 | 16 | 1 |
| பெரேரா | c சிக்கம்புரா b பிரிஸ் | 03 | 05 | 0 | 0 |
| ஜெயவர்த்தன | c சக்பாவா b மொப்வூ | 09 | 07 | 1 | 0 |
| சங்கக்காரா | ஆட்டமிழக்கவில்லை | 11 | 07 | 1 | 0 |
| மத்தியூஸ் | c சிக்கம்புரா b மொப்வூ | 00 | 01 | 0 | 0 |
| சில்வா | c பனியங்கரா b மொப்வூ | 04 | 02 | 1 | 0 |
| சமரவீர | ஆட்டமிழக்கவில்லை | 08 | 07 | 1 | 0 |
| குலசேகர | துடுப்பெடுத்தாவில்லை | | | | |
| மலிங்க | துடுப்பெடுத்தாவில்லை | | | | |
| முரளிதரன் | துடுப்பெடுத்தாவில்லை | | | | |
| உதிரிகள் | (b 2, lb 3, w 9, nb 1) | 15 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மொப்வூ | 7 | 62 | 4 | 0 |
| பனியங்கரா | 6 | 51 | 0 | 0 |
| பிரிஸ் | 9 | 46 | 1 | 1 |
| சிக்கம்புரா | 3 | 20 | 0 | 0 |
| உர்ஷேயா | 10 | 50 | 1 | 0 |
| கிரீமர் | 7 | 42 | 0 | 0 |
| லாம்ப் | 8 | 51 | 0 | 0 |

TOTAL - 327/6 (50)
1-82(தரங்க), 2-289 (டில்ஷான்), 3-296 (பெரேரா), 4-300 (ஜெயவர்த்தன), 5-302 (மத்தியூஸ்),6-308 (சில்வா).


சிம்பாப்வே

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ரெயிலர் | c ஜெயவர்த்தன b மத்தியூஸ் | 80 | 72 | 4 | 1 |
| சக்பாவா | b முரளிதரன் | 35 | 61 | 3 | 0 |
| தைபு | c சங்கக்கார b டில்ஷான் | 04 | 06 | 0 | 0 |
| உர்ஷேயா | c சங்கக்கார c டில்ஷான் | 16 | 15 | 2 | 0 |
| எர்வின் | lbw b டில்ஷான் | 17 | 21 | 2 | 0 |
| சிக்கம்புரா | c பெரேரா b முரளிதரன் | 06 | 11 | 0 | 0 |
| லாம்ப் | c ஜெயவர்த்தன b டில்ஷான் | 00 | 01 | 0 | 0 |
| கிரீமர் | ஆட்டமிழப்பில்லை | 14 | 27 | 1 | 0 |
| பிறிஸ் | c சமரவீர b பெரேரா | 11 | 15 | 2 | 0 |
| பனியங்கரா | lbw b டில்ஷான் | 00 | 04 | 0 | 0 |
| மொப்வூ | b முரளிதரன் | 01 | 05 | 0 | 0 |
| உதிரிகள் | (b2, lb 2, w 12) | 16 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மலிங்க | 08 | 51 | 0 | 0 |
| குலசேகர | 08 | 33 | 0 | 0 |
| பெரேரா | 06 | 33 | 1 | 0 |
| முரளிதரன் | 09 | 34 | 3 | 0 |
| மத்தியூஸ் | 05 | 29 | 2 | 0 |
| டில்ஷான் | 03 | 04 | 4 | 1 |

TOTAL - 188/10 (39)
1-116 (சக்பாவா), 2-125 (தைபு), 3-132 (ரெயிலர்), 4-150 (உர்ஷேயா), 5-156 (எர்வின்), 6-156 (லாம்ப்), 7-165 (சிக்கம்புரா), 8-185 (பிறிஸ்), 9-185(பனியங்கரா), 10-188(மொப்வூ)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்




# அயர்லாந்து காலிறுதிக்கு தகுதி பெறுமா?

- அருண்மொழி -

அயர்லாந்து அணிக்கும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கும் இடையில் மொஹாலியில் இன்று இடம் பெறும் ஆட்டம் இரு அணிகளுக்குமே முக்கியமானதொரு ஆட்டமாகும். இன்றைய ஆட்டத்தில் அயர்லாந்து அணி வெற்றிபெறும் பட்சத்தில் அந்த அணியின் காலிறுதி வாய்ப்பு ஓரளவு உறுதியாகிவிடும். தோல்வியடைந்தால் சிக்கலுக்குரியதாக மாற்றமடைந்து விடும்.

குழு 'பி'யில் இடம்பெற்றுள்ள அயர்லாந்து அணி இதுவரை மூன்று ஆட்டங்களில் மோதியுள்ளது. அதில் இங்கிலாந்துடனான ஒரு ஆட்டத்தில் மாத்திரமே வெற்றி பெற்றுள்ளது. பங்களாதேஷ், இந்திய அணிகளுடனான ஆட்டத்தில் தோல்வியடைந்தது. இதனால் புள்ளிப் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் உள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகளே அடுத்த காலிறுதிச் சுற்றுக்குத் தெரிவாகும் என்பதால் அயர்லாந்து அணி இன்றைய ஆட்டத்தில் கட்டாயம் வெற்றிபெற வேண்டியுள்ளது.

குழு'ஏ'யில் காலிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள் ஓரளவு உறுதியாகத் தெரிந்துவிட்டன. ஆனால் குழு'பி'யில் மூன்று அணிகள் தெரிவாவது உறுதியாகிவிட்டது. மற்றைய அந்த ஒரு இடத்துக்காக மூன்று அணிகள் போட்டியிட்டுக் கொள்கின்றன. அந்த போட்டியிட்டுக் கொள்ளும் மூன்று அணிகளில் அயர்லாந்தும், மேற்கிந்தியத்தீவுகளும் உள்ளடங்குகின்றன. எனவே இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற்றுக் கொள்ளும் அணி தனது காலிறுதி வாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளும்.

அயர்லாந்து அணியினைப் பொறுத்தவரையில் இந்திய அணியுடனான ஆட்டத்தில் இந்திய மண்ணில் வைத்துப் போராடித் தோல்வியடைந்தது. இந்தியாவுடனான இறுதி ஆட்டத்தில் அயர்லாந்தின் பந்து வீச்சையும், களத்தடுப்பையும் பாராட்டாமல் இருக்கவே முடியாது. ஏன் இந்திய அணித் தலைவர் டோனி கூடப் பாராட்டியுள்ளார். அந்த அணியின் துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரையில், இதுவரை காலமும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கி ஏமாற்றத்தை கொடுத்து வந்த அயர்லாந்து அணியின் தலைவர் பீர்ரர் போர்ட்டர் பீல்ட் இந்திய அணியுடனான ஆட்டத்தில் அரைச் சதம் கடந்து தனது துடுப்பாட்ட திறனினை நிரூபித்துள்ளார். இருப்பினும் இங்கிலாந்து அணியுடன் அதிரடியாகச் சதம் கடந்து வெற்றிக்கு வித்திட்ட கெவின் ஓ பிரெய்ன், இந்தியாவுடனான ஆட்டத்தில் ஏமாற்றிவிட்டார். ஆனால் அயர்லாந்து அணியின் கடுமையான போராட்டம் இன்றும் தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் துடுப்பாட்டம் அயர்லாந்து அணியின் பந்து வீச்சை சமாளிக்கக் கூடிய நிலையில் இருக்கின்றதா என்பது கேள்விக் குறியே? துடுப்பாட்டத்தில் டரன் பிராவோ தவிர ஏனையவர்கள் சிறப்பான நிலையில் இல்லை. மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாகப் பந்து வீச்சில் ரோச் சிறப்பாக வீசி வருகின்றார். அவரது பந்து வீச்சுக்கு இணையாக சுழல் பந்து வீச்சாளர் பென் வீசி வருவதும் தான் அந்த அணியின் பெரும் பலமே.

இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்தில் இரு அணிகளும் களமிறங்குவதால் ஆட்டம் சுவாரஸ்யமாகவே இருக்கும்.

இறுதிப் போட்டிக்கான சிறப்பு பரிசு
EUROSTAR
Live your Life
CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE




மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?
..........................................................
போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?
..........................................................

பெயர் : ..........................................
தே.அ.இல. : ......................................
முகவரி : .........................................
..........................................

போட்டி முடிவுத் திகதி
25.03.2011

| அதிகூடிய ஓட்டங்கள் | M | R | 50S | 100S | H.S | Avg. |
|---|---|---|---|---|---|---|
| டில்சான் (இலங்கை) | 05 | 283 | 01 | 01 | 144 | 56.60 |
| ஸ்ரோரஸ்(இங்கிலாந்து) | 04 | 280 | 01 | 01 | 158 | 70.00 |
| ஏ.பி.டீ வில்லியர்ஸ்(தெ.ஆபிரிக்கா) | 03 | 266 | 00 | 02 | 134 | 133.00 |

| அதிகூடிய விக்கெட்டுக்கள் | M | W | Best |
|---|---|---|---|
| அப்ரிடி (பாகிஸ்தான்) | 04 | 15 | 05/16 |
| இம்ரான் தகீர்(தெ.ஆபிரிக்கா) | 03 | 11 | 04/38 |
| சகீர்கான் (இந்தியா) | 04 | 11 | 03/20 |




# பழி தீர்க்குமா பங்களாதேஷ்




- டிலிப் -

பங்களாதேஷ் அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் சிட்டக்கொங்கில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்று தனது அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை அதிகரித்துக் கொள்ளுமா என்பதே தற்போதைய கேள்வி?

உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்பதாக பங்களாதேஷ் அணி மிகச்சிறப்பான அதுவும் உலகக் கிண்ணத்தை நடத்துவதனால் இறுதிப் போட்டி வரை முன்னேறும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. இந்திய அணியுடனான முதலாவது ஆட்டத்தில் தோல்வியடைந்திருந்தாலும் அந்த அணியின் துடுப்பாட்டம் பலராலும் மெச்சப்பட்டதொன்றாகவே இருந்தது.

அதனைத் தொடர்ந்து அயர்லாந்து அணியுடனான ஆட்டத்தில் போராடி வெற்றிபெற்றது பங்களாதேஷ். அப்போதே சுதகாரித்துக் கொண்டிருக்க வேண்டும் அந்த அணி. மேற்கிந்தியத்தீவுகளுடனான ஆட்டத்தில் அந்த அணி மிகமோசமாக தோல்வியடைந்தது. அயர்லாந்துடனான ஆட்டத்தில் விட்ட தவறுகளை திருத்தியிருக்குமானால் மேற்கிந்தியத்தீவுகளுடனான ஆட்டத்தில் இவ்வாறு மிக மோசமாகத் தோல்வியடைந்திருக்கத் தேவையில்லை.

அவ்வாறு தோல்வியடைந்ததனால் அந்த நாட்டு ரசிகர்களின் எதிர்ப்பை வீணே சம்பாதிக்க நேர்ந்தது. இதனால் மேற்கிந்தியத்தீவுகள் அணியினரின் பஸ் தாக்குதலுக்கு இலக்கானதும் குறிப்பிடத்தக்கது. அந்த அணியின் திறமை மீது எவ்வளவு தூரம் ரசிகர்கள் நம்பிக்கை வைத்திருந்ததால் இவ்வாறானதொரு செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பார்கள் என்பதனை ஊகித்துக்கொள்ளுங்கள். இந்த நம்பிக்கையினை பங்களாதேஷ் அணி தக்க வைத்துக் கொள்ளுமா என்பதே கேள்வி.

அந்த அணியைப் பொறுத்தவரையில் துடுப்பாட்டத்தில் ஒருவரை மட்டும் நம்பியிருக்கின்ற நிலைக்கு மீண்டும் தள்ளப்பட்டுள்ளது. ரமிம் இக்பால், யுனைட் சித்திக், சகிப் அல் ஹசன் ஆகியோரை மட்டுமே அந்த அணியின் துடுப்பாட்டத் தூண்கள் என்று சொல்ல முடியும். இவர்கள் துடுப்பாட்டத்தில் ஏதாவது சாதித்துக் காட்டினால் மாத்திரமே பங்களாதேஷ் அணியினால் சிறந்ததொரு இலக்கை எட்ட முடியும்.

பந்து வீச்சு பரவாயில்லாத நிலையிலேயே காணப்படுகின்றது. களத்தடுப்பிலும் அந்த அணி சிறப்பாகவே செயற்பட்டு வருகின்றது. தற்போதைய நிலையில் அந்த அணி தனது துடுப்பாட்ட வரிசையினை சீர் செய்யுமாயின் இங்கிலாந்து அணிக்கு சவால் விடுக்க முடியும்.

மறுபுறம் இங்கிலாந்து அணியோ எல்லா ஆட்டங்களிலும் 'திரில்' வெற்றி பெறுவதையே விரும்புகின்றது போலிருக்கின்றது. அந்த அணி தான் இதுவரை விளையாடிய அனைத்து ஆட்டங்களிலும் திரில் வெற்றியே பெற்றிருக்கின்றது.

அந்த அணிக்கு துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு இரண்டிலும் பெரியதொரு இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. கெவின் பீற்றர்சன், புரோட் ஆகியோர் நாடு திரும்பியிருப்பது அணிக்கு மிகப்பெரும் பின்னடைவான விடயமே. இவற்றைவிட, ஒரு ஆட்டத்தில் அசத்தும் துடுப்பாட்ட வரிசை மற்றைய ஆட்டத்தில் அப்படியே அடங்கிவிடுகின்றது. பந்து வீச்சும் அதே நிலைமைதான்.

பங்களாதேஷ் அணி மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான ஆட்டத்தில் தோற்றதற்குப் பழி தீர்க்கக் காத்திருக்கின்றது. எனவே இங்கிலாந்து அணி அவற்றைச் சமாளித்து வெற்றி பெறுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ண வேட்டையில் இலங்கை 2011



1975 இல் ஆரம்பிக்கப்பட்ட உலகக்கிண்ணம் தற்பொழுது 2011இல் காலடி எடுத்து வைத்துள்ளது. இத்தகைய போட்டிகளில் 1975, 1979களில் கரிபியன் தீவுகளின் ஆட்டமும் திருமிரும் ஏற்பட்டது. அடுத்து மூன்றாவது உலகக்கிண்ணமானது 1983இல் இந்தியா கிண்ணத்தைக் கைப்பற்றியது. 1987ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவும் 1992 ஆம் ஆண்டு பாகிஸ்தானும் 1996 இல் இலங்கை அணியும் 1999, 2003, 2007 திமிர் பிடித்த ஆஸ்திரேலியா 3 உலகக் கிண்ணத்தை கைப்பற்றி ஹட்ரிக் சாதனையைப் படைத்துக் கொண்டது.

6ஆவது உலக்கிண்ணத்தை கைப்பற்றிய இலங்கை அணியானது உலகையே இலங்கை பக்கம் திரும்பிப் பார்க்க விட்டுவிட்டது. இலங்கையை உலகு திரும்பிப் பார்ப்பது என்றால் இரண்டே இரண்டு காரணங்கள் உள்ளன. அவையாவன கிரிக்கெட், யுத்தம் ஆகிய இரண்டாலும் பார்க்க வைக்கின்றது.

இலங்கை அணியானது அர்ஜுன ரணதுங்கவின் கையில் உள்ளபோது இலங்கை அணி சம்பியனாகியது. இலங்கை அணி சம்பியனாவதற்குத் தீவிரவாதிகள் வைத்த குண்டில் 1000 பேர் வரை உயிரிழந்தனர். இதனால் இரண்டு மூன்று அணிகள் இலங்கையில் வந்து விளையாடப் பயப்பட்டமைால் இலங்கைக்கு 'வின்' என்று கொடுக்கப்பட்டது.

லாகூரில் மார்ச் மாதம் 17ஆம் திகதி நடைபெற்ற இந்தப் போட்டியில் நடுவர் சுண்டினார் நாணயத்தை. வென்றது இலங்கை அணி. ஆஸியைத் துடுப்பெடுத்தாடச் சொன்னார் ரணதுங்கா. ஆஸியின் விக்கெட்டுக்கள் சரிந்து கொண்டே சென்றன. இதன்படி ரெய்லர் அரைச்சதத்தை பூர்த்தி செய்து ஆறுதலாளித்தார். பொண்டிங் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அரவிந்த டி சில்வா மூன்று விக்கெட்டுக்களையும் வாஸ், ஜெயசூரியா, முரளி ஆகியோர் விக்கெட்டைக் கைப்பற்றினார்கள். ஆனாலும் இங்கை அதிரடி மன்னனான ஜெயசூரிய 9 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆகினார். குருசிங்க அரைச்சதம் கடந்து பவிலியன் திரும்பினார். அரவிந்த டி சில்வாவுடன் இணைந்தார் ரணதுங்க. சதமடித்து அசத்தினார் அரவிந்த டீ சில்வா. கிண்ணத்தை ரணதுங்காவினதும் அரவிந்த டீ.சில்வாவின் அசத்தலாலும் ருசித்துக் கொண்டனர். ஆட்ட நாயகனாக அரவிந்த டி சில்வா தெரிவானார். பந்து வீச் சில் பிளமிங், ரீபல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்கள். இன்றைய இலங்கை அணியானது அனுபவ வீரர்களுடன் பலபல வெற்றிகளைப் பெற்று வருகின்றது.

இதனை எடுத்து நோக்கும் போது 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று இந்திய அணியை திணறடித்துள்ளது.

இந்தியாவானது எல்லா நாடுகளுடனும் வென்றாலும் இலங்கை அணியுடன் தோற்ற பல சந்தர்ப்பம் உள்ளது. இப்போட்டியில் இந்திய அணியைத் திணற வைத்து மஹ்ரூப் சாதனை படைத்தார். இப்போட்டியில் ஆட்டநாயகனாக வந்ததுடன் 10 ஓவர் பந்து வீசி 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் 42 ஓட்டங்களைக் கொடுத்து அசத்தினார். இதன் மூலம் இலங்கை அணி உலக்கிண்ணத்தைக் கைப்பற்றும் என்று நம்பிக்கையுடன் உறுதியாக வெல்லும் எனக்கூறலாம். எங்கள் நாட்டின் கிண்ணம் எங்கள் கிண்ணமாகும். தொடர் நாயகனாக இலங்கையர் ஒருவரே வரவேண்டும் என நம்புகிறேன்.

ச.குகேஸ்,

*மீசாலை, ஐயா கடை.*

உலகக் கிண்ண வாசகர் களம்

# தாய்மண்ணில் விளையாட முடியாது



உலகக் கிண்ணப் போட்டி 2011 அட்டவணை தொடர்பில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க கண்டனம் வெளியிட்டுள்ளார்.

மேலும் 'நொக் - அவுட்' போட்டிகள் இந்தியா மற்றும் பங்களாதேஷில் நடைபெறவுள்ளதால் இலங்கையணியினர் அவர்களது நொக் - அவுட் போட்டியின் போது தமது தாய் நாட்டின் ஆதரவினை பெற்றுக்கொள்ள வாய்ப்பற்றுப்போவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போட்டி விதிமுறைப்படி இந்தியா, பங்களாதேஷ் மற்றும் இலங்கையில் உலகக் கிண்ண போட்டி நடத்தபடும் போது குறித்த நாடுகள் 'நொக் - அவுட்' போட்டிகளுக்கு தெரிவாகும் போது அப்போட்டி அவர்களது தாய் நாட்டில் நடைபெற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இலங்கையை விடுத்து ஏனைய இரு நாடுகளுக்கும் அந்த வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை இந்தியா எதைக் கேட்டாலும் அதற்கேற்ப ஐ.சி.சி சாய்ந்து விடுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்நிலையில் அரையிறுதிப் போட்டி இலங்கை மற்றும் இந்தியா அணிகளுக்கிடையில் நடைபெறுமாக இருந்தால் ஏன் அது கொழும்பில் நடைபெறக்கூடாது என அவர் கேள்வி எழுப்பயுள்ளார்.

அத்துடன், இலங்கை அணியினரின் போட்டியினை காண மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதாகவும் ஐ.சி.சியின் போட்டி அட்டவணைக்கு இலங்கை கிரிக்கெட் எதிர்ப்பினை தெரிவிக்காமை கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

# அக்மல் மீது பாய்ச்சல்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பர் கம்ரான் அக்மல் மீது பாகிஸ்தான் ஊடகங்களும், ரசிகர்களும் கடும் கோபம் அடைந்துள்ளனர். அவருடைய வீட்டின் மீது தாக்குதல் நடத்தக் கோரி நாடு முழுவதும் உள்ள ரசிகர்கள் எஸ்.எம். எஸ். அனுப்பி வருகின்றனர். அக்மலின் முகவரியையும் அனுப்பியுள்ளனர்.

இலங்கையின் பள்ளேகலவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் 110 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

நியூஸிலாந்தின் ரோஸ் டெய்லர் கொடுத்த இரண்டு பிடிகளை கோட்டை விட்டார் பாகிஸ்தானின் கம்ரான் அக்மல். இந்த வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட டெய்லர் அதிரடியாக விளையாடி ஆட்டமிழக்காமல் 131 ரன்கள் குவித்தார்.

இதனால் ஆத்திரமடைந்த பாகிஸ்தான் ரசிகர்கள் தங்களின் கோபத்தை சமூக வலைதளங்களான பேஸ்புக், டுவிட்டர் மற்றும் எஸ்.எம்.எஸ். மூலமாக தெரிவித்து வருகின்றனர். பாகிஸ்தானில் உள்ள தொலைக்காட்சிகளிலும், ரேடியோக்களிலும், அக்மலை அவமானப்படுத்தும் வகையில் நகைச்சுவை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கம்ரனை உதைக்க வேண்டும் என்று சில ரசிர்கள் டுவிட்டர் பக்கத்தில் எழுதியுள்ளனர். டுபாயில் வீரர்களுடன் இருந்தபோது, மிரட்டல் வந்ததாகக் கூறித் தப்பியோடி, இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்துள்ள முன்னாள் விக்கெட் கீப்பர் ஜுல்ஹெர்னின் ஹெய்தர் போன்று கம்ரான் இலங்கையில் தஞ்சம் புகுவாரா என்றும் கேள்வியெழுப்பயுள்ளனர்.

ரோஸ் டெய்லருக்கு உலகின் மிகச்சிறந்த பிறந்தநாள் பரிசை வழங்கிவிட்டார் கம்ரான் என்று ஒரு ரசிகர் தெரிவித்துள்ளார். கனடா, இலங்கை அணிகளுக்கு எதிரான ஆட்டத்திலும் அக்மல் நல்ல வாய்ப்புகளை எல்லாம் கோட்டைவிட்டது குறிப்பிடத்தக்கது.

## பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

ரூபன் பல்பொருள்
அளவெட்டி.

இணுவில் பத்திரிகை
முகவர்
இணுவில்.

இந்திரா பல்பொருள்
வாணிபம்
வேலணை.

அம்பாள் பல்பொருள் வாணிபம்
புங்குடுதீவு.

கந்தசாமி கடை
காரைநகர்.

சிறிமுருகன் களஞ்சியம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

மலர் கடை
இளவாலை.

நகுலேந்திரன் பல்பொருள்
வாணிபம்.
முழங்காவில்.

அன்பரசன் புத்தகசாலை
ஒட்டுசுட்டான்.

மதுரா ரெயிலர் கடை
நாச்சிக்குடாச் சந்தி
முன்பாக, நாச்சிக்குடா.

உதயன் அலுவலகம்
கரடிப்போக்குச் சந்தி.

சூரியா பார்மஸி.
அச்சுவேலி.

கிருபா போட்டோ
மல்லாகம்.

பருத்தித்துறையில்
[illegible]
கவிதா ரேடர்ஸ்

நெல்லியடியில்
மொடோன் ஸ்ரோர்ஸ்
ராஜலக்சுமி புத்தகசாலை
சதா பொன்ஸ்

மந்திகையில்
நாவலர் புத்தகசாலை


உடுப்பிட்டியில்
ரஜினி பீடா

வல்வெட்டித்துறையில்
கலைச்சோலை பான்சி கவுஸ்

தென்மராட்சியில்
அருள்நாயகி புத்தகசாலை
மணியம் ஸ்ரோர்ஸ்
ஸ்ரீ கருணா மல்ரி சொப்
கஜனன் மல்ரி சேர்விஸ் சென்ரர்
அல்லாரை ஆர்.டி.
உதயன் காரியாலயம்
சிறீராம் மல்ரி சென்ரர்

கிளிநொச்சியில்
பிள்ளையார் புத்தகசாலை
அறிவுமதி புத்தகசாலை
சோமசுந்தரம் மல்ரி சென்ரர்
புவனேஸ்வரி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எனக்குத் தெரியாத ஆட்டமில்லை:** ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்துவீச்சாளர் பிரெட் லீ பயிற்சியின்போது றக்பி விளையாடுகிறார்.

## இன்றைய ஆட்டங்கள்

**மொஹாலி மு.ப. 9.30**

அயர்லாந்து - மே.தீவுகள்



**சிட்டகொங் பி.ப. 2.30**

இங்கிலாந்து - பங்களாதேஷ்



**அடுத்த வர்ணப் படத்தில் அதிரடி நாயகன் சேவாக். எப்போது வரும்? இணைந்திருங்கள் உதயனுடன்...**



# இந்தியாவின் ஆட்டம் எங்கே போகின்றது?



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்றுவரை 25 ஆட்டங்கள் நடந்து முடிந்துள்ளன.

ஆரம்பத்தில் சில ஆட்டங்களில் துடுப்பாட்ட வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினாலும், மெல்ல மெல்ல பந்து வீச்சாளர்களும் தங்களது திறமையை நிரூபித்து வருகின்றனர்.

இந்திய ஆடுகளங்கள் சுழற் பந்துவீச்சுக்குச் சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 315 ஆட்டங்களில் விளையாடி 306 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ள பாகிஸ்தான் வீரர் அப்பிரிடி (4 ஆட்டங்களில் 15 விக்கெட்டுகள்), உலகக் கிண்ணத்தில் தான்முதல்முறையாக களம் கண்ட தென்னாபிரிக்க வீரர் இம்ரான் தஹிர் (3 ஆட்டம், 11 விக்கெட்டுகள்) ஆகியோர் பந்துவீச்சுப் பட்டியலில் முதலிரண்டு இடத்தைப் பிடித்துள்ளனர்.

ஒரு காலத்தில் சுழல்பந்து வீச்சு என்றாலே இந்தியாதான் என்ற நிலை இருந்தது. உலகப் புகழ்பெற்ற சுழற் பந்துவீச்சாளர்கள் இந்திய அணியில் இடம் பெற்றிருந்தனர்.

இந்திய அணிக்குப் புகழ் பெற்ற பல வெற்றிகளை அவர்களே பெற்றுக்கொடுத்துள்ளனர். அப்படிப்பட்ட பாரம்பரியத்தில் வந்த இந்திய அணி, சுழற் பந்துவீச்சாளர்கள் பற்றாக்குறையால் இப்போதுதிணறி வருகிறது.

ஹர்பஜன் அளவுக்கு புகழ் பெறாத மேற்கிந்தியத் தீவுகளின் சுலைமன் பென் (3 ஆட்டம், 8 விக்கெட்டுகள்), இங்கிலாந்தின் ஸ்வான் (4 ஆட்டம், 7 விக்கெட்டுகள்), கனடாவின் பாலாஜி (4 ஆட்டம், 7 விக்கெட்டுகள்), தென்னாபிரிக்காவின் ரொபின் பீட்டர்சன் (3ஆட்டம், 5விக்கெட்டுக்கள்), அயர்லாந்தின் டாக்ரெல் (3 ஆட்டம், 5 விக்கெட்டுகள்), சிம்பாப்வேயின் ரேமண்ட் பிறைஸ் (3 ஆட்டம், 4 விக்கெட்டுக்கள்) ஆகியோர் கூட இந்தப் உலகக் கோப்பைப் போட்டியில் ஓரளவு முத் திரை பதித்துள்ளனர் என்றே சொல்லலாம்.

ஆனால், 2001இல் ஆஸ்திரேலிய அணியை கதிகலங்க வைத்தவரும், 93 டெஸ்ட் போட்டிகளில் 393 விக்கெட்டுக்களையும், 220 ஒரு நாள் ஆட்டங்களில் 248 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளவருமான ஹர்பஜன் சிங், இந்த உலகக் கிண்ணத்தில் இதுவரை 3 ஆட்டங்களில் 2 விக்கெட்டுக்கள் மாத்திரமே வீழ்த்தியுள்ளார்.

அதுவும் அயர்லாந்துக்கு எதிராக அவரால் 9 ஓவர்கள் வீசியும் விக்கெட் எதனையும் வீழ்த்த முடியவில்லை பங்களாதேஷுக்கு எதிராக ஒரே ஒரு விக்கெட் வீழ்த்தினார்.

மற்றொரு சுழற் பந்துவீச்சாளரான பியூஷ் சாவ்லா அயர்லாந்து (0-56), இங்கிலாந்துக்கு (2-71) எதிராக மிகவும் மோசமாகப் பந்துவீசினார் என்றே கூறலாம். கத்துக்குட்டி நெதர்லாந்துக்கு எதிராக இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரமே வீழ்த்தியுள்ளார். 2008 ஜூலையில் பாகிஸ்தானுடனான ஆட்டத்துக்குப் பின்னர் சுமார் இரண்டரை ஆண்டுகளில் கடந்த ஜனவரியில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக ஒரே ஒரு ஆட்டத்தில் சாவ்லா பங்கேற்றுள்ளார்.

அவர் உலகக் கிண்ண போட்டிக்குத் தெரிவானபோதே பலர் தங்கள் வியப்பை வெளிப்படுத்தினர்.

பகுதி நேர சுழற் பந்துவீச்சாளரான யுவராஜ் சிங் யாருமே எதிர்பார்க்காத வகையில் விக்கெட்டுகளை வீழ்த்தி வருகிறார்.

சஹீர்கான் தவிர மற்ற வேகப் பந்துவீச்சாளர்களும் எதிர்பார்த்த அளவு பிரகாசிக்காத நிலையில், இந்திய அணி கிண்ணத்தை வெல்ல வேண்டுமானால், சுழல் பந்துவீச்சாளர்களையே நம்பி உள்ளது. (15)


**தினமொரு பரிசுப் போட்டி**

இந்தியா - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான நாளைய (12.03.2011) ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

........................................

பெயர் : ........................................

தே.அ.இல : ........................................

முகவரி : ........................................

........................................

இந்தக் கேள்விக்கான விடையை இந்தக் கூப்பனில் எழுதி நாளை (12.03.2011) பிற்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கவும்.

**cliCT** GATEWAY CENTRE JAFFNA **வழங்கும் 4½ லட்சம் ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்** 48 பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை

**கம்ப்யூட்டர் ருடே வழங்கும்**

தினமும் வெல்லும் ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான கம்ப்யூட்டர் ருடே இலவச சந்தா

**உதயன் வழங்கும்**

**வெல்லுங்கள் 1½ லட்சம் ரூபா பணப் பரிசு**

**1ஆம் பரிசு** எட்டமுடியாத லட்சங்கள் உங்களுக்காக

**மாபெரும் காலிறுதிப் போட்டி**

காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறும் அணிகள் எவை?

1. ........ 5. ........
2. ........ 6. ........
3. ........ 7. ........
4. ........ 8. ........

பெயர் : ........................................

தே.அ.இல. : ........................................

முகவரி : ........................................

........................................

போட்டி முடிவுத் திகதி 15.03.2011

**2ஆம் பரிசு 1 லட்சம் ரூபா பணப் பரிசு** உங்களுக்காகவே காத்திருக்கின்றன லட்சங்கள்.

**மாபெரும் இறுதிப் போட்டி**

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

........................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

........................................

பெயர் : ........................................

தே.அ.இல. : ........................................

முகவரி : ........................................

........................................

போட்டி முடிவுத் திகதி 25.03.2011

**மற்றும் உதயன் வழங்கும் தலா 10 ஆயிரம் வீதம் 5 பேருக்கு.**

பங்குபற்றுங்கள் போட்டிகளில் வென்றுகொள்ளுங்கள் பணப்பரிசில்களை

மாபெரும் இறுதிப் போட்டி 10 ஆறுதல் பரிசுகள்

**அள்ளுங்கள் ஆறுதல் பரிசில்களை**

**SINGER PLUS**
No.01 STANLY ROAD JAFFNA. வழங்கும் EGG BEATER

**SINGER**
HOSPITAL ROAD JAFFNA. வழங்கும் FAN

**SINGER PLUS**
CHUNNAKAM. வழங்கும் FAN

**SINGER PLUS**
NELLIYADEY. வழங்கும் FAN

**SINGER PLUS**
CHAVAKACHCHERI. வழங்கும் TOATER

**PC SOLUTION**
KASTHURIYAR ROAD JAFFNA. வழங்கும் COLOUR PRINTER

**PC POWER UNIT**
LUXAN PLAZA KASTHURIYAR ROAD. வழங்கும் Rs. 5000 GIFT VOUCHER

**BARANABAS**
247, Stanly Road, Jaffna. வழங்கும் SINSUNG DVD PLAYER

**சரவணா ரெக்ஸ்**
770, 772, கே.கே.எஸ் வீதி, குட்டாதெருச் சந்தி யாழ்ப்பாணம். Rs. 5000 GIFT VOUCHER

**கிருபா லேணர்ஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Rs. 5000 GIFT VOUCHER

**போட்டி விதிகள்**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அனைத்து முடி[illegible]படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் மூலையில் குறிப்பிட்[illegible] 361 [illegible] யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலச் சிந்தனை



## மனமாற்றம் பெற்று வாழ்வில் வழமடைவோம்

தவக்காலத்தின் ஆரம்ப நாளில் காலடி எடுத்து வைத்திருக்கும் நாம் ஒவ்வொரு வரும் எம்மையே கேட்கவேண்டிய கேள்வி என்ன? மனமாற்றம், அர்ப்பணிப்பு என்பதாகும்.

''உங்கள் மனப்பாங்கு புதிப்பிக்கப்படவேண்டும்'' (எபே. 4:23) என்பதனைப் போல் மனிதர்களாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்நாளில் அறிந்தும் அறியாமலும் செய்துகொண்ட பாவங்களுக்குப் பரிகாரம் தேடும் காலமாக இந்தத் தவக்காலம் எம்மை அழைத்து நிற்கின்றது.

யேசுச் கிறிஸ்து பட்ட துன்பங்களையும், ஊகித்துப் பார்க்கமுடியாத அவரின் மரணத்தையும் உள்ளத்தின் ஆழத்தில் இருத்தி எமது செயற்பாடுகளாலும், வார்த்தைகளாலும் எவரையும் துன்புறுத்தல் கூடாது என்பதை உணர்ந்து வாழ அழைக்கப்பட்டுள்ளோம்.

மேலும் ''நான் உங்களை அன்பு செய்வது போல் நீங்களும் ஒருவர் ஒருவரை அன்பு செய்யுங்கள்'' என்னும் வாசகத்துக்கு இணங்க உறவினர்கள், நண்பர்கள் அயல வர்களுக்கு ஏற்படும் துன்ப துயரங்களைக் கண்டு மகிழாது அவர்களுக்கு கரம் நீட்டி ஆறுதல் வழங்க முன்வருவோம்.

யார் என்ன மதம், சாதி, இனம் என்று வேற்றுமை காட்டாது யேசுக்கிறிஸ்து கூறியது போல் ஒருவருக்கு ஒருவர் அன்பு செய்யும் மனப்பாங்கை வளர்த்துப் பணிவன்புடன் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.

எனவே இந்தத் தவக் காலத்தில் துன்ப துயரங்களை நீக்கி ஒருவருக்கு ஒருவர் மன்னிப்புப்பெற்று மனம் மாறத்தயாரா?

சிநதிப்போம்....

கருணையின் கடலே இறைவா இந்தத் தவக்காலத்தில் நாம் ஒவ்வொருவரும் அகங்காரம், ஆணவம், பொறாமை, வஞ்சகம் போன்றவற்றை விடுத்து மன்னிப்பு, மனமாற்றம், அர்ப்பணிப்பு என்பவற்றை கடைப்பிடித்து வாழ வரமருளும்.

''மண்ணாக இருந்த நாம் மண்ணுக்குச் செல்லுமுன் இந்த உலகில் நற்காரியங்களைச் செய்ய உறுதிகூறுவோம்.

அபிநயா
கொழும்புத்துறை

# அச்சகம் மீது நடந்த குண்டு வீச்சில் ஒருவர் காயம், பொருள்கள் நாசம்

கொழும்பு,மார்ச்.11

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளையும் சேர்ந்த வேட்பாளர்களுக்காக சுவரொட்டி விளம்பரங்களை அச்சிட்டுக் கொண்டிருக்கும் அச்சகம் ஒன்றின் மீது நொச்சியாகமவில் பெற்ரோல் குண்டு வீசப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்றபோது நான்கு ஆள்கள் அச்சகத்தில் பணிகளில் ஈடுபட்டிருந்துள்ளார்கள். அச்சகத்திலிருந்து யந்திரங்கள்,கணினிகள் மற்றும் பெறுமதியான பொருள்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

அனுராதபுரம் தீயணைக்கும் படையினர் பொலிஸார் மற்றும் கிராமவாசிகளுடன் சேர்ந்து பெற்ரோல் குண்டினால் ஏற்பட்ட தீயை அணைத்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்தனர். சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார்.அவர் இப்போது அனுராதபுரம் மருத்துவமனையில் தேறிவருகிறார்.

நொச்சியாகம பகுதி பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஜயந்த கமகே இத் தகவல்களை வெளியிட்டார். (ப)

# மீள் குடியமர்ந்தவர்களின் அடிப்படைத் தேவை; அரச அதிபரிடம் பிரதேச செயலர் அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்11

வலி.வடக்கில் மீள்குடியமர்ந்த மக்களின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பல்வேறு திட்டங்களை வலி.வடக்குப் பிரதேச செயலர் யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் கையளித்துள்ளார்.

அரை நிரந்தர வீடுகள் 566, மலசல கூடங்கள் 550, புனரமைக்கப்படவுள்ள வீடுகள் 447 எனப் பல்வேறு தரவுகள் உள்ளடங்கியதான திட்டங்கள் அதில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வலி.வடக்கில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் வித்தகபுரம், இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு ஆகிய பிரதேசங்களில் மக்கள் மீள் குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மக்களின் அடிப்படை வசதிகள் எதுவும் இதுவரை பூர்த்தியாக்கப்படவில்லை.

இத்தகைய நிலையைக் கருத்திற்கொண்டு வலி.வடக்குப் பிரதேச செயலர் அங்கு மேற்கொள்ள வேண்டிய அவசர, அவசிய அபிவிருத்திப் பணிகள் குறித்த திட்டங்களை அரச அதிபரிடம் கையளித்துள்ளார்.

இதனைக் கையேற்றுள்ள அரச அதிபர் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு திட்டங்களை அனுப்பியுள்ளார். இன்னும் சில மாதங்களில் இத்தகைய அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வி
ஆசிரியராகக் கடமையாற்றிய
திருமதி நளினி அகிலதாஸ்
அவர்கள் 01.03.2011இல் இருந்து வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்துக்கு ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராகப் பதவி உயர்வுபெற்றுச் சென்றுள்ளமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரது பணி மேலும் சிறப்புற அமைய இறைவனை வேண்டுகின்றோம்
ஆசிரியர் கழகம்,
யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்.
(39-22-24)


# தென்மராட்சி மாணவர்களுக்கு இன்று விசேட பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,மார்ச்.11

தென்மராட்சி கல்வி வலயத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறாத மாணவர்களுக்கான விசேட பயிற்சி வகுப்பு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மட்டுவில் கமலாசனி வித்தியாலய திறந்த பாடசாலை கற்றல் செயற்பாட்டு நிலையத்தினால் நடத்தப்படவுள்ள இக்கருத்தரங்கில் தென்மராட்சி கல்வி வலய கணித மூல வள பிரிவு பொறுப்பாளர் ச.பத்மநாதன் உரையாற்றவுள்ளதாக கமலாசனி வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் அறிவித்துள்ளார். (ம-207)


## பிரதேச செய்தியாளர்கள்



கீழ்க்காணும் பிரதேசங்களுக்கு செய்தியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.
முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★மூளாய் ★வட்டுக்கோட்டை ★அராலி
★சித்தங்கேணி ★சங்கானை
★பண்டத்தரிப்பு ★மாதகல்
★இளவாலை ★அளவெட்டி
★தெல்லிப்பளை

தகுதியானவர்கள் விவரங்களுடன் உடன் கீழ்க் காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

பிரதம ஆசிரியர்
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,மார்ச்11

மின்மார்க்கங்களில் திருத்தவேலைகள் இடம்பெறவுள்ளமையால் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் குறிப்பிட்ட இடங்களில் மின் தடை ஏற்படுத்தப்படும் என்று இலங்கை மின்சாரசபையின் யாழ்.பிரதேச மின் பொறியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை புத்தூர், வாதரவத்தை, வீரவாணி, ஆவரங்கால், ஊறணி ஆகிய இடங்களிலும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, யாழ். நகர் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். (ம)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்11

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாட சாலையின் அதிபர் வி.சிவசிதம்பரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தநிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி. செல்வராசா கலந்துகொள்வார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் சுகாதாரம்
மற்றும் உடற்கல்வி ஆசிரியராக
பணியாற்றியவரும், எமது
பாடசாலையின்
விளையாட்டுத்துறையை கோட்ட,
வலய, மாவட்ட, மாகாண, தேசிய
மட்டங்கள் வரை கொண்டு சென்று
பாடசாலையின் பெயரை மேலோங்க
வழி வகுத்தவரும், சிறந்த
தலைமைத்துவம் கொண்டவருமான
திரு.நாகராசா ரவீந்திரன்
அவர்கள் மு/துணுக்காய் கல்வி வலய, சுகாதாரமும் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகராகப் பதவி உயர்வு பெற்று செல்லும் அவர்களை வாழ்த்துவதுடன் மேன்மேலும் பல பதவி உயர்வுகளைப்பெற்று கல்விச் சேவையைத் தொடர்ந்து வழங்க வாழ்த்துகின்றோம்.
கல்விச் சமூகம்,
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
(1409) (20,23,30)

## உடனடி வேலை வாய்ப்பு

1.சிவில் பொறியியலாளர்
2.படவரைஞர்
3.மேற்பார்வையாளர்
4.தொழில்நுட்ப உத்தியோகத்தர்

அந்தந்த துறைகளில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் உடையவர்கள் விரும்பத்தக்கது.

தகுதியுள்ளவர்கள் தம்து விண்ணப்பங்களை 16.03.2011 ஆம் திகதிக்கு முன்பாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக பின்வரும் விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மனிதவள முகாமையாளர்,
யூரோவில் ,
45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(39)

## சாரங்கா இசைக்குழு
வழங்கும்
ராஜ ராகம்

அலைகள் ஓய்வதில்லை. அவ்வண்ணமே சாரங்கா இசைக்குழுவும் இசை உலகில் ராஜமுத்திரை பதித்து ஏகோபித்த ரசிகர்களின் பாராட்டைப் பெற்று A1 இசைக் குழு வாகத் திகழும் நாம் 2011இலும் மேலும் பல சிறந்த கலைஞர்களுடன் திகழும் எம்மை அழைத்து இன்புற, கோயில் திருவிழாக்கள் கோலாகலம்பெற தொடர்புகள். (39-19-20) (1417)

| V. பானுதீபன் | இயக்குநர் R.V.வாசன் | மணிக்குரல் V.S. [illegible] |
|---|---|---|
| 0779037127 0772543251 | 0776055558 | 0777158476, 0212227535 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தொடரும் நொண்டிச் சாட்டுகள்

அவசரகாலச் சட்டத்தின் கீழேயே நாட்டை ஆள வேண்டும்- தொடர்ந்து நிர்வகிக்க வேண்டும் - என்ற பெருவிருப்பம் உடையதாகவே இன்றைய அரசு உள்ளதாகத் தெரிகிறது.

அந்தச் சட்டத்தை நடைமுறையாக்க, அதனை மாதாந்தம் நீடிக்க வேண்டும் என்பது அரசமைப்பு நியதி. அதன் பொருட்டு ஆட்சியில் உள்ளவர்கள் மிக இலகுவான வழி ஒன்றை வெகு கெட்டித்தனமாகக் கையாண்டு வருகிறார்கள். பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதற்கான அகச்சூழ்நிலை அல்லது புறச்சூழல் நாட்டில் நிலவுகிறது என்று மாதாந்தம் செப்பி வருகிறார்கள்.

2011 மார்ச் மாதத்துக்கு- இந்த மாதத்துக்கு- அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு அரசாங்கத் தரப்பால் தெரிவிக்கப்பட்ட காரணம் மிக வித்தியாசமானது.

அயல் நாடான இந்தியாவின் பிரபல அரசியல் தலைவர்களைக் கொலை செய்யும் நோக்குடனும், விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் இலங்கையில் செயற்படவைக்கும் இலக்குடனும், நோக்கத்துடனும் தமிழ் நாட்டில் மூன்று இரகசிய முகாம்கள் இயங்கி வருவதாக, நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன என்பதே நாடாளு மன்றில் நேற்றுமுன்தினம் தெரிவிக்கப்பட்ட காரணம்.

இதே வகைப் பாணியில் கடந்த ஆறு மாதங்களாக அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்காக அரச தரப்பு பல காரணங்களைக் கூறிவந்தது.

★ மலையக இளைஞர்களும் புலிகளிடம் பயிற்சி பெற்றனர். அதனால் நாட்டின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து அவசரகாலச் சட்டம் நீடிக் கப்படுகிறது என்று கடந்த வருடம் நவம்பர் மாதத்திலும் -

★ புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டாலும் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரும், ஆயுதக் குழுவினரும் இரகசியமாக நடமாடுகின்றனர். இவர்களை ஒன்று திரட்டி மீண்டுமோர் ஆயுதக் கிளர்ச்சியை ஆரம்பிக்கச் சர்வதேச மட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது -

இலங்கையில் புலிகளின் மாவீரர் தினம் கொண்டாடப்படவில்லையென்றாலும் சர்வதேச அளவில் மாவீரர் தினம் அதற்குச் சமமான முறையில் கொண்டாடப்பட்டுள்ளது -

எனவே இதனை முறியடிக்கவும் நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கவும் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எனவே நாட்டின் நலன்கருதி எதிர்க்கட்சியும் இதற்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கடந்த வருடம் டிசெம்பர் மாதத்திலும் -

★ பதுக்கி வைக்கப்பட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டன. அதனால் நாட்டின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுகிறது - என்று இவ்வருடம் பெப்ரவரி மாதத்திலும், அதாவது கடந்த மாதத்திலும் -

அவசர காலச் சட்டத்தைத் தொடர்வதற்கு நாடாளுமன்றில் காரணங்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்தத் தொடரில், அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்கு அரசு இம்முறை கூறிய காரணம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்தேகம் எழுப்பி உள்ளார்.

இந்தியாவில் எந்த விதத்திலும் புலிகளின் அச்சுறுத்தல்கள் இல்லை. அங்கு புலிகளின் எந்த ஒரு முகாமும் இல்லை என்று இந்திய ஊடகங்கள் வாயிலாக அறிகிறோம். அங்கு காணப்படுவது இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையிலான தகராறுகள் மட்டுமே.

இங்கு தெரிவிக்கப்பட்டது போன்று இந்தியாவின் மூன்று முகாம்கள் இயங்குவது உண்மையாக இருந்தால் இவ்விடயம் குறித்து இந்திய அரசுடன் பேச்சு நடத்தப்பட்டதா? உங்களுக்கு ஆதாரமற்ற தகவல்களைக் கொடுத்தது யார்? - என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

அரசு கூறுவதற்கு எதிராகக் கூறுவதுதானே நாடாளுமன்றில் எதிர்கட்சியின் பிரதான பணி என்று, ரணில் சொன்னதை எழுந்தமானமாக எடுத்துக் கொள்ளமுடியாது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று கோரி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை.கோபாலசாமி தொடர்ந்த நீதிமன்ற வழக்கின் போதே எதிர்வாதமாக அந்த நாட்டில் விடுதலைப்புலிகளின் பிரசன்னம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிகச் சமீபத்தில், தமிழ் நாட்டின் பொலிஸ் மா அதிபர் லத்திக்கா சரண் அந்த மாநிலத்தில் விடுதலைப் புலிகளின் பிரசன்னம் இல்லை, முகாம்களும் இல்லை என்று அறிவித்திருந்தார்.

எதுவோ, விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரசன்னம் இலங்கையில் இருப்பதாகவோ, அதன் அச்சுறுத்தல் இருப்பதாகவோ அரசாங்கம் நம்ப வைக்கும் உறுதியான சான்றுகளுடன், சம்பவங்களுடன் உத்தி யோகபூர்வமாக இதுவரை அறிவிக்கவில்லை.

பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது என்று ஜனாதிபதி கூறுகிறார். இந்நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யும் போதும், இங்கு வரும் வெளிநாட்டுத் தலைவர்களிடமும் நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டதாகவே மகிழ்ச்சி தெரிவித்து வருகிறார்.

அவ்வாறிருக்க, புலிகள் மீண்டும் தலைதூக்கப் பார்க்கின்றனர் என்று கூறுவது ஒன்றுக்கு மற்றது முரண்பட்டதாக இருக்கிறது. அதனால், நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் உண்மைதானா, அவற்றுக்கு ஆதாரங்கள் உண்டா என்பன தெளிவுபடுத்தப்பட வேண்டும்; உறுதிப்படுத்த வேண்டியது அரசின் கடமையாகும்.

பயங்கரவாதத்தின் ஆபத்து என்ற நொண்டிச்சாட்டுகள் அவசர காலச் சட்டத்தை மாதாந்தம் நீடிப்பதற்காகத் தொடரத்தான் வேண்டுமா?

## இடைநிலை பாடசாலைகளில்

# ஆறாம் தரத்துக்கு மேற்பட்ட மாணவருக்கு தகவல் தொழில்நுட்பமும் ஒரு பாடமாகும்

கொழும்பு,மார்ச் 11

அடுத்தவருடத்திலிருந்து தகவல் தொழில்நுட்பப் பாடமும் பாடசாலைகளில் ஆறாம் தரத்துக்கு மேற்பட்ட மாணவர்களின் பாடவிதானங்களில் அறிமுகப்படுத்தப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர்கள் மத்தியில் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த அமைச்சர் தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், விளையாட்டு, கணிதம், விஞ்ஞானம், வெளிநாட்டு மொழிகள் மற்றும் நுண்கலைகள் போன்ற பாடங்கள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று கல்வித்துறை நிபுணர்கள் வற்புறுத்தி வருகின்றார்கள். அதனால் இடைநிலை பாடசாலைக் கல்விக்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு 2012 ஆம் ஆண்டு தொடக்கம் தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவது என்று முடிவுசெய்துள்ளோம். எமது உள்நாட்டு கல்வித்துறையை மேம்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இது அமையும் என்று எதிர்பார்க்கின்றோம்.

முதலில் தகவல் தொழில் நுட்பக் கல்வியை கற்பிற்கும் வகையில் வசதிகளையுடைய பாடசாலைகளிலேயே இது அறிமுகப்படுத்தப்படும் என்றார் அமைச்சர். இதற்கான பாட விதானத்தை தேசிய கல்வி நிறுவனம் தயாரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ப)

# பாடசாலை வளங்களை மேம்படுத்தும் திட்டம் அடுத்த வருடம் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 11

ஆயிரம் பாடசாலைகளின் வளங்களை மேம்படுத்தும் திட்டம் அடுத்தவருடம் நடைமுறைக்குவரும் என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆயிரம் பாடசாலைகளின் வளங்களை மேம்படுத்தும் திட்டத்துக்குரிய வடக்கின் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்குரிய முதற்கட்டப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. இரண்டாம் கட்டப்பணிகளுக்குரிய வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படுகின்ற பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோருக்கான பயிற்சிகள் இந்த வருட இறுதிக்குள் வழங்கப்பட்டு முடிந்துவிடும் என்றார் அவர். (ஐ-9)

# பிளாஸ்ரிக் தட்டங்களுக்கு விடைகொடுப்போமா?

அர்ச்சனை என்ற சொல் ''அர்ச்சா'' என்ற சமஸ்கிருதச் சொல்லில் இருந்து பிறந்துள்ளது. அர்ச்சா என்றால் சிலை என்பது நேரடிப்பொருள். ''அர்ச்சா'' என்ற சொல்லில் இருந்து அர்ச்சனை, அர்ச்சகர், அர்ச்சித்தல் முதலான பல சொற்கள் பிறந்துள்ளன.

எமது சமய மரபில் அர்ச்சனை என்ற சொல் ஆகு பெயராக அமைந்து தெய்வ பூசை, காணிக்கைப் பொருள்கள் என்பவற்றைக் குறிக்கவும் பயன்படுகின்றது.

எமது சூழலில் பெறக்கூடிய வளங்களை இறை அர்ப்பணமாக நிவேதிக்கும் மரபு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. மனித நாகரிகத்தின் தோற்றுவாய் முதலே இதற்கான ஆதாரங்கள் உள்ளன.

பூசைக்கு அர்ச்சிக்கப்படலுக்கு ஏற்ற பொருள்கள் எவை? அல்லாதன எவை? என எம் முன்னோர்கள் வகுத்து வைத்தனர். இதன்படி இறைவனுக்கு அர்பணிக்கும் பொருள்களில் ஐதரோகாபன் பெறுதிகள் இடம்பெறக்கூடாதெனவும் பார்த்துக் கொண்டனர்.

கோயில்களில் தேங்காயெண்ணெய், இலுப்பெண்ணெய், நல்லெண்ணெய் முதலிய தாவர எண்ணெய்கள் விளக்கேற்றப் பயன்படுகின்றன.இவை விஞ்ஞான ரீதியில் காபன், ஐதரசன், ஒட்சிசன் ஆகிய மூலகங்களை உள்ளடக்கியவை. காபோவைதரேற் எரிபொருள்கள் என விஞ்ஞானம் பேசும்.

ஆனால் நம்மை அறியாமலேயே ஐதரோகாபன் பெறுதிகள் கோயிலுக்குள் நுழைந்துவிடுகின்றன. இதில் முக்கியமானது கற்பூரம்.

இன்று நாம் பயன்படுத்தும் சாதாரண கற்பூரத்தில் பெரும்பங்கு பரபின் மெழுகு (ஐதரோகாபன்) கலப்படமாக நிறைந்துள்ளது. ஐதரோகாபன் எரியும் போது கரும்புகை கக்கியபடியே எரியும். இதனால் இந்த எரிபொருள் பாவனையை நம் முன்னோர் விலக்கினர்.

ஐதரோகாபன்களின் பெறுதிகளுள் பொலித்தீன், பிளாஸ்ரிக் என்பனவும் முக்கியமானவை. இவற்றின் பாவனைப் பெருக்கம் சுற்றுச் சுழலுக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது. இவை உக்கமாட்டாதவை. இதனால் சூழலை மாசுறுத்தும் பிரதான காரியத்தை ஆற்றிவிடுகின்றன.

அர்ச்சனைப் பொருள்களை நிவேதிப்பதற்காக நாம் இன்று பிளாஸ்ரிக் தட்டங்களை நாடும் நிலை காணப்படுகிறது. பால், எண்ணெய் முதலிய திரவியங்களைப் பொலித்தீன் போத்தல்களிலும் அர்ச்சனைப் பழம், பூ முதலான பொருள்களைப் பிளாஸ்ரிக் தட்டுக்களிலும் எடுத்துச் செல்கிறோம். சூழலை மாசுறுத்துகிறோம். உலோகத் தட்டங்களைப் பயன்படுத்துவதில் சில நடைமுறைச் சிரமங்கள் இருந்தாலும் பனை ஓலை தட்டங்களைப் பயன்படுத்துவதில் சிரமமில்லையே?




அர்ச்சனைத் தட்டுகளாகப் பனை ஓலை பெட்டிகளைப் பயன்படுத் தும் நடைமுறை தற்போது மலையேறி விட்டது. அந்த இடத்தை பிளாஸ்ரிக் தட்டங்கள் ஆக்கிரமித்து விட்டன.

இயற்கையின் செல்வமான பனை ஓலைப் பெட்டி பயன்பாடு மீளவும் ஊக்குவிக்கப்பட வேண்டும். இந்த ஊக்குவிப்பு இந்தத் தொழிலாளரை வாழவைக்கும் என்ற ஒரு நல்ல செய்தியையும் பொதித்துள்ளது.

பிளாஸ்ரிக் தட்டங்களுக்கும் பொலித்தீன் பைகளுக்கும் விடைகொடுப்போமா?

**ச.லலீசன்,** விரிவுரையாளர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
11 மார்ச் 2011 வெள்ளிக்கிழமை

# வலி.வடக்கில் மேலும் 4 கிராமங்களில் மீள்குடியமர்வதற்கு படையினர் அனுமதி

## அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,மார்ச் 11

வலி.வடக்கில் மேலும் நான்கு கிராமங்களில் மக்கள் மீள்குடியமர பாதுகாப்புத் தரப்பினிடமிருந்து அனுமதி கிடைத்துள்ளது.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதற்கான சான்றிதழும் கிடைக்கப்பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வலி.வடக்கில் இளவாலை வடக்கு, வித்தகபுரம், இளவாலை வடமேற்கு ஆகிய பகுதிகளில் மக்கள் மீள் குடியமர்வதற்கான அனுமதி கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்டு மக்கள் மீள்குடியமர்ந்துள்ளனர்.

இது தவிர, வலி.வடக்கில் குரும்பசிட்டி கிழக்கு, வயாவிளான் வடக்கு, கட்டுவன் தெற்கு, கொல்லங்கலட்டி, ஆகிய பகுதிகளில் கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

அந்தப் பகுதியில் மக்கள் மீள் குடியமர்வதற்கான அனுமதியினை பாதுகாப்புத் தரப்பினர் வழங்கியுள்ளனர்.

அந்தப் பகுதியில் மீள்குடியமர்வதற்கு சுமார் 4 ஆயிரம் குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன. இந்த மக்கள் அங்கு மீள்குடியமர்வதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று பல்வேறு தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உரிய பதில் கிடைத்ததும் அங்கு மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர். அதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-9)

# வயலுக்குச் சென்ற சிறுவன் கிணற்றில் வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம்,மார்ச் 11

சுழிபுரம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கிணற்றில் தவறி வீழ்ந்து 4 வயதுச் சிறுவன் ஒருவன் பலியாகியுள்ளான்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

சுழிபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த யோகராசா டில்ஷான் (வயது-4) என்ற சிறுவனே இவ்வாறு பலியாகியுள்ளார்.

குறித்த சிறுவனும் அவனது தந்தையாரும் வயலுக்குச் சென்றுள்ளனர். தந்தை குறித்த சிறுவனைக் கிணற்றுக்கு அருகில் நிறுத்திவிட்டு மாடு கட்டுவதற்காகச் சற்றுத் தொலைவுக்குச் சென்றுள்ளார். அவர் திரும்பி வந்து பார்த்தபோது மகனைக் கிணற்றடியில் காணவில்லை. பின்பு அங்கு தேடியபோது சிறுவனின் சடலம் கிணற்றில் காணப்பட்டது.

இதன் பின்னர் வட்டுக்கோட்டை பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலம் மீட்கப்பட்டு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (த-15)

# வடமராட்சி கிழக்கில் 84 வீடுகள் கையளிப்பு

நெல்லியடி,மார்ச் 11

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு 'யுன் ஹபிடெக்' நிறுவனத்தின் அனுசரணையில் வரமராட்சி கிழக்குப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 84 வீடுகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு வைபவரீதியாக பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

மணற்காட்டுப் பகுதியில் 44 வீடுகளும் அம்பன், குடத்தனை பகுதியில் 40 வீடுகளும் இவ்வாறு உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ்.மாட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்வார். (ஐ-319)

## மதிப்பளிப்பு....




சர்வதேச மகளிர் தினம் நிகழ்வுகள் தியாகி அறக்கொடை நிறுவனத்தில் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன் தலைமையில் நேற்று இடம்பெற்றன. இதில் பிரதம விருநத்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், விருந்தினர்கள் மற்றும் கௌரவம் பெற்ற கிராம மட்டங்களில் உள்ள பத்து மாதர் சங்கங்களின் தலைவிகள் ஆகியோரைக் காணலாம். (311)

# சட்ட விரோதமாக மணல் ஏற்றியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மார்ச் 11

காரைநகரில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிய நபருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தால் 7 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய் இரவு காரைநகர் வீதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சட்ட விரோதமாக மணலை ஏற்றி வந்த பிரஸ்தாப நபரைக் கைது செய்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் திருமதி ஜோய் மகிழ்மகாதேவா குறித்த நபருக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ஐ-9-93)

# சகலகலாவல்லி வித்தியாலயத்துக்கு மின் இணைப்பு

தென்மராட்சி,மார்ச் 11

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்துக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சபையினரும் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து வித்தியாலய கட்டடங்களுக்கு மின்சாரம் பெறுவதற்கான பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வைபவரீதியாக வித்தியாலயக் கட்டடங்களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் யோ.ஜெயகாந்தன் தெரிவித்தார்.

2000 ஆண்டு யுத்த வேளையில் முழுமையாக சேதடைந்த வித்தியாலயத்தினை சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினர் பல மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைத்துக் கொடுத்த பின்னர் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இந்த வித்தியாலயம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (த-207)

# காரைநகரில் நள்ளிரவில் கடை உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம்,மார்ச் 11

காரைநகர் வாரிவளவுப் பகுதியில் உள்ள பலசரக்குக் கடையொன்றினுள் நேற்று முன்தினம் இரவு புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருள்களை சூறையாடினர்.

நள்ளிரவு வேளை கடையின் கூரை ஓட்டைக் கழற்றி உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த 24 ஆயிரம் ரூபா பணத்தையும் சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களையும் சூறையாடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து கடை உரிமையாளர், ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9-93)

# முருங்கைக் காய்க்கு 'மவுசு'

யாழ்ப்பாணம்,மார்ச் 11

குடாநாட்டில் முருங்கைக் காய்க்கு பெரும் 'மவுசு' ஏற்பட்டுள்ளது.

தற்போது இதன் சீசன் ஆரம்பமாகும் முன்னரே அவற்றை பிஞ்சிலேயே பிடுங்கி அதிக விலைக்கு சிலர் விற்பனை செய்து வருகின்றனர்.

பிஞ்சாகப் பிடுங்கப்படும் இந்தக் காய்கள் சந்தைகளில் கிலோ 500 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றன. (ஐ-26)

# யாழ்.பல்கலை. ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் இதழியல் டிப்ளோமாவுக்கு புதிய மாணவர்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 11

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான இதழியல் டிப்ளோமா புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.



ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இணைப்பாளர் தே.தேவானந் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், சிறப்புவிருந்தினராக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, இயக்குநர் விமல் சுவாமிநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விருந்தினர்கள் நிகழ்வில் உரையாற்றியபோது, ஊடகக் கற்கையின் பெறுமதியையும் இன்றைய தேவைகளையும் விளக்கியதுடன் இன்று காணப்படும் வேலையின்மைப் பிரச்சினையை நிவர்த்தி செய்யவும் தமிழ் ஊடகவியலாளர் பற்றாக் குறையை இல்லாது செய்யும் வகையில் இவ்வாறான கற்கை நெறிகள் பயன்மிக்கவை என்ற வகையிலும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர். (ஐ-10)

# விபத்தில் இளைஞன் படுகாயம்

அச்சுவேலி,மார்ச் 11

பருத்தித்துறை வீதியில் மண்டான் வல்லை சந்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற உழவு இயந்திரம் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து மந்திகை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி, வதிரியைச் சேர்ந்த பொன்னம்பலநாதர் சஞ்சீவ் (வயது-25) என்ற மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞனே கால்கள் மற்றும் மார்புப் பகுதியில் படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்த இளைஞன் தலைக்கவசம் அணிந்திருந்த காரணத்தினால் தலைப்பகுதியில் காயம் எதுவும் ஏற்படவில்லை. (ம-236-11)

# கொத்தணி அலுவலகம் திக்கத்துக்கு மாற்றம்

நெல்லியடி,மார்ச் 11

வடமராட்சி பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, திக்கம் வடிசாலையை தலைமைக் காரியாலயமாக கொண்டு செயற்படவுள்ளதாக வடமராட்சி பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

கடந்த காலத்தில் கொடிகாமம் வீதி, இராஜகிராமம் பகுதியில் அமைந்திருந்த இந்தக் கொத்தணியின் அலுவலகம் கடந்த 7ஆம் திகதியிலிருந்து திக்கம் வடி சாலை அலுவலகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. (ஐ-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கு இடம்பெயர்ந்தவர்களுக்கு இருமாதங்களாக நிவாரணம் இல்லை

சண்டிலிப்பாய்,மார்ச் 11

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு கடந்த இரு மாதங்களுக்கு மேலாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவில்லை. எதுவித வருமானமுமின்றி நிவாரணத்தையே நம்பி வாழ்ந்து வரும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நிவாரணத்தை எதிர்பார்த்த வண்ணம் காத்திருக்கின்றன.

சகல வசதிகளுடனும் வாழ்ந்து வந்த வலி.வடக்கு மக்கள் குடாநாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து இடம் பெயர்ந்து பல பிரதேசங்களில் அகதி முகாம்களிலும் நலன்புரி நிலையங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கான நிவாரணம் மாதாமாதம் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை. இதனால் இவர்கள் நெருக்கடிக்குள்ளாகின்றார்கள்.

கடந்த டிசெம்பர் மாதம் மூன்று மாதங்களுக்குரிய நிவாரணம் சேர்த்து வழங்கப்பட்டது. அதன் பின்பு ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரு மாதங்களுக்குரிய நிவாரணம் இதுவரை வழங்கப்படவில்லை. மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 10 நாள்கள் முடிந்த நிலையிலும் நிவாரணம் வழங்கப்படாதனால் இவற்றை நம்பி வாழ்ந்து வரும் பலநூற்றுக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண முத்திரையும் இதுவரை வழங்கப்படவில்லை. இந்தநிலை மக்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ-115)

# மாசேரிப் பிரதேசத்துக்கு மின் இணைப்பு கிட்டவில்லை

கொடிகாமம், மார்ச் 11

வரணிப் பிரதேசத்தில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மாசேரிக் கிராம அலுவலர் பிரிவில் சிபார்சு செய்யப்பட்ட வீதிகளுக்கு மின் வழங்கும் நடவடிக்கைகள் ஏதும் தொடங்கப்படவில்லை எனப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் வரையில் வரணிப் பிரதேசத்தில் வரணி வடக்கு, இடைக்குறிச்சி மற்றும் கரம்பைக் குறிச்சிக் கிராம அலுவலர் பிரிவுகளில் வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் மின் வழங்கவென மின் கம்பங்கள் நடப்பட்டுக் கேபிள்களும் இணைப்புச் செய்யப்பட்டன. அத்துடன் மாசேரிக் கிராம அலுவலர் பிரிவில் மாசேரி அமெரிக்கமிஷன் பாடசாலை வீதி, மாசேரிச் சைவப்பிரகாச வித்தியாசாலைவீதி மற்றும் வேறுபல மார்க்கங்களுக்கு மின் சார வசதிகள் செய்து கொடுப்பதாகக் கூறப்பட்டது.

புதுவருடம் பிறந்து இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் மேற்கூறிய திட்டத்தின்கீழ் மின் சாரம் வழங்கும் நடவடிக்கைகள்இங்கு தொடங்கப்பட வில்லை. சம்பந்தப்பட்டோர் இது விடயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஐ-122)

## நினைவுக்குரல்...



வல்வெட்டித்துறைப் பிரதேச வைத்தியசாலையின் நிறுவுநர் இளையதம்பி அப்புக்குட்டியாப்பிள்ளையின் சிலையை வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் க.வேலும்மயிலும் திறந்து வைத்து மாலை சூட்டுகின்றார். நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர்.

# மீசாலைப் பெண் கொலை: மற்றொரு பெண்ணும் கைதாகி மறியலில்

தென்மராட்சி,மார்ச் 11

மீசாலையில் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் சகோதரனின் மனைவியும் பொலிஸாரால் செவ்வாயன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தானையைச் சேர்ந்த பத்மநாதன் தயானந்தி என்பவரைக் கைதுசெய்த பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இந்தப் பெண்ணை எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொலையுண்ட பெண்ணின் கணவரும், வான்சாரதியும் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (ஓ-207)

# காலாவதியான பொருள்களை வைத்திருந்தோருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மார்ச் 11

சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த 6 வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவச்சேரி நகர்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் சாவகச்சேரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொலிஸாருடன் இணைந்து நடத்திய திடீர் பரிசோதனையின் போது காலாவதியான பொருள்கள் விற்பனைக்காக வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சோதனையின் போது 6 கடைகளில் காலாவதியான சோடா வகைகள், பிஸ்கட் வகைகள், நூடில்ஸ் வகைகள், பால்மா பைக்கற்றுகள், தேங்காய்ப் பவுடர் பைக்கற்றுகள், பப்படங்கள், அரிசிமா, மிளகாய்த் தூள் எனப் பலவகைப் பொருள்கள் மீட்கப்பட்டன.

இவற்றை விற்பனைக்காக வைத்திருந்த குறித்த 6 வர்த்தகர்களையும் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது ஒவ் வொருவருக்கும் தலா மூவாயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ம-4)

# மானிப்பாயில் முக்கிய இடங்களில் நிழற்குடை அமைக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,மார்ச் 11

மானிப்பாய்ப் பிரதேசத்தில் முக்கியமான இடங்கள் உட்பட தேவையான இடங்களில் நிழல் குடைகள் அமைக்கப்படாதனால் குறிப்பாக மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பஸ்ஸை எதிர்பார்த்து வெயிலில் காத்து நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இவர்கள் தொடர்பாக வலி.தென் மேற்குப் பிரதேசசபை கவனம் எடுக்குமா என்ற கேள்வியை எழும்பியுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய் ஊடாக பொன்னாலை செல்லும்பிரதான வீதியில் தேவையான இடங்களில் நிழற் குடைகள் அமைக்கப்பட்டிருந்தன. போர்க்காலச் சூழ்நிலையாலும் தொடர்ந்து பராமரிக்காமல் விட்டதனாலும் அனேகமான நிழற்குடைகள் சேதமடைந்து இல்லாது போய்விட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையைத் தொடர்ந்து மக்களின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றது. இந்த நிலையில் தேவையான இடங்களில் நிழற்குடைகள் இல்லாதிருப்பது பயணிகளுக்கு பெரும் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது.

மானிப்பாய்ப் பிரதேசத்தில் பிரபலமான கல்லூரிகள், பொதுச் சந்தை, வங்கிகள், ஆலயங்கள் ஆகியன இருக்கின்ற போதிலும் வீதிகளில் நிழற்குடைகள் அமைக்கப்படாதனால் பொதுமக்கள் குறிப்பாக மாணவர்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றார்கள். பஸ்ஸை எதிர்பார்த்து வெயிலில் காத்திருக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

பொது மக்களினதும் மாணவர்களினதும் நலன்கருதித் தேவையான இடங்களில் நிழற்குடைகளை அமைப்பதற்குப் பொது நிறுவனங்களும் பிரதேச சபையும் முன்வரவேண்டுமென்று பாதிக்கப்பட்டோர் கேட்டுள்ளார்கள். (ஐ-115)

# சின்னக்கடையில் திருட்டு; இளவாலை யுவதி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,மார்ச் 11

தனது சிறிய தாயின் மகனின் பணம், கையடக்கத்தொலைபேசி உள்ளிட்ட பொருள்களைத் திருடியதாகச் சந்தேகிக்கப்படும் இளவாலையைச் சேர்ந்த யுவதி ஒருவரை யாழ்.பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த யுவதி யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் திருட்டுச் சம்பவம் யாழ்.சின்னக்கடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது -

மத்திய கிழக்கு நாடொன்றில் பணிபுரிந்து விட்டு சில மாதங்களின் முன்னர் இங்கு வந்து தற்போது உணவுக்கடை ஒன்றில் பெண்ணின் சித்தியின் மகன் வேலை செய்து வருகிறார்.

குறித்த யுவதி ஏதோ ஒரு வகையில் 10 ஆயிரம் ரூபா பணம் உள்ளிட்ட குறித்த பொருள்களைத் திருடியுள்ளார். தமக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து சந்தேகத்தின் பேரில் குறித்த யுவதியைக் கைதுசெய்து அவரது கைப்பையை பரிசோதனை செய்தபோது அந்த இளைஞனின் மத்திய கிழக்கு நாட்டு அடையாள அட்டை இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவரை யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர் நீதிமன்ற உத்தரவுக்கமைய தற்போது இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ-4)

# பண்ணை வீதிப் புனரமைப்பு மந்த கதியில் தொடர்கிறது

யாழ்ப்பாணம்,மார்ச் 11

யாழ்.பண்ணை வீதியின் புனரமைப்புப் பணிகள் தொடர்ந்தும் மந்தகதியிலேயே நடைபெற்று வருகின்றன.

பண்ணைப் பாலத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம்வரை இந்த வீதி அகலிப்பு மேற்கொள்ளப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

புனரமைப்புப் பணிகள் கடந்த வருடத்தில் ஆரம்பமாகியும் கூட அவை மிகவும் மந்தகதியிலேயே இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

தென்பகுதியைச் சேர்ந்த தனியார் ஒப்பந்தக் காரரினால் இந்த வீதிப் புனரமைப்பு இடம்பெற்று வருகின்றது.

தற்போது ஒரு கிலோ மீற்றர் தூரம் வரைக்கும் இடம்பெறும் இந்த வீதிப் புனரமைப்புப் பணியை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை குறைந்த விலைக்கே நெல் விற்பனை

கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை செய்த நெல்லை உரிய விலைக்குச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கால் போக நெற்செய்கையில் 60 வீதமானவை மழை வெள்ளம், நோய்த் தாக்கம் என்பவற்றால் அழிவடைந்துள்ளன.

எஞ்சிய நெற் பயிர்களை அறுவடை செய்யும் விவசாயிகள் அதற்குச் சரியான சந்தை வாய்ப்பு இல்லாத நிலையில் நெல்லைக் குறைந்த விலைக்கே விற்பனை செய்து வருகின்றனர்.

நெல் அறுவடையின் போது சம்பா நெல்லின் விலை ஒரு கிலோவுக்கு 30 ரூபா எனவும் ஏனைய சிகப்பு நெல் ஒரு கிலோ 28 ரூபா எனவும் தீர்மானிக்கப்பட்டு 70 கிலோ கொண்ட ஒரு மூடை சம்பா நெல் 2100 ரூபாக எனவும் சிகப்பு நெல் 1960 ரூபா எனவும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் விலைப் பட்டியல்கள் போடப்பட்டிருக்கின்றன.

ஆனால் அந்த நெல்லினை யாரும் உரிய விலையில் கொள்வனவு செய்வதற்கு முன் வரவில்லை.

இதனால் தாங்கள் அறுவடை செய்கின்ற நெல்லைக் குறைந்த விலைகளில் விற்பனை செய்ய வேண்டியுள்ளதாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

75 கிலோ முதல் 78 கிலோ வரையான எடையுடைய ஒரு மூடை சம்பாநெல் 1700 ரூபாவுக்கும் சிகப்பு நெல் 1500 ரூபா முதல் 1650 ரூபாவுக்கும் வியாபாரிகளுக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது.

இதனால் தாங்கள் என்றுமில்லாதவாறு நட்டத்தினை எதிர் கொள்ள வேண்டியுள்ளதாக காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

(க-06)

# அபிவிருத்தியில் பங்காளிகளாக இருக்குமாறு வடக்கு மக்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

மன்னார்,மார்ச்11

நாடு முழுவதிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி இருக்கும் நிலையில் வடக்கிலும் அதனை ஏற்படுத்தி அபிவிருத்தியின் பங்காளிகளாக இருக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வன்னி மாவட்டத்துக்கான தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டம் மன்னார் நகர சபை மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இன்று நாட்டில் இருப்பது வெற்றிலைச் சின்னத்தின் ஆட்சி.

அதேபோல வடக்கு மக்களையும் வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களித்து அபிவிருத்தியில் பங்காளிகளாக மாறுமாறும் அழைப்பு விடுக்கின்றேன் என்றார் ஜனாதிபதி.

வவுனியா,முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அமைச்சர் றிசாத் பதியுதீன், மில்ரோய் பெர்னாண்டோ, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக், வடக்கு மாகாண ஆளுநர் ஜீ. ஏ.சந்திரசிறி உட்படப் பலரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(க)

# அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களுக்கு ஆளாகும் கல்லாறு கிராம மக்கள்

கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசத்துக்குட்பட்ட கல்லாறு கிராமத்தில் உள்ள 245 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட பிரமந்தனாறு கிராம அலுவலர் பிரிவில் 900 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன. இதில் 240 குடும்பங்களைச் சேர்ந்த 810 பேர் கல்லாறு கிராமத்தில் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

இவ்வாறு இக்கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தமக்கான குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் என்றுமில்லாதவாறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர். தமக்கான குடிதண்ணீர் தேசிய நீர்வழங்கல் சபையினால் பிரதேச செயலாளரின் எரிபொருள் விநியோகத்துடன் இடம்பெற்று வருவதாகவும் தூர இடத்திலிருந்து தமக்கான குடிதண்ணீர் கொண்டுவரப்படுவதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன் எமக்குப் போதியளவு நீர் கிடைப்பதில்லை யெனவும் கிடைக்கின்ற நீரினைச் சரியாகத் தாம் பயன்படுத்துவதாகவும் இந்த மக்கள் தெரிவிக்கின்றனர். தமக்கான மருத்துவ வசதிகள் எவையும் இல்லையென்வும் குறிப்பிட்ட இவர்கள் மருத்துவ வசதியினைப் பெற்றுக் கொள்வதாயின் கிளிநொச்சிக்கே செல்லவேண்டும். தர்மபுரம் மருத்துவமனை ஓரளவு தூரத்தில் இருப்பதுடன் அங்கு நிரந்தர மருத்துவர் எவரும் இல்லாத நிலையில் அங்கும் தமக்கான சிகிச்சை, களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் தெரிவித்தனர். இந்த மீளக்குடியேறியுள்ள மக்கள் தமக்கான போக்குவரத்து வசதிகள் எவையும் சீராக இல்லையெனவும் தமது கிராமப் பாடசாலையும் ஆளணி மற்றும் பௌதிகவளப் பற்றாக்குறைகளுக்கும் முகம் கொடுத்து இயங்கி வருவதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

(க-6)


## Calling for Tender - Teaching Hospital, Jaffna

01. The Chirman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive separate sealed tenders for the following works up to 10.00am on 28.03.2011. Tender form may be collected from Director, Teaching Hospital, Jaffa up to 21.03.2011 on payment on non refundable deposit.

| No | Nature of work | Grade | Non Refundable Deposit |
|---|---|---|---|
| 01 | Surgical Block Roof Work | C8 | Rs.1,000 |
| 02 | Painting to ward-28 | C9 | Rs.1,000 |
| 03 | Painting to ward-29 | C9 | Rs.1,000 |

02. Tenders will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening Tenders.

03. Tender forms are issued only to the contractor who has valid registration in Grade "C8,C9" and above in the field of Building Constructions and other Institute of Constructions Training And Development(ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL)

04. Sealed Tenders may be dispatched either by registered post or hand delivered to Diretor, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 28.03.2011.

05. Tender Documents may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.

06. For further details please contact Hospital Secretary, Teaching Hospital, Jaffna.

**The Chairman,**
Divisional Tender Board,
Teaching Hospital,
Jaffna.

(C/576609)

(20.22)


# வடக்கின் துரித மீட்சித் திட்டத்தில் வீதிகள், குளங்கள் புனரமைப்பு

கிளிநொச்சி,மார்ச் 11

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் வன்னிப் பிரதேசத்தில் பல வீதிகள்,குளங்கள் என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் இடம்பெற உள்ளன.

கிளிநொச்சி அறிவியல் நகரின் பிரதான உள்வீதிகள் புனரமைக்கப்பட உள்ளன. அத்துடன் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் அடங்கும் தட்டுவன் கொட்டிக் குளம், ஊரியன் குளம், இராசையன்குளம் என்பனவும் மன்னாரில் முள்ளிக்குளம் புனரமைப்புச் செய்யப்பட உள்ளது. மடுப் பிரதேசத்தில் உள்ள உள்ளக வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

வவுனியா மாவட்டத்தில்கல்மடுக்குளம், இரைப்பொத்தான குளம் என்பவையும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கோட்டைகட்டிய குளம்,அம்பலப் பெருமாள் குளம் என்பனவும் புனரமைப்புச் செய்யப்பட உள்ளன.

உலக வங்கியின் தேசிய போட்டிக் கேள்வி விதிமுறைகளுக்கமைய இக் கட்டுமாணங்களுக்கான கேள்வி கோரப்பட்டுள்ளது.

கேள்விப்பத்திரங்கள் யாவும் அடுத்த மாதம் 08 ஆம் திகதி வரையும் "திட்டப் பணிப்பாளர், வடக்கின் துரித மீட்சித் திட்டம், திட்ட முகாமைத்துவப் பிரிவு, புகையிரத நிலைய வீதி, வவுனியா எனும் முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்களை 024-3248330, 024 2225827 எனும் இலக்கங்களுடனோ, pd@enrep.lk எனும் மின்னஞ்சல் முகவரியுடனோ தொடர்பு கொண்டு [illegible] அறிவித்துள்ளார். (க-121)


கொழும்பு பல்கலைக்கழக BIT கற்கை நெறியினை கற்கும் மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு


மாணவர்கள் உயர்ந்த பெறுபேறுகள் பெறுவதற்கு உத்தரவாதம்

தனிப்பட்ட கவனத்துடனான விரிவுரைகள்

2, 4 ம் தவணைகள்

ஆரம்பம்: 12-03-2011 சனிக்கிழமை காலை 10.00 மணி

தொடர்புகளுக்கு:
14, பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி,
யாழ்ப்பாணம். 0776621745




BIT CORNER
Professional ICT Education

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப்பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

100 % டெக்றோஸ் மொனோகைட்றேட் (Dext rose Monohydrate) அடங்கிய சர்வதேச தரத்திற்கு நிகரான றோயல் குளுக்கோஸ் (100g) மிகக் குறைந்த விலையான ரூபா 31.90 இற்கு சந்தையில் கிடைக்கும்போது ஏன் மற்றைய குளுக்கோஸுக்கு அதிகவிலை கொடுக்கவேண்டும்?

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிதரன் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்

## தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளையினர்

கிளிநொச்சி, மார்ச் 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் மீது நடத்தப்பட்ட தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளை தெரிவித்துள்ளது. கிளை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போருக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்டதாகச் சித்திரிக்கப்படும் ஜனநாயகச் சூழலில் விவசாயப் பெருநிலமான எமது மாவட்டத்தின் குரலாக மட்டுமன்றி தமிழ்த் தேசிய உணர்வின் வெளிப்பாட்டு சக்தியாய் விளங்குபவர் சிறிதரன் ஆவார். இவர் நீண்ட காலமாக எமது மாவட்டத்திற்கு இல்லாது இருந்த ஜனநாயக அரசியல் தலைமைத்துவத்தை ஏற்படுத்தித் தந்தவர். இலங்கைத் தீவில் அரசாட்சித் தத்துவங்களுக்கு மதிப்பளித்து தமிழ் மக்களின் ஜனநாயகக் குரலாய் ஒலிக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலை மிகுந்த வேதனையுடன் கண்டிக்கின்றோம்.

தமிழ்க் குடிமக்கள் மீதும் அவர்களின் மக்கள் சபைப் பிரதிநிதிகள் மீதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் உயிர் பறித்தல்களும் அதற்கான முயற்சிகளும் எந்தவொரு ஜனநாயக சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்பதுடன் இத்தகைய இனச்சார்புப் படுகொலை முயற்சிகள் சர்வதேச குடிமக்கள் காப்பீட்டு உரிமை சட்டங்களுக்கும் எதிரானதாகும். இத்தகைய படுகொலைகளும் அதற்கான முயற்சிகளும் கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து வருவது சர்வதேச மனித உரிமைச் சமவாயங்களையே ஏளனம் செய்யும் செயலாகும்.

எனவே உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ்பேசும் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்காதவரை ஜனநாயகத்திற்கு எதிரான சவால்கள் நீட்சி அடையவே செய்யும். இந்த மெய்நிலையை அனைத்துத் தமிழ் மக்களும் உணர்ந்து தமிழ் தேசிய கூட்டமைப்புடன் பலமாக ஒன்றிணைந்து அரசியல் உறுதிப்பாட்டை அடைவதே எமது காலப் பணியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய கமக்காரர் அமைப்புக்கு பாரதிபுரம் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி பாரதிபுரத்தில் ஒரு புதிய கமக்காரர் அமைப்பு நிர்வாகத்தைத் தெரிவு செய்யுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாரதிபுரம் கிராமத்தில் 780 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

ஆனால் அவர்களுக்கான உதவிகள் எவையும் சரியான முறையில் கிடைக்கவில்லையெனத் தெரிவித்துள்ளனர் பிரதேச மக்கள்.

இந்த ஆண்டு பயிர்ச் செய்கைக்கென 312 விவசாயக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் 40 குடும்பங்களுக்கு மட்டுமே அரை ஏக்கர் வீதம் நிலம் பண்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஏனைய 272 குடும்பங்களுக்கும் நிலம் பண்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

தமக்கான உதவிகள் சரியாகக் கிடைப்பதற்கு அரச திணைக்களங்கள் வழிவகை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள இந்தப் பிரதேச மக்கள் அதற்கு புதிய அமைப்புக்களைத் தெரிவு செய்வது அவசியம் எனவும் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதிய கமக்கார அமைப்பு நிர்வாகம் தெரிவு செய்யப்படுமாயின் கூடுதலான நிலங்களைப் பண்படுத்திக் கொடுக்க முடியும். இதனால் பாரதிபுரம் மக்களின் பயிர்ச் செய்கையில் முன்னேற்றம் ஏற்படும்.

எனவே உரிய அதிகாரிகள் இதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அவர்கள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## நேர்த்தியான அணிநடை....



விருந்தினர் கொண்டாட்டம்: கிளிநொச்சி மாசார் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது மாணவர்கள் அணிவகுத்துச் செல்கின்றனர். (405)

# முறிகண்டிப் பிள்ளையார் ஆலயச் சூழலில் 30 லட்சம் ரூபா செலவில் கடைத் தொகுதி

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயச் சூழலில் யு.என்.டி.பி. நிதியுதவியுடன் முப்பது இலட்சம் ரூபா செலவில் 10 கடைத் தொகுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

வர்த்தகர்களினதும் மக்களினதும் நலன்கருதி அமைக்கப்பட்டு வரும் இக்கடைகள் முன்பு வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களுக்குப் பகிர்ந்து வழங்கப்படும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் அ. ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்கள் வன்னியில் மீளக்குடியமர்த்தப் படுவதுடன் குடாநாட்டையும் தென்னிலங்கையையும் இணைக்கும் ஏ-9 தரைப்பாதையில் 24 மணி நேரமும் வாகனப் போக்குவரத்தும் மக்கள் நடமாட்டமும் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு வர்த்தக நிலையங்களை அமைக்க வேண்டிய கட்டாயத் தேவை பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது. இதைக் கருத்திற்கொண்டு பிரதேச சபைச் செயலாளர் எடுத்துக் கொண்ட முயற்சியினால் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு வடக்குப் பக்கமாகவுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் மேற்படி நிறுவனத்தின் நிதியுதவியுடன் 10 கடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இக்கடைகள் முன்பு வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களுக்கே பகிர்ந்து வழங்கப்படவிருக்கின்றன. இதேவேளை மேற்படி நிறுவனத்தினால் பல இலட்சம் ரூபா செலவில் சகல வசதிகளுடன் கூடிய பொதுச் சந்தையும் மிக விரைவாக அமைக்கப்படவிருப்பதாகத் தெரிவித்துள்ள பிரதேச சபைச் செயலாளர் பயணிகளின் நலன்கருதி இப் பகுதியில் பஸ் நிலையம் ஒன்றும் சேவா லங்கா நிறுவனத்தினால் அமைக்கப்பட இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (க-115)

# உணவுக்கான இலகு வேலைத்திட்டம்

கிளிநொச்சி, மார்ச் 11

உணவுக்கான இலகுவேலைத் திட்டத்திற்கேற்ப தமக்கான உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லையென மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

உணவுக்கானஇலகு வேலைத் திட்டம் கண்டாவளைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள கிராமங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. கடந்த மாதம் ஊரியான் பிரதேசத்தில் 15 நாள்கள் வேலை நடைபெற்றதாகவும் ஆனால் அதற்கேற்ப தமக்கு நிவாரணம் வழங்கப்படவில்லையெனவும் இதில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். ஒரு நபர் காலை 9 மணிமுதல் மதியம் 12 மணிவரை வேலை செய்ய வேண்டுமெனப் பணிக்கப்பட்டது. இந்தப் பதினைந்து நாள்களுக்கான வேலைக்கென தனிநபர் ஒருவருக்கு 3 கிலோ அரிசி, 800 கிராம் பருப்பு, 150 கிராம் சீனி, தேங்காய் எண்ணெய் என ஒரு வாரத்திற்கானவையே வழங்கப்பட்டுள்ளன. இந்த வேலைத் திட்டத்தில் ஓர் அங்கத்தவர் அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர் கொண்ட குடும்பங்களாக இருந்தாலும் குடும்ப அங்கத்தவர் ஒருவர் மட்டுமே வேலை செய்துள்ளார்.

ஆனால் ஓர் அங்கத்தவர் தவிர்ந்த குடும்பங்களுக்கு அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. பதினைந்து நாள்கள் வேலை செய்த போதும் ஒரு வாரத்திற்கான நிவாரணம் வழங்கப்பட்டமையானது தமக்கு பெரிதும் ஏமாற்றத்தைத் தருவதாகப் பாதிக்கபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

# ஆற்றின் குறுக்கே வீழ்ந்து கிடக்கும் மரங்களை அகற்றக் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி, அக்கராயன் குளத்தின் நீர்பாயும் பிரதான ஆற்றின் குறுக்கே வீழ்ந்து கிடக்கும் பெரிய மரங்களை அகற்ற வேண்டுமென இப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது அக்கராயன் குளத்தின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் குளத்தின் வான்பாயும் போது நீர் பாய்ந்து செல்லும் பிரதான ஆற்றில் பெரிய காட்டு மரங்கள் வீழ்ந்து கிடப்பதனால் நீர் பாய்ந்து செல்ல முடியாதவாறு நீர் தேங்கிக் காணப்படுகிறது. இதனால் வலது, இடது கரை வாய்க்கால்களில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றன. அத்துடன் குளத்தின் நீர்த்தடுப் பணையும் உடைந்த நிலையில் காணப்படுகின்றது. குளத்தின் மேலதிக நீர் செல்ல முடியாது தடையாகவுள்ள மரங்களை அகற்றுவதன் மூலம் குளத்து நீர் இலகுவாகத் தடையின்றிப் பூநகரிக் கடலைச் சென்றடைய முடியுமென இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (410)

# கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோகத்தில் 19 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்கள் அழிவு என மதிப்பீடு

கிளிநொச்சி, மார்ச் 11

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற் செய்கையால் 18 ஆயிரத்து 944 ஏக்கர் நெல் வயல்கள் அழிவடைந்துள்ளதாகக் கமநல சேவைகள் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கையில் சீரற்ற காலநிலையினால் என்றுமில்லாதவாறு நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளதுடன் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும் அதிகமான பயிர்கள் அழிவடைந்துள்ளன.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் [illegible] மாகவுள்ள 113 கமக்கா[illegible] புக்களும் தங்களுடைய பயிரழிவுகளைப் பட்டியலிட்டுத் தமக்கு அனுப்பியுள்ளதாகவும் அதன் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 18 ஆயிரத்து 944 ஏக்கர் நெல் வயல்கள் முழுமையாக அழிவடைந்துள்ளதாகவும் கமநலத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீளக்குடியமர்ந்த மக்கள் தங்களிடம் [illegible] வழங்களையும், அரச மற்றும் தனியார் வங்கிகளில் பெற்ற கடன்களையும் இவ்வாண்டு காலபோக நெற்செய்கைகளில் பயன்படுத்தினர்.

ஆனால் அவர்களுக்கு எதிர்பார்த்த இலாபம் எதுவும் கிடைக்காததால் வங்கிக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையிலும் உள்ளனர். (6)

# ஒரு தொகைப் பணம் கண்டெடுப்பு

முல்லைத்தீவில் இருந்து பருத்தித்துறைக்குச் சென்ற பேருந்தில் ஒரு தொகைப் பணம் நடத்துநரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை பேருந்தில் கண்டெடுக்கப்பட்ட இப் பணத்தினை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கப் பணிமனையில் ஒப்படைத்துள்ளார். ஆகவே தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் பணிமனைக்கு வருகை தந்து பணத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசியக் கட்சி சகல பிரதேசங்களிலும் உள்ளூராட்சி சபைகளையும் கைப்பற்றும்

## மஸ்கெலியாவில் ரணில் நம்பிக்கை

மஸ்கெலியா, மார்ச் 11

நாட்டின் சகல உள்ளூராட்சி சபைகளையும் கைப்பற்றி, நடைபெறுவரும் அராஜக ஆட்சிக்கு முடிவுகட்ட வேண்டும். எதிர்வரும் 18 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி அம் பகமுவ பிரதேசசபையையும் கைப்பற்றும் என அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மஸ்கெலியா தனியார் வாகனத் தரிப்பிடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பகமுவ பிரதேசசபை மற்றும் ஹட்டன் நகரசபை ஆகிய வற்றுக்குப் போட்டி யிடும் ஐ.தே.க. வேட்பாளர்களை ஆதரித்துப் பேசிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

2002 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்கு எதிராக ஐ.தே.க. வீதியிலிறங்கிப் போராடி வெற்றிபெற்றது. அப்போது பாண் 11.50 சதத்திற்கும், பருப்பு ஒரு கிலோ 60 ரூபாவுக்கும், நெத்தலி ஒரு கிலோ 70 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டன.

தற்போது அவற்றின் விலைகள் பன்மடங்கு உயர்ந்துவிட்டன. மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜயவர்த்தன மற்றும் ஆர்.பிரேமதாஸ ஆகியோர் நாட்டில் பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொண்டனர்.

தற்போதைய ஆட்சியாளர்கள் யுத்தம் என்ற பெயரில் 5 வருடங்கள் காலம்கடத்தினர். யுத்தம் முடிந்து 2 வருடங்கள் கடந்த நிலையில் விலைவாசிகள் வானளாவ உயர்ந்துவிட்டன. ஆனால் நாட்டு மக்களின் சம்பளங்கள் உயர்த்தப்படவில்லை. எனவே, ஆட்சியாளருக்கு வாக்களித்தால் அது மக்கள் தமக்குத் தாமே குழி வெட்டிக் கொள்வதற்கு சமனாகும்.

இதேவேளை, ஒவ்வொரு தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து போட்டியிட்டு பின்னர் ஆட்சியமைக்கும் கட்சிக்குத் தாவுகின்றவர்கள் பலர். இவர்களில் மலையகத்தைச் சார்ந்தவர்களும் உள்ளனர்.

எனவே, இம்முறை அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை எம்மிடம் ஒப்படையுங்கள். - என்றார்.

## நீச்சல் தடாகத்தில் விழுந்து எட்டு வயது சிறுமி மரணம்

கண்டி, பொல்கொல்லை பிரதேசத்தைச் சேர்ந்த எட்டு வயதுச் சிறுமியொருவர் நீச்சல் தடாகத்தில் தவறி விழுந்து நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

தனியார் பாடசாலை ஒன்றில் மூன்றாம் ஆண்டில் கல்வி கற்கும் இம்மாணவி வேறு பாடசாலை ஒன்றின் நீச்சல் பயிற்சிக்காகச் சென்றிருந்த போதே இவ்வாறு நீச்சல் தடாகத்திற்குள் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தற்போது இச்சிறுமியின் சடலம் கடுகஸ்தோட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்துகின்றனர்.

## பெருந்தோட்ட மாணவர்களுக்கு புலமைப் பரிசில்

இலங்கை இந்திய சமுதாயப் பேரவை தமிழ்நாடு எஸ்.எஸ். எம். பொறியியற் கல்லூரியுடன் இணைந்து, கடந்த வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற பெருந்தோட்டப் பாடசாலை மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கவுள்ளது.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தமிழ் மொழி உட்பட ஆறு கட்டாயப் பாடங்களிலும் ஆங்கிலமொழியிலும் குறைந்தபட்சம் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும், க.பொ.த. உயர் தரத்தில் பரீட்சைப் பாடங் கள் மூன்றிலும் குறைந்த பட்சம் சாதாரண தரத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மாணவருக்கு தெரிவில் முன்னுரிமை வழங்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கான முடிவுத்திகதி இம்மாதம் 30ஆம் திகதியாகும்.

பெருந்தோட்ட மாணவர்களுக்கான உயர் கல்வி வாய்ப்பை மேம்படுத்தி உதவும் பொருட்டு கடந்த வருடம் முதல் இப்புலமைப் பரிசில் திட்டம் அமுலாகி வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் வர்த்தகம், விஞ்ஞானம், கலை ஆகிய பாடத்துறைகளில் மாணவர்கள் அனுமதி பெற்று தமது உயர் கல்வியை இந்தியாவின் நாமக்கல் மாவட்டத்திலுள்ள கோமர பாணைய எஸ்.எஸ்.எம். பொறியியற் கல்லூரியில் தொடர்ந்து வருகின்றார்கள்.

## 1500 அடி பள்ளத்தில் புரண்டது வான்

கொழும்பு-கண்டி பிரதான வீதியில் மாவனெல்ல பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை இரவு வான் ஒன்று சுமார் 1500 அடி பள்ளத்தில் பாய்ந்ததில் 17 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் நான்கு சிறுவர்களும் நான்கு பெண்களும் இரு பிக்குகளும் உள்ளடங்குகின்றனர்.

மாவனெல்ல பொலிஸாரும் பிரதேச வாசிகளும் காயமுற்றவர்களை மாவனெல்ல வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இச்சம்பவத்தைக் கேள்வியுற்ற பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசநாயக்க மாவனெல்ல வைத்தியசாலைக்குச் சென்று காயமுற்றவர்களுடன் உரையாடினார் என மாவனெல்ல பொலிஸ் பொறுப்பதிகாரி முத்து பண்டா தெரிவித்தார்.


காயமுற்றவர்கள் வெலிமடை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் கடவத்தையில் உள்ள புத்த விகாரைக்குச் சென்று கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ம-5)


# மரண அறிவித்தல்

## லயன் ஐயாத்துரை இராமச்சந்திரா

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்தகாரர் - RDA, RDD, உரிமையாளர்- ஆஷா சிவில் எஞ்சினியரிங் வேக்ஸ், முன்னாள் தலைவர்- லயன்ஸ் கழகம், உரும்பிராய்)



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை இராமச்சந்திரா (08.03.2011) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அரசரத்தினம் - நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திரமதி (விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை) அவர்களின் பாசமிகு கணவரும் நிருஷா (லண்டன்), தர்ஷா (30ஆம் அணி- யாழ். மருத்துவபீடம்), துளஷா, கௌஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஐங்கரன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனும் செல்வி ஐங்கரனின் அன்புப் பேரனும் சந்திரவதனா (கனடா), மனோரஞ்சிதமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மெய்யழகன் (கனடா), யேசுராஜன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், NSB - சாவகச்சேரி), ஜெயக்குமார் (பிரான்ஸ்), நந்தகுமார் (பிரான்ஸ்), சுவீந்திரகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சசிகலா (பிரான்ஸ்), மேகலா (கனடா), குகன் (கனடா), அச்சுதன் (பிரான்ஸ்), ஜெயகலா (கனடா), ஜொவிற்றா மேசி (லண்டன்), ஜஸ்ரின் ஜயந்தன் (பிரான்ஸ்), ஜீட் ஜீவன் (RDA), ஜெராட் ஜோன்ஸன் (NSB, யாழ்.), ஜேம்ஸ் யூலியன், ஜெனி ஜெரோம் ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இந்திரமதி இராமச்சந்திரா (மனைவி)
0777171474, 0213213286.

லவ் லேன்,
உடுவில், சுன்னாகம்.

(1500) (39-19-20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை நோக்கித் துப்பாக்கிச் சூடு; இதுதான் ஜனநாயக அரசியலா?

## கேள்வி எழுப்புகிறார் மட்டு. மாவட்ட எம்.பி.

மட்டக்களப்பு, மார்ச் 11

''இலங்கையில் ஜனநாயக அரசியல் நடக்கின்றது என அரசு கூறுகின்றது. ஆனால், நாங்கள் இன்று அரசியல் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் வாகனம் மீது கைக்குண்டு வீசப்பட்டதும், துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதுமான செய்திகள் எமக்குக் கிடைத்துள்ளன. இதுதானா இலங்கையின் ஜனநாயக அரசியல்?''

-இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அஞ்சலோட்ட அரசியல் பிரசாரக் கூட்டம் திங்கட்கிழமை திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஈச்சிலம் பற்றுப் பிரதேசத்தில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 2004 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூவரை நாங்கள் இழந்திருக்கின்றோம். தற்போதும் எங்களை நோக்கித் துப்பாக்கி நீட்டப்பட்டுக் கொண்டேதான் இருக்கின்றது. இதைச் சற்று நேரத்திற்கு முன் எமது நாடாளுமன்ற உறுப்பினரான சிறிதரன் மீதான தாக்குதல் நிரூபிக்கின்றது.

சிறிதரன் கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு பயணித்துக் கொண்டிருந்த போது அனுராதபுரம், நொச்சியாகம எனும் இடத்தில் வைத்து ஆயுத தாரிகளால் தாக்குதலுக்குள்ளாகி இருக்கின்றார்.

இதன் சூத்திரதாரிகளை அரசு கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த வேண்டும் இல்லாவிட்டால் இந்தத் தாக்குதலின் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்வதாக அமையும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்களின் உரிமைக்காகவும் ஒரு நிரந்தரத் தீர்வுக்காகவும் தொடர்ந்து குரல் கொடுக்கின்றது. இதைப் பொறுக்க முடியாத தீயசக்திகள் எங்களது குரல்வளையை நசுக்கப் பார்க்கிறது. இதைத் தமிழ் மக்கள் நன்றாகப் புரிந்து கொள்வார்கள்.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் மௌனமாக்கப் பட்டதன் பின்னர் அரசு தமிழ் மக்களின் போராட்டம் வெறும் அபிவிருத்திக்கு மட்டும்தான் என்ற தோரணையில் செயற்பட்டுக் கருத்துக்களைக் கூறி வருகிறது.

ஆனால், தமிழ் மக்களின் இழப்பும் அர்ப்பணிப்பும் சுய நிர்ணய உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வுடன்கூடிய அபி விருத்தி என்பதையும், தமிழர்களின்



அரசியல் தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதையும் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலம் எமது மக்கள் அரசுக்கும் சர்வதேசத்துக்கும் உணர்த்தியிருந்தார்கள்.

இதன் பின்னர் ஏற்பட்ட சர்வதேச அழுத்தம் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்கு அரசு முன்வந்தது.

தற்போது நடைபெற இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் எம்முடன் அடுத்த கட்டப் பேச்சுக்களை நடத்தப்போவதாக அரசு அறிவித்திருக்கும் இந்நிலை யில் நாங்கள் எமது அடிப்படை உரிமைக் கொள்கையில் உறுதியாக இருக்கிறோம் என்பதை தமிழ் மக்கள் மீண்டும் இத்தேர்தலில் நிரூபிக்க வேண்டியது காலத்தின் மிக முக்கியமான கட்டாயமா கும். - இப்படி அவர் தெரிவித் தார்.

## கட்டாக்காலிகளால் விபத்துக்கள்: தடுப்பதற்கு நடவடிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 11

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளை பிடிக்கும் நடவடிக்கையை ஆரையம்பதி பிரதேச சபை ஆரம்பித்துள்ளது.

ஆரையம்பதி பிரதேச சபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ராஜன் ரவிவர்மன் தலைமையிலான குழுவினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் திரியும் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ராஜன் ரவிவர்மன் தெரிவித்தார்.

கட்டாக்காலி மாடுகளினால் ஏற்படும் விபத்துக்களை கட்டுப்படுத்தும் முகமாக மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் கட்டாக்காலியாக அலைந்து திரியும் மாடுகளினால் பல விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாற்பது மில்லியன் ரூபா செலவில் திருமலையில் பாடசாலை புனரமைப்பு

திருகோணமலை, மார்ச்11

மஹிந்த சிந்தனையின் கீழ் 1,000 பாடசாலைகள் புனரமைப்பு 'இசுறு' திட்டத்தின் கீழ் திருகோணமலை, முள்ளிப் பொத்தானை அஸ்- சிறாஜ் மகா வித்தியாலயம் 40 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு கடந்த திங்கட்கிழமை உத்தி யோகபூர்வமாகத் திறந்து வைக் கப்பட்டது.

பாடசாலை அதிபர் வி.எஹியா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன், புத்தசாசன பிரதி அமைச்சர் எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்தன, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் விமல வீர திசாநாயக்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நஜீப் அப்துல் மஜீத், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.தண்டாயுதபாணி உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் இசுறு திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுத் திறந்துவைக்கப்படும் முதலாவது முஸ்லிம் பாடசாலை இது என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் குறை நீங்குமா?



ஹேகாலை மாவட்டத்தில் 60 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட குடி தண்ணீர்த் திட்டத்தை நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன திறந்து வைக்கிறார்.

## ஆளுங்கட்சியை ஆதரித்தால் அபிவிருத்தியைக் காணமுடியும்

### மு.கா. தலைமை வேட்பாளர் தெரிவிப்பு

மூதூர், மார்ச் 11

திருகோணமலை நகர சபைக்கான தேர்தலில் ஆளுங்கட்சியை ஆதரிப்பதன் மூலம் மட்டுமே எமது பிரதேசத்தில் அபிவிருத்தியைக் காணமுடியும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமை வேட்பாளராகப் போட்டியிடும் ஆசிரியர் என்.எம். மௌசூன் தெரிவித்தார்.

திருகோணமலை - ஜமாலியா பகுதியில் பொதுமக்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் இயக்கம். அதன் பரிமாணம், அதன் வளர்ச்சி சாமானியமானது அல்ல.

தேர்தலில் மக்கள் வழங்கும் ஆணையை வைத்துத்தான் உள்ளூராட்சிச் சபைகளிலே பேரம் பேசுகின்ற சக்தியை நாம் அதிகரிக்க முடியும். பொதுமக்களின் பிரதிநிதித்துவம் மூலம் பொதுமக்களுக்குச் சேவையாற்ற அனுமதிக்கப்பட்ட நிறுவனமே உள்ளூராட்சி சபையாகும்.

இந்நிலையில் பிரதேச அபிவிருத்திக்காக மக்களின் ஆலோசனையைப் பெற்றுச் செயற்படுவதற்கு நான் முன்வந்துள்ளேன். வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களிப்பின் திருகோணமலை நகரசபை எமது ஆளுகைக்குள் வரும் - என்று கூறினார் என்.எம். மௌசூன்.

(இ-10-229)

## தமிழ்த் தேசிய பற்றுறுதியில் இருந்து தமிழ் மக்கள் விலக மாட்டார்கள்

### மூதூர் பிரசாரக் கூட்டத்தில் ரதன் உரை

மூதூர், மார்ச் 11

''எத்தகைய இன்னல்கள், சோதனைகள் ஏற்பட்டாலும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்திற்கு அப்பால் செல்லமாட்டார்கள். எனவே, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மீண்டும் நம்முன்னே சோதனைக் களமாக அமைந்துள்ளது.''

இவ்வாறு வவுனியா நகர சபையின் உபதலைவர் எம்.எம். ரதன், மூதூர் பிரதேச சபை, திருகோணமலை நகரசபைத் தேர்தல் களில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து மூதூரில் நடை பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழ்த் தேசியத்தைப் பாதுகாப்பதைக் கடந்த 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் எம்மக்கள் நிரூபித்துள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தலின் போது மேற்கொண்ட எத்தகைய பிரசாரங்கள், பொய் வாக்குறுதிகள், ஏமாற்று வித்தைகளைப் பேரினவாத சக்திகளும் அதன் அடிவருடிகளும் இன்றைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களத்திலும் மேற்கொள்ளலாம். அவற்றுக்கு தமிழ் மக்கள் ஏமாந்து விடவோ, சோரம் போகவோ மாட்டார்கள்.

மக்களை எப்படி ஏமாற்றலாம் என்ற தொனிப் பொருளில் இத்தகையவர்கள் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டாலும் தமிழ்த் தேசியத்தின் மீது கொண்ட பற்றுறு தியிலிருந்து நமது தமிழ் மக்கள் சிறிதும் பிளவுபடமாட்டார்கள்.

இன்றைய சமகால அரசியல் அணுகுமுறைகளை நாம் ஒப்பு நோக்கிப் பார்க்கும்போது இத் தேர்தல் முக்கியத்துவம் பெறுகின்றது. சர்வதேசத்தின் பார்வை எமது மக்களின் தீர்ப்பை அவதானித்த வண்ணமுள்ளது. இந்த வகையில் எமது மக்கள் சரியான தீர்ப்பை இத் தேர்தலில் வழங்குவார்கள். 60 வருட கால தமிழ் மக்களின் போராட்ட வரலாறு அரசியல் அறவழி, ஆயுதப் போராட்டம் என்று நீண்டு செல்கின்றது.

இன்று எமது தலைவர் சம்பந்தன் தலைமையில் நாம் மற்றுமொரு உறுதியானநம்பிக்கை தரக்கூடிய அரசியல் போராட்டத்துக்கு முகம் கொடுத்துப் பயணித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை சந்திக்கின்றோம். - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் உள்ள புலி ஆதரவாளர்கள் இலங்கையில் அமைதியைக் குலைக்க முயற்சி

## அமைச்சர் பிரேமஜயந்த குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 11

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலங்கையில் ஒழித்துக்கட்டியுள்ள போதிலும், சர்வதேச ரீதியில் புலிகளின் ஆதரவாளர்களும் அவர்களுடன் தொடர்புடையவர்களும் இலங்கையின் சமாதானத்தை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர்.

- இவ்வாறு பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பது மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கனடாவிலிருந்து 10 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கைக்கு வரும் தமிழர் ஒருவர் தனது மனைவியைக் கொலை செய்துவிட்டுத் தலைமறைவானார். அந்தப் பழி இராணுவத்தினர் மீது சுமத்தப்படுகிறது. இவ்வாறான சம்பவங்களே தற்போது நடைபெறுகின்றன.

அவசரகாலச் சட்டத்தின்படி கைதுசெய்யப்பட்டால் அவருக்குப் பிணை விண்ணப்பம் பெற வேண்டுமானால் அன்று பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற வேண்டும். ஆனால் இன்று அடிப்படை உரிமை மீறல் ஊடாக நீதிமன்றம் செல்ல முடியும். அவ்வாறு அவசரகாலச் சட்டம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு நவம்பரில் கதிர்காமம், ரன்ன பஸ் தரிப்பு நிலையத்தில் நிர்வாண மான நிலையில் சடலம் ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது; 40ஆயிரம், 50ஆயிரம் பேர் திடீரெனக் காணாமல் போனார்கள்; றிச்சட் டி சில்வா என்ற ஊடகவியலாளரின் சடலம் கடற்கரையில் இருந்து மீட்கப்பட்டது. ஆனால் இன்று நிலைமை அப்படியல்ல. அரசை மாத்திரமல்ல, ஜனாதிபதியையும் விமர்சித்து எழுதக்கூடிய சுதந்திரம் தற்போது காணப்படுகிறது - என்றார். (சி)

# சிறிதரன் மீதான தாக்கதலுக்கு பிரபா கணேசன் கண்டனம்

கொழும்பு, மார்ச் 11

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீது நடத்தப்பட்ட தாக்குதலைப் பார்க்கும் போது மீண்டும் நாட்டில் கொலைக் கலாசாரம் ஏற்பட்டுள்ளதோ என எண்ணத் தோன்றுகிறது. நாடாளுமன்றஉறுப்பினர்என்றரீதியில் நான் இதனை வன்மையாகக் கண்டிக்கிறேன்-என்றுகொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பான அவரது செய்திக் குறிப்பில் மேலும் தெரி விக்கப் பட்டிருப்பவை வருமாறு:-

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வாகனத்தின் மீது கொலை வெறியர்கள் நடத்திய தாக்குதல் நாட்டின் ஜனநாயகத்துக்குப் பெரும் சவாலாக உள்ளது. சிறிதரன் தனது கருத்துகளைத் தைரியமாகப் பேசக் கூடியவர் ஜனநாயக ரீதியான அவரதுசெயற்பாட்டை வன்முறைகள் மூலம் நிறுத்திவிட முடியாது. இந்த நாட்டில் ஜனநாயக ரீதியாக எவருக்கும் தமது கருத்துகளை வெளியிடும் உரிமை உள்ளது. அதைத் தடுக்க முற்படுவதை அனுமதிக்க முடியாது.

யுத்த காலங்களில் தமது கருத்துகளைத் தைரியமாக எடுத்துரைத்த நாடாளுமன்ற உறுப் பினர்களான அமரர் ரவிராஜ், மகேஸ்வரன், ஜோசப்பரராஜசிங்கம் பேன்றோரின் குரல்கள் வன்முறைமூலம் இல்லாதொழிக்கப்பட்டன.

யுத்தத்தின் பின்னரும் இந்த நிலை தொடரு மானால் நாட்டின் சமாதானத்துக்கும், இன ஐக்கியத்துக்கும் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. எனவே, சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து சட்டத்துக்கு முன் நிறுத்தும் கடப்பாடு அரசுக்கு உள்ளது.

- இவ்வாறு பிரபா கணேசன் தெரிவித்துள்ளார். (சி)

# ஆசிரியர்களுக்கான வெள்ள நிவாரண முற்பணம் இன்னும் வழங்கப்படவில்லை

கொழும்பு, மார்ச் 11

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு நிவாரணமாக 3 மாத சம்பள முற்பணம் வழங்கப்படுமென அரசு அறிவித்தபடி இன்றுவரை ஓர் ஆசியருக்கோ அல்லது அதிபருக்கோ முற்பணம் வழங்கப்படவில்லை.

இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இந்தத் தகவலை நேற்றுமுன்தினம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இதேவேளை, முற்பணத்துக்காக விண்ணப்பிக்கும் கால எல்லை இம்மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைகிறது எனவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு முற்பணம் வழங்கப் போதிய நிதி இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசு வெறும் பிரசார நடவடிக்கையாகவே ஆசிரியர்களுக்கு மூன்று மாத சம்பள முற்பணம் வழங்கப்படுமென அறிவித்ததா என்ற சந்தேகம் எழுகின்றது. அத்துடன் பத்து மாதங்களில் இந்த முற்பணம் மீள அறவிடப்படும் என அறிவித்திருந்த நிலையில், ஜனாதிபதியை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்தபோது 24 மாதங்களில் மீள அறவிடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

## ஊடகத்துக்கு மதிப்பு...



வெள்ளைக்கொடி வழக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட போது ஊடகவியலாளர்களை நோக்கி அவர் கையசைக்கின்றார்.

# 'டைனமைற்' மூலம் பிடித்த மீனை அழிக்க நீதிவான் உத்தரவு

கொழும்பு, மார்ச் 11

'டைனமைற்' வெடி வைத்து பிடிக்கப் பட்ட 219 கிலோ மீன்களை மண்ணெண்ணெய் ஊற்றிக் தீயிலிட்டு அழிக்குமாறு மாத்தறை பிரதான நீதிவான் உதேஷ் ரணதுங்க உத்தரவிட்டார். அத்துடன் மிரிஸ்ஸ பிரதேசவாசியான சரத் சந்தன எனும் மீனவரை விளக்க மறியலில் வைக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

சந்தேகநபர் கடலில் குறிப்பிட்ட இடத்தில் நீண்டகாலமாகவே 'டைனமைற்' வெடிக்க வைத்து பெருந்தொகையான மீன்களைப் பிடித்து விற்று வந்துள்ளார். இம்முறை பிடிபட்ட மீன்களின் பெறுமதி பல இலட்சம் ரூபா எனவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

இவருக்கு டைனமைற் எங்கிருந்து கிடைக்கிறது என்பது பற்றிய விசாரணையும் மேற் கொள்ளப்பட்டுள்ளது என அவர்கள் கூறினர்.

பிடிக்கப்பட்ட மீன்கள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளன என பொலிஸார் தெரிவித்ததை அடுத்தே அவற்றைத் தீயிட்டுக் கொளுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (சி)

# கே.பி.மீது சட்டநடவடிக்கை நிச்சயம் தற்போது தந்திரோபாய நடவடிக்கை

## அநுரபிரியதர்சன யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

கே.பியை அரசு தற்போது இயக்குகின்ற விதம் அரசின் ஒரு தந்தி ரோபாய நடவடிக்கையாகும் என்று அமைச்சர் அநுரபிரியதர்ஷன யாப்பா நேற்றுமுன்தினம் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பின்பேது செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

- புலிகளின் முக்கியஸ்தரான கே.பி. அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஒருவர். அவருக்கு எதிராகக் கட்டாயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அரசு அவரை இப்போது நிர்வகிக்கின்ற விதம் தொடர்பாக எவரும் கவலை கொள்ளவோ அல்லது பெரிதாக அலட்டிக்கொள்ளவோ தேவையில்லை.

சிக்கலான விடயங்களை வெற்றிகொள்வதற்கு விதவிதமான தந்திரோபாய நடவடிக்கைகள் கையாளப்படுவது வழமை. கே.பியை அரசு நடத்துகின்ற விதமும் அவ்வாறான தந்திரோபாய நடவடிக்கைகளில் ஒன்றுதான். புலிகள் இலங்கையில் ஒழிக்கப்பட்ட போதிலும் அவர்களின் செயற்பாடுகள் வெளிநாடுகளில் இடம் பெறுகின்றன. அவை தொடர்பாக நாம் மிகவும் கவனமாக இருக்கின்றோம்.

கே.பி. தொடர்பாக விசாரணைகள் இடம்பெறுகின்றன. அந்த விசாரணைகளுக்கு நாம் இடம் கொடுக்கவேண்டும். விசாரணையின் பின் அவர் தொடர்பில் அரசு பிழையாகச் செயற்பட்டால் அப்போது நாம் இதுபற்றிப் பேசலாம். இப்போதைய செயற்பாடுகள் தொடர்பாக நாம் பேசாமல் இருப்பது நல்லது.

இவ்வாறு அவர் கூறினார். (சி)

# 2016இல் கௌரவமாக வீடு செல்ல விரும்பினால் தேர்தலை ஜனநாயக முறைப்படி நடத்துங்கள்

## அரசுக்கு ஜே.வி.பி. எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 10

2016 ஆம் ஆண்டில் கௌரவமாக வீட்டுக்குச் செல்லவேண்டுமானால் ஆளும் தரப்பு, உள்ளூராட்சித் தேர்தலை ஜனநாயக முறைப்படி நடத்த அனுமதிக்க வேண்டும். அராஜகமான முறையில் தேர்தலை நடத்தினால் மக்கள் கிளர்ந்தெழுந்து ஆளும் தரப்பை வீட்டுக்கு அனுப்பி வைப்பார்கள் என்று ஜே.வி.பி. நேற்றுமுன்தினம் எச்சரிக்கை விடுத்தது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் காலை பத்தரமுல்லை, பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா கூறியவை வருமாறு:-

ஆளும் கட்சி இத் தேர்தலில் தனக்கு தோல்விதான் கிடைக்கும் என்பதைப் புரிந்துகொண்டு உள்ளூராட்சித் தேர்தல்களில் எப்படியாவது வெற்றிகொள்ள முயற்சிமேற்கொண்டு வருகின்றது.

கிராமங்களை அபிவிருத்தி செய்ய உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் கட்சியை வெற்றிபெறச் செய்யும்படி சில அமைச்சர்கள் பிரசாரக் கூட்டங்களில் தெரிவித்து வருகின்றனர். கிராமங்களை அபிவிருத்தி செய்ய ஆளும் கட்சியை வெற்றிபெறச் செய்யத் தேவையில்லை.

மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளுக்கு வரி, நீதிமன்றங்கள் விதிக்கும் அபராதம் உட்பட பல்வேறு வழிகளில் நிதி கிடைக்கின்றது. அதன்மூலம் அவற்றை சிறந்த முறையில் [illegible] திஸ்ஸமஹாராம பிரதேச சபை சிறந்த உதாரணமாகும். திஸ்ஸமஹாராம பிரதேச சபை தென் மாகாணத்திலேயே சிறந்த பிரதேச சபையாகத் தெரிவு செய்யப்பட்டது.

திஸ்ஸமஹாராம பிரதேச சபையை எவ்வாறாயினும் கைப்பற்ற ஆளும் தரப்பு பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறது. பெருந்தொகையான அமைச்சர்களும் குண்டர்களும் அங்கு நிலை கொண்டுள்ளனர். வீதிகள் கொங்கிறீட் வீதிகளாக மாற்றப்படுகின்றன. இருந்தும் மக்கள் எம் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்.

அமைச்சர்கள் இப்போது விலைவாசி உயர்வு குறித்து மேடைகளில் பேச்சு ஆரம்பித்துள்ளனர். முன்னர் விலைவாசி உயர்வுக்கு யுத்தத்தைக் காரணம் காட்டிய இந்த அமைச்சர்கள் இப்போது மழை காரணம் என்கின்றனர்.

விலையைக் குறைப்போம் என வாக்குக்கேட்காமல் பெற்றோல், டீசல் விலையை உயர்த்த மாட்டோம் என உறுதியளித்து வாக்குக் கேட்கின்றனர் - என்றார்.

(ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறிதரன் எம்.பி. மீதான தாக்குதல், பிரபாகரன் விவகாரங்கள் தொடர்பில்

# வீரவன்ஸ, சம்பிக்கவுக்கு சவுக்கடி கொடுத்தார் சரவணபவன் எம்.பி.

உதயன் சபைச் செய்தியாளர்
இரா. புத்திரசிகாமணி

அஸ்வரின் பெயரை ஐ.தே. கட்சியின் தேசியப்பட்டியலில் சேர்க்கவில்லை, அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கவில்லை என்ற ஆதங்கமும், ஆத்திரமும்தான் இன்று நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வரை எமக்கு எதிராகப் பேச வைத்துள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் நாடாளு மன்றத்தில் கூறினார்.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவா தத்தின்போது இதனைப் புட்டு வைத்தார் ரணில்.

காரணம் ரணில் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது நாடாளுமன்ற உறுப் பினர் அஸ்வர் அடிக்கடி இடைமறித்துக் கொண்டேயிருந்தார். இதனாலேயே ரணில் இப்படிக் கூறினார். உறுப்பினர் அஸ்வர் கெட்டிக்காரர். முன்பு எங்களுடன் இருக்கும் போது சகல வழிகளிலும் ஐ.தே.கவுக்காக குரல் கொடுத்தவர்.

ஆனால் அவருக்குத் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கவில்லை என்ற ஆத்திரமே இப்படி அவரை மாற்றி விட்டது என்றார் ரணில். நாடாளுமன்றம் வழமைபோல் சபா நாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

வழமையான சபை நடவடிக்கைகளின் பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விகள் எழுப்பப்பட்டன.

இக்கேள்வி நேரம் சற்றுக் கலகலப்பாக இருந்தது. வழமையாக இடைக்கேள்விகளின்மூலம் சபையில் சர்ச்சையைக் கிளப்பி விடும் ரவி கருணாநாயக்க சபையில் பிரசன்னமாகியிருந்தார்.

**பாதுகாப்புக் காரணமாக விவரங்களை வெளியிட முடியாது**

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனை? எவ்வாறான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று ரவி கருணாநாயக்க பிரதமரிடம் கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார்.

இந்தக் கேள்விக்கு ஆளும்கட்சிக் கொரடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பதில் அளித்தார்.

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள வெளி அச்சுறுத்தல்களுக்கு ஏற்றவகையில் பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

சிலருக்கு பாதுகாப்புக் குறைக்கப் பட்டுள்ளது, சிலருக்குக் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத பிரமுகர்களுக்கும் கூட தேவைக்கேற்ப பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று கூறிய அமைச்சர் -

பாதுகாப்புக் காரணங்களுக்காக யார் யாருக்கு எப்படிப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று வெளிப்படை யாகக் கூற முடியாது - என்றார்.

அமைச்சர் அவர்களே, உங்களுடைய கூற்றை ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால், நீங்கள் சரியான பாதுகாப்பை வழங்கியிருந்தால் பொரளைச் சந்தியில் எம்மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் தடுத்திருக்க முடியும் அல்லவா என்றார் ரவி. இதனால் சபையில் சிறிது சலசலப்பு.

**இந்திய அரசியல் தலைவர்களுக்கு புலிகளால் அச்சுறுத்தல்**

பின்னர் பிரதமர் டி.எம்.ஜயரத்ன அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணையை முன்வைத்தார்.

புலிகள் மீண்டும் சர்வ தேச மட்டத்தில் உயிர் பெற்று வருகின்றனர் என வும் இலங்கையில் சிறு சிறு கலவரங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கின்றனர் எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

அதேவேளை, இந்தியாவில் மூன்று பயிற்சி முகாம்கள் இயங்குகின்றன எனவும் இந்தியத் தலைவர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனவும் கூறினார் பிரதமர் டி.எம். ஜயரத்ன.

**ஜனாதிபதியும் பிரபாகரனை நேருக்கு நேர் சந்திக்க விரும்பினார்தானே**

பிரதமரின் இந்தக் கூற்றுக்களை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வன்மையாக விமர்சித்தார்.

"ஐயா" இந்தியத் தலைவர்கள் மீது மிகவும் அக்கறை கொண்டவர்கள் போன்று பேசுகின்றீர்களே, அப்படியானால் முன்னாள் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியை கொலை செய்த கே.பியை ஏன் பாதுகாப்பாக வைத்துள்ளீர்கள். அவரை இந்தியாவிடம் ஒப்படைப்பீர்களா? என்று கேட்டார்.




இக்கேள்வி ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கு சூட்டைக் கிளப்பிவிட்டது. அமைச்சர் சுசில் பிரேமஜயந்த துள்ளி எழுந்தார்.

சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் இப்பொழுது கே.பியைப் பற்றிப் பெரிதாகப் பேசுகின்றார். ஆனால், இவர்தானே புலிகளின் தலை வர் பிரபாகரனுடன் ஒப்பந்தமே செய்தார். அன்றும் புலிகளின் தலைவர் தேடப்பட்ட ஒருவர்.

அப்போது ஏன் இவர் ஒப்படைக்கவில்லை என்று ஒரு போடு போட்டார் அமைச்சர் சுசில். அமைச்சர் கூறுவது சரிதான். அன்று பிரபாகரன் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட ஒருவர். இந்திய அரசால் தேடப்பட்டவராகவும் இருந்தார்.

இது என்னுடைய காலத்தில் மட்டுமல்ல. முன்னாள் ஜனாதிபதிகளான ஆர். பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க ஆகியோரின் காலத்திலும் இருந்தது.

அப்போதும் கூட நான் பிரபாகரனை சந்திக்கவும் இல்லை, பேச விரும்பவும் இல்லை. ஆனால் இவ்வளவும் தெரிந்த உங்கள் ஜனாதிபதிதானே பிரபாகரனை நேருக்கு நேர் சந்தித்துப் பேச விரும்புகிறேன் என்று வெளிப்படையாகக் கூறினார் என்று திருப்பி அடித்தார் ரணில் விக்கிரம சிங்க. ரணிலின் பதிலடி ஆளும் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் கடுப்பை ஏற்படுத் தியதால் ஆள் ஆளுக்கு எதை எதையோ கூறினர். எதுவுமே விளங்கவில்லை.

நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் தொடர்பான விவாதம் இடம் பெற்ற போது கூடுதலான நாடாளுமன்ற உறுப் பினர் சிறிதரன் மீது மேற்கொள் ளப்பட்ட கொலைமுயற்சிச் சம்பவம் இடத்தைப் பிடித்திருந்தது.

**விமல் வீரவன்ஸவின் விதண்டாவாதம்**

இந்த விவாதத்தின்போது வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீர வன்ஸ இப்படி ஒரு விடயத்தைக் கூறினார்.

அதாவது சிறிதரனின் கார் மீது குண்டு வீச்சும், துப்பாக்கிச் சூடும் மேற் கொள்ளப்பட்டதாம்.

ஆனால், ரய ருக்கு மட்டும் தான் சேதம் ஏற்பட்ட தாம். சேதமடைந்த ரயருடன் ஒன்பது மைல் தூரம் சென் றாராம். இது நம்ப முடியாத ஒரு விட யம்.

அப்படி ஒரு சம்பவம் இடம் பெற்றதா என்ப தில் சந்தேகமாக இருக் கின்றது என்றும் கிளப்பிவிட்டார் புதிய விடயத்தை அமைச் சர் விமல்வீரவன்ஸ.

**பதிலடி கொடுத்த சரவணபவன்**

விவாதம் முற்பகலை விட பிற் பகலிலேயே சூடாக இருந்தது. அமைச்சர்களான விமல் வீரவன்ஸவும், சம்பிக்க ரணவக்கவும் தெரிவித்த கருத்துக்களுக்குப் பதிலடி கொடுத்தார் கூட்டமைப்பு உறுப்பினரான சரவணபவன்.

சிறிதரன் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி தொடர்பாக பொலிஸ் அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளோம்.

நாடாளுமன்றத்தில் சபாநாயகரையும் சந்தித்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புத் தொடர்பாக மிகவும் உணர்வு பூர்வமான விடயங்களைக் கலந்துரையாடினோம்.

அதேவேளை, இந்தச் சபையில் உரையாற்றிய சில அமைச்சர்கள் இதனை சோடிக்கப்பட்ட ஒரு சம்பவம் என்று கூறுவது வேதனைக்குரியது.

இவர்களுடைய விதண்டாவாதக் கூற்றை நான் கண்டிக்கின்றேன்.

அதேவேளை, அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஒரு புதுக்கற்பனைக் கதையை இந்தச் சபையில் அவிழ்த்துக் கொட்டினார்.

அதாவது பிரபாகரன் தனது செயற்பாடுகள் தொடர்பாக மூன்று சட்டத்தரணிகள் கொண்ட குழுவொன்றை வைத்திருந்தார்.

அக்குழுவின் சிபார்சுகளுக்கு அமையவே கொலை செய்யப்பட வேண்டியவர்களின் பட்டியல் தயாரிக்கப் பட்டது என்றும் அதில் ஒருவர் இங்கு இருக்கிறார் என்றும் சம்பிக்க கூறினார்.

இது சம்பிக்க ரணவக்கவினால் முற்று முழுதாக உருவாக்கிக் கூறப்பட்ட கட்டுக் கதை. இதில் உண்மை இல்லை.

இப்படியான கூற்றுக்களை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்று பதிலடி கொடுத்தார் சரவணபவன்.

**கே.பிக்கு நூறு ஏக்கர் காணி**

ஜே.வி.பி. உறுப்பினரான விஜித ஹேரத் இன்னுமொரு விடயத்தை அம்பலப்படுத்தினார். அதாவது நமது நாட்டுக்கு உலகக் கிண்ணத்தை முதல் முறையாகப் பெற்றுக் கொடுத்தவர் அர்ஜுன ரணதுங்க.

அவர் சிறந்த விளையாட்டு வீரர் மட்டுமல்ல, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் கூட. அதேபோன்று அசான் திலக் கரட்ன.

அதேவேளை, நாட்டைப் பயங்கரவாதப் பிடியில் இருந்து மீட்டுத் தந்தவர் சரத்பொன்சேகா. இவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட சிறு துண்டுக் காணிகளையும் மீண்டும் ஒப்படைக்கும்படி கட்டளை (நோட்டீஸ்) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சர்வதேச பயங்கரவாதியான கே.பிக்கு நூறு ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. இந்த கே.பி. நம் நாட்டிற்காக என்ன செய்தார் என்று கேள்வி எழுப்பினார் விஜித ஹேரத்.

எனினும் இக்கேள்விக்கு அரசு பக்கம் இருந்து எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை.

**அவசரகாலச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவன் நான்**

நான் அவசரகாலச் சட்டத்திற்கு எதிரானவன், இந்தச் சட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டவன், சிறைத் தண்டனை அனுபவித்தவன்.

அவசரகாலச் சட்டம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதை நான் ஆதரிக்கவில்லை என்று அமைச்சர் டி.யூ.குணசேகர கூறினார். ஜனாதிபதி ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது நாடு யுத்த சூழலில் இருந்தது. இதனால் அன்று தேவைப்பட்டது. இன்று நிலைமை வேறு.

இதனால் அவசரகாலச் சட்டத்தில் இருந்த 40 விதிகள் இப்பொழுது நீக்கப்பட்டுள்ளன.

இப்பொழுது பெயரளவில் மட்டுமே அவசரகாலச் சட்டம் இருக்கின்றது. இதனால் பொதுமக்களுக்குப் பாதிப்பு இல்லை என்பதால் ஆதரிக்கின்றேன் என்றும் அவர் கூறினார்.

*

## அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு படிப்படியாகக் குறைக்கப்படும்

### ரவியின் கேள்விக்கு தினேஷ் பதில்

அமைச்சர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு படிப்படியாகக் குறைக்கப்படுமென அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் ஐ.தே.க. உறுப்பினர் ரவி கருணநாயக்க எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு கூறினார்.

அமைச்சர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தற்போதைய நிர்வாகத்தின்படி பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் உள்ளன.

எனவே அவர்களுக்கான பாது காப்பை உடனடியாக வாபஸ் பெற முடியாது. காலப் போக்கில் நிலைமைக் கேற்ப அவர்களுக்கான பாதுகாப்பு படிப்படியாகக் குறைக்கப்படும்.

நாட்டின்பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் அமைச்சர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உச்சக்கட்ட பாதுகாப்பை வழங்குவதன் அர்த்தமென்ன என ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கே அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு பதிலளித்தார். (201-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
இன்று இரவு 8 மணி வரை ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அசதி, சோர்வு வந்து நீங்கும். உறவினர்கள், நண்பர்களின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். திடீர் பயணங்களும், செலவுகளும் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுகத் தொந்தரவு வந்து நீங்கும். சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**இடபம்:**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். உத்தியோகத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இரவு 8 மணி முதல் ராசிக்குள் சந்திரன் செல்வதால் அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**மிதுனம்:**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள். செல்வாக்குக் கூடும் நாள்.

**கடகம்:**
தன்னிச்சையாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனதிற்கு இதமான செய்திகள் வரும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் கௌரவப் பொறுப்புகள் தேடி வரும். இனிமையான நாள்.

**சிங்கம்:**
நீண்ட நாள்களாக பிற்போடப்பட்ட காரியங்கள் இன்று முடியும். உறவினர்கள், நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கன்னி:**
இரவு 8 மணி வரை சந்திராஷ்டமம் தொடர்வதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலைத் தூக்கும். பிள்ளைகளால் செலவுகள் வரும். வியாபாரத்தில் வருமானம் மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. நண்பர்களுடன் உரையாடும் போது கவனமாக வார்த்தைகளைப் பிரயோகிக்க வேண்டும்.

**துலாம்:**
கணவன் மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்து போகும். ஆபரணம் சேரும். தாய்வழி உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். இரவு 8 மணி முதல் சந்திராஷ்டமம் தொடங்குவதால் கவனம் தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்:**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். பழைய சிக்கல்கள் தீரும். இரத்த சொந்தங்கள் வலிய வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் புதிய யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களைச் சொல்லித் தருவார். சாதிக்கும் நாள்.

**தனுசு:**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். அயலவர்களின் ஆதரவு பெருகும். வியாபாரத் தில் பங்குதாரர்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் கடமையேற்ற புதிய அதிகாரி உங்களின் செயற்பாடுகளை மதிப்பார். கனவு நனவாகும் நாள்.

**மகரம்:**
உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். பழைய கடனை தீர்க்க புதிய வழியில் யோசிப்பீர்கள். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி கிட்டும். வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்:**
பேச்சில் முதிர்ச்சி தெரியும். பிள்ளைகளால் புகழ், கௌரவம் உயரும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய பொருள்கள் விற்பனையாகும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்:**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். திடீர் திருப்பம் ஏற்படும் நாள்.

# புலிகள் கேட்டதை கூட்டமைப்பும் கேட்கிறது...?

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையே கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்ததும் இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும் என அரசினால் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரேயே தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், தேர்தல் முடிவடைந்த பின்னர் காலம் தாழ்த்தியே இந்தப் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இவ்வாறான பேச்சுக்களை அரசுடன் மேற்கொள்ள வேண்டும் என்கின்ற எதிர்பார்ப்புடனேயே இருந்தது.

இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தல், அவர்களுக்கான புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகள் போன்ற விடயங்களில் அரசுடன் சேர்ந்து செயற்படுதர் போன்றவற்றில் கூட்டமைப்பு ஆர்வம் கொண்டுள்ளதாக முன்னரே அந்தக் கட்சி தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், காலம் தாழ்த்திய கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையேயான பேச்சுக்களுக்காக உப குழுக்கள் அமைக்கப்பட்டன.

இந்தக் குழுக்கள் இரண்டு தடவைகள் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், இவ்விரு பேச்சுக்களின் போதும் குறிப்பிடத்தக்கதான தீர்மானங்களோ, முடிவுகளோ மேற்கொள்ளப்படவில்லை. சில விடயங்களில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

குறிப்பாகக் கடந்தமாதம் இடம்பெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிச் சந்தேக நபர்கள் மற்றும் இறுதிப் போரின்போது, படையினரிடம் சரணடைந்த விடுதலைப்புலி முன்னாள் போராளிகள் குறித்தும் பேசப்பட்டது. இதன்போது அவர்களது பெயர்ப் பட்டியலை வவுனியாவிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வு அலுவலகத்தில் உறவினர்கள் பார்வையிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அரச தரப்பினர் உறுதியளித்தனர்.

இது குறித்த செய்திகள் ஊடகங்களில் வெளியானதும், சில தினங்களுக்குப் பிறகு சரணடைந்த, ஏற்கனவே சிறைகளில் உள்ள இளைஞர்களின் பெற்றோர், உறவினர் வவுனியாவிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வு அலுவலகத்திற்குச் சென்றனர். அவ்வாறு சென்றுவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இது குறித்து தமக்கு எதுவும் தெரியாது எனவும் அவ்வாறான நடைமுறைகள் எதுவுமில்லை என்றும் அந்த அலுவலகத்திலிருந்தவர்கள் கூறினார்கள்.

இது குறித்து யார் உங்களுக்குக் கூறியது எனவும் அவர்கள் கேட்டுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எனத் தெரிவித்ததும், அங்கிருந்தவர்கள் ஏளனமாகப் புன்னகைத்து, அப்படியானால் அவர்களிடமே திரும்பிச் சென்று கேளுங்கள் எனக்கூறி மக்களைத் திருப்பியனுப்பியுள்ளனர்.

தற்போது இரு தரப்புகளுக்கும் இடையிலான மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளதாக திகதி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது


**இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்துதல், அவர்களுக்கான புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகள் போன்ற விடயங்கள் தொடர்பாக அரசுடன் பேச்சுகளை மேற்கொள்ள வேண்டியுள்ள நிலையில் அதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படாமல் காலம் தாழ்த்தப்படுவது தமிழ் மக்களின் அபிவிருத்தி குறித்த விடயத்தில் அரசு அக்கறை காட்டாத நிலைமையையே தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.**

பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்றாம் கட்டப் பேச்சுக்களை நாடாளுமன்றம் கூடும் நாள்களில் நடத்த நேரம் ஒதுக்கித்தருமாறு கூட்டமைப்பு அரசிடம் கேட்டுள்ளது.

முன்னர் அறிவித்திருந்த திகதி பிற்போடப்பட்டமைக்கு, அமைச்சர்கள் உள்ளூராட்சித் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளமையை அரசு காரணம் காட்டியுள்ளது.


அரசுக்கும் அதன் அமைச்சர்களுக்கும் பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு பணிகள் இருக்கலாம். ஆனால், அவற்றைக் காரணம் காட்டி



நாட்டி
பிரச்சி
வதோ,
அத்
நிரலை
நோக்கி
மானதா
சர்வ
ஆகவு
தீர்வு
இன
யத்தை
ஜனாதி
கொள்
தையும்
புலி
யாது எ
விமர்ச
போது
கூட்ட
கேட்கிற
மூலம்
காகக்
சுக்களில்
யரசுக்கு
தன்னாதி
வுத் திட்
கள்.
ஆன
வற்றைக்
யில், தமி
தங்களை
கூடிய வ
தமிழர் த
என
புலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தையா



நாட்டின் பிரதான பிரச்சினையாகவுள்ள இனப் பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை பிற்போடுவதோ, இடை நிறுத்துவதோ முறையான தல்ல.

அத்துடன், பேச்சுக்கான சரியான நிகழ்ச்சி நிரலைக் கடைப் பிடிப்பதும், ஒரு இலக்கை நோக்கி அதனை நகர்த்திச் செல்வதும் முக்கிய மானதாகும்.

சர்வதேச அழுத்தங்களுக்கான 'பேய்க்காட்டல்' ஆகவும் இழுத்தடிப்பாகவும் இனப் பிரச்சினை தீர்வுக்கான பேச்சுக்கள் அமையக்கூடாது.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான கால நிர்ணயத்தை குறிப்பிடமுடியாது என அண்மையில் ஜனாதிபதி கூறியிருப்பது தமிழர் தரப்பை கவலை கொள்ளச் செய்துள்ளதுடன், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

புலிகள் கேட்டவற்றைத் தம்மால் வழங்கமுடியாது எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார். இதுவும் விமர்சனத்திற்குரிய கருத்தாகவே உள்ளது. தற்போது பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் புலிகள் கேட்ட வற்றையா கேட்கிறார்கள்? புலிகள் தங்கள் போராட் டத்தின் மூலம் 'தமிழீழம்' என்கிற தனியரசையே இலக்காகக் கொண்டிருந்தனர். அரசுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டபோது தமிழீழம் என்கிற தனியரசுக்கு மாற்றாக, 'உள்ளக சுயாட்சி', 'இடைக்காலத் தன்னாதிக்க அதிகார சபை' (ISGA) போன்ற தீர்வுத் திட்டங்களை அவர்கள் முன்வைத் திருந்தார்கள்.

ஆனால், கூட்டமைப்பினர் புலிகள் கேட்ட வற்றைக் கேட்கவில்லை. ஒன்றுபட்ட இலங்கையில், தமிழ்மக்கள் தங்களது பூர்வீகத் தாயகத்தில், தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்ளக் கூடிய வகையிலான ஒரு தீர்வுத் திட்டத்தினையே தமிழர் தரப்பு வேண்டி நிற்கிறது.

எனவே ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட புலிகள் கேட்டவற்றையும் ஜனநாயக ரீதியாகப் போராடிவரும் தமிழ் மிதவாத அரசியல் வாதிகள் கேட்பதையும் வேறுபடுத்திப் பார்க்கவேண்டும்.

**தமிழீழ விடுதலைப் புலிகள் போராட்டத்தின் மூலம் 'தமிழீழம்' என்ற கோரிக்கையை முன்வைத்தனர். இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்ன கேட்கிறார்கள். விடுதலைப் புலிகள் கேட்டதையா கேட்கிறார்கள்? இல்லை. தமிழ் மக்கள் தமது தாயகத்தில் தம்மைத் தாமே நிர்வகிக்கக் கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தையே கேட்கின்றனர்.**

கடந்த வரவு செலவுத் திட்டம் மீதான இரண்டாம் கட்ட வாக்கெடுப்பின்போது அரசுக்குத் தங்களது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் விதமாக அதனை எதிர்த்து வாக்களிப்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைவிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

போர்க் குற்றம் தொடர்பாக சர்வதேச அழுத்தங்கள் இலங்கை அரசுக்கு அதிகரித்துவரும் சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தப் போர்க் குற்றச்சாட்டுத் தொடர்பான கருத்துக்களை வெளியிடக்கூடாது எனவும் அவ்வாறு வெளியிட்டால், அது இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பான விடயத்தில் பாதிப்பினை ஏற்படுத்தும் எனவும் அரசு தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனைக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டதா இல்லையா என்பது குறித்து சரியாகத் தெரியவில்லை. ஆனாலும், இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவு பூர்வமாகவும் இராஜதந்திர ரீதியாகவும் சிந்தித்து அணுக வேண்டும் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்தாகவுள்ளது.

அரசு மீதான போர்க் குற்றச்சாட்டை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை வழங்குவதற்கான பேரம் பேசும் உத்தியாக சர்வதேச சமூகம் கையாள்வதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



## விகிர்தன்

இவ்வாறான நகர்வுகள், உத்திகள் தொடர்பான சாதக, பாதகங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரிவாகச் சிந்தித்து ஆராயவேண்டிய அவசியம் உள்ளது. இதற்காக சர்வதேச சமூகத்துடனான இராஜதந்திரத் தொடர்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவையும் கூட்டமைப்புக்கு உள்ளது.

தற்போது நடைபெற்றுவரும் கூட்டமைப்புக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் சரியான திசை வழியில் செல்வதற்கு மேற்குறித்த விடயங்கள் கவனத்திற்கொள்ளல் அவசியமானதாகும்.

# புரியாத புதிர்கள்



ஒருத்தர் வந்து ''ஐயா! தலையைப் பிய்த்துக்கொள்வது போல ஏதாவது தகவல் இருந்தால் சொல்லுங்கள்'' என்றார்-இன்னொருவரிடம்.

''இப்போது தினமும் அப்படித்தானே ஐயா நடந்து கொண்டு இருக்கிறது'' என்றார் மற்றவர்.

''இருந்தாலும் அது போதாது ஐயா! இன்னமும் கடுமையாக வேண்டும்!'' என்றார் அவர்.

இவர் மிகவும் அறிவு பூர்வமான ஒரு மனிதராகத் தெரிவதால் சரி... இவரை இன்றைக்கு முடிந்த அளவுக்குக் குழப்பிப் பார்க்கலாம் என்று ஆரம்பித்த மற்றவர் அவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். ''ஐயா! நான் சொல்வதெல்லாம் பொய் என்று ஒருத்தன் சொல்கிறான் அது உண்மையா? பொய்யா என்று கேட்டேன்.

அவர் சற்றுச் சிந்திக்க ஆரம்பித்தார்.

''அது தான் நான் சொல்வது பொய் என்று அவனே சொல்கிறானே ஐயா... பின் என்ன சந்தேகம். அது பொய் தானே!'' என்றார்.

''சரி... அவன் சொல்வது பொய் என்று சொல்கிறீர்கள். அவன் என்ன சொல்கிறான். தான் சொல்வது பொய் என்கிறான். அப்படியெனின் அவன் பொய் என்று சொல்வது பொய்! என்றால் அது 'உண்மை' என்று தானே ஆகும்.!'' என்று ஆரம்பித்தார்.

அவர் மெதுவாகத் தலையைச் சொரிய ஆரம்பித்தார். சரி கச்சேரி களைகட்ட ஆரம்பித்து விட்டது என்பதைப் புரிந்துவிட்ட மற்றவர் இன்னொரு கதை சொல்கிறேன் கேளுங்கள் என ஆரம்பித்தார்.

''ஒரு புத்திசாலியான பெரியவர் ஏதோ தவறு செய்து விட்டார். அவரை விசாரணை செய்த நீதிபதி எல்லாம் முடிந்தும் கடைசியாக அவரைப் பார்த்து ''உங்கள் கடைசி விருப்பத்தைச் சொல்லலாம்; ஆனால் ஒரு விடயம் ''நீங்கள் உண்மையைச் சொன்னால் உங்களைத் தூக்கிலே போடுவோம். பொய் சொன்னால் உங்களுடைய தலை வெட்டப்படும்''! என்று கூறினார்.

அந்தப் புத்திசாலியான பெரியவர் உடனே ''அப்படியென்றால் என் தலை வெட்டப்படும்! என்றார்.

இதைக்கேட்டதும் தண்டனையைத் தள்ளி வைத்துவிட்டார் நீதிபதி. ஏன் தெரியுமா?

அவர் தலையை வெட்டிவிட்டால் அவர் செய்த குற்றம் உண்மை என்று ஆகும்.

அது உண்மை என்று ஆனால் அவரைத் தூக்கிலே போட்டிருக்க வேண்டும்.

சரி அவரைத் தூக்கிலே போடலாம் என்றால் அவர் சொன்னது ''பொய் என்று ஆகிவிடும். அதனால் அவர் தலை வெட்டப்பட்டிருக்க வேண்டும்.!

இப்பொழுது அவரை என்ன செய்வது? என்று என் எதிரிலே இருப்பவரைக் கேட்டேன்.

உண்மையாகவே அவர் இப்பொழுது குழம்ப ஆரம்பித்தார். ஒரு மாதிரியாக என்னைப் பார்த்தார்.

இதற்கு நான் என்ன செய்ய முடியும். அவர் தானே இந்த மாதிரியான தகவலைக் கேட்டார்.

இப்பொழுது நான் சொன்ன உதாரணங்கள் ஏற்படுத்தும் குழப்பம் இருக்றதே... அதற்குப் பெயர் தான்.

முரண் உரை அல்லது புரியாத புதிர்!

அறிவியல் துறையிலேயும் இந்த மாதிரியான சிக்கல்கள் ஏற்படுவது உண்மை.

பத்திரிகையில் இவற்றைப் பற்றி நிறையவே சொல்லியிருக்கிறார்கள். அதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும்.

இப்பொழுது எதிரில் இருக்கிறாரே நண்பர் அவருக்குத் திருப்தியாக இருக்கிற மாதிரி ஒரு கதை சொல்வோம்.

மனிதனொருவன் ஒரு பெரிய கடைக்குள் நுழைந்தார். அது ஒரு திணைக்களங்களின் களஞ்சியம். அவர் எதையோ யாருக்கும் தெரியாமல் எடுத்து விட்டார் போல இருக்கிறது.

அவரைக் கூப்பிட்டுத் தனியாக விசாரித்தார் அந்தக் கடைக்காரன். அந்த மனிதன் அவரைப் பார்த்து

''அது சரி கடைக்காரரே! நான் உங்கள் கடைக்குள்ளே நுழைந்ததை நீங்கள் பார்த்தீர்களா?'' என்றார்.

''ஆமாம், பார்த்தேன்'' என்றார் கடைக்காரன்

''அப்படி என்றால் கடைக்குள் நுழைந்தது நான்தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றார் அந்த மனிதன். கடைக்காரன் குழம்ப ஆரம்பித்தார்.

இந்தக் கதையைச் சொல்லிவிட்டு எதிரிலே இருந்த நண்பரைப் பார்த்தேன்

ஆரம்பத்திலே தலையை பிய்த்துக் கொள்கிற மாதிரித் தானே ''தகவல்'' கேட்டார். இப்ப அவர் சட்டையையும் சேர்த்து பிய்த்துக் கொண்டு தெருவிலே இறங்கிப் போய்க் கொண்டிருத்தார். இனி மேல் இந்த மாதிரியான குழப்பங்கள் நிறைந்த தகவல்களைக் கேட்க மாட்டார் என்று நினைக்கிறேன்.

கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் கை இழந்த பெண்ணுக்கு வேறொருவரின் கை பொருத்திச் சாதனை



கலிபோர்னியாவில் உள்ள மருத்துவர்கள் இந்தக் கை மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டு சாதனை படைத்துள்ளனர். அமெரிக்காவின் கலிபோர்னிய மாநிலத்தைச் சேர்ந்த 26 வயதுப் பெண்ணொருவர் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விபத்தில் சிக்கியதில் இவரின் வலது கை துண்டானது. இதனால் அவரது இயல்பு வாழ்க்கை மிகவும் மோசமானது. நண்பர்கள் ஆலோசனையின் பேரில் கை மாற்று அறுவைச் சிகிச்சை குறித்துக் கேள்விப்பட்டுத் தன் பெயரைப் பதிவு செய்தார்.

இந்த நிலையில் இறக்கும் நிலையில் இருந்த ஒருவரிடம் இருந்து கை அகற்றப்பட்டிருப்பதாகக் கலிபோர்னியாவில் உள்ள றொனால்ட் ரீகன் மருத்துவமனைக்குத் தகவல் கிடைத்தது. ''கை தேவை'' என்று பதிவு செய்து வைத்திருந்த 50 பேரும் உடனடியாகத் தகவல் கொடுத்து வரவழைக்கப்பட்டனர்.

அனைவரிடமும் முதற் கட்டச் சோதனைகள் நடந்தன. எலும்பு இணைப்பு, செல் மற்றும் திசு என எல்லா வகையிலும் இந்தப் பெண்ணின் கையும் தானமாக வந்திருந்த கையும் ஒத்துப் போனது.

ரீகன் வைத்தியசாலையின் மருத்துவர் கொடிஅசாரி தலைமையில் சுமார் 14 மணி நேரம் அறுவை சிகிச்சை நடந்தது. இப்போது அவருக்குக் கை நன்கு பொருந்தி இருப்பதாகவும் அவர் உடல்நலம் தேறி வருவதாகவும் மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

## லோகோ உருவாக்க நினைப்பவர்களுக்கு உதவும் இணையம்

புதிதாக நிறுவனம் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள் முதல் வேலையாகச் செய்வது 'லோகோ' என்று சொல்லக் கூடிய நிறுவனத்திற்கான ஒரு அடையாளச் சின்னத்தை உருவாக்குவதுதான். இதற்காகப் பல நிறுவனத்தின் லோகோவைத் தேடிச் சென்று பார்த்து எப்படி வடிவமைத்திருக்கின்றனர்.

நாம் இதைவிடச் சிறப்பாக எப்படி வடிவமைக்கலாம் இது போன்ற கேள்விகளுக்கு விடையாக ஒரு தளம் உள்ளது.

நிறுவனம் ஆரம்பித்துவிட்டது. ஆனால் இன்றுவரை நாம் 'லோகோ' என்ற ஒன்று வைக்கவில்லை. இதற்குக் காரணம் நம் நிறுவனத்திற்குத் தகுந்தாற் போல் லோகோ கிடைக்கவில்லை என்று சொல்லும் அனைவருக்கும் உங்கள் விருப்பப்படி நீங்கள் எந்தத்துறை சார்ந்தவராக இருந்தாலும் உங்களுக்கு உதவுவதற்காக ஒன்றல்ல இரண்டல்ல 20 லட்சம் லோகோக்களை நொடியில் தேடித்தர பிரத்தியேகமாக ஒரு தளம் உள்ளது.

இந்தத் தளத்திற்குச் சென்று Search என்ற கட்டத்திற்குள் எந்தக் கருவிற்கான லோகோ உருவாக்க வேண்டுமோ அந்த வார்த்தையைக் கொடுத்து Seek என்ற பொத்தானைச் அழுத்தினால் அடுத்து வரும் திரையில் நாம் கொடுத்த தலைப்பிற்குத் தகுந்தபடி பல வகையான லோகோக்கள் கிடைக்கும்.

இதிலிருந்து நம் நிறுவனத்தின் லோகோ எப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்ற ஒரு யோசனை தோன்றும். நிகண்டிப்பாக இந்தப்பதிவு லோகோ உருவாக்க நினைக்கும் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

## கடலுக்கு அடியில் மலேரியாவைத் துரத்தும் பாசி

நுளம்புகள் மூலம் பரவும் ப்ளாஸ்மோடியம் பொல்சிபரம் என்ற ஒட்டுண்ணியின் மூலம் மலேரியா நோய் பரவுகிறது. உலகம் முழுவதும் மலேரியாக் காய்ச்சலால் உயிரிழப்போர் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்த வண்ணம் உள்ளது.

இதைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளும் உலக சுகாதார நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறன. புதுப்புது மருந்துகளும் அறிமுகமாகி வருகின்றன.

அந்த வகையில் ''சீ வீட்'' என்ற கடல் தாவரம் மலேரியாக் காய்ச்சலை எளிதாகக் கட்டுப்படுத்தும் என்ற தகவல் தற்போதைய ஆய்வில் வெளியாகி உள்ளது. ஜார்ஜியா தொழில்நுட்பக் கழக ஆராய்ச்சியாளர்கள் இது தொடர்பாக நீண்ட ஆய்வு மேற்கொண்டனர்.


''சீ வீட்'' தாவரத்தில் உள்ள இரசாயனப் பொருள் மலேரியாக் கிருமிகளை அழிக்கும் திறன் பெற்றுள்ளது.

அதிக மருத்துவக் குணங்களைக் கொண்ட இத்தாவரம், பங்கஸ் என்ற காளான் வகை நோய்கள் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கும் அருமருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஆய்வு முடிவுகள் இறுதிக்கட்ட ஒப்புதலுக்குக் காத்திருக்கின்றன. அதன் பிறகே இந்தத் தாவர மருந்து சந்தைப்படுத்தப்பட உள்ளது.

இதன் மூலம் மலேரியாவால் ஏற்படும் உயிரிழப்பு வெகுவாகத் தடுக்கப்படும் என்று நம்பப்படுகிறது.

## தோல் புற்றுநோயைக் கண்டுபிடிக்க உதவும் உபகரணம்



தோல் புற்றுநோயை உடனடியாகக் கண்டறிய டைனி லேசர் என்ற சிறிய கருவி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புற்றுநோயைத் தடுப்பதற்கான கருவிகள் மற்றும் அதற்கான சிகிச்சைகளை முன்கூட்டியே கண்டுபிடிப்பதற்கான கருவிகள் பற்றி அமெரிக்காவின் ட்யூக்ஸ் பல்கலைக்கழகம் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொண்டு வருகிறது.

தோல் புற்றுநோயை முன்கூட்டியே கண்டுபிடிக்க லேசர் கருவியை உருவாக்கும் ஆராய்ச்சியில் தோமஸ் மேத்யூ தலைமையிலான குழுவினர் ஈடுபட்டனர்.

இதுபற்றி மேத்யூ கூறியதாவது, தோலில் மச்சம் அளவுக்குச் சிறிதாக உள்ள புள்ளிகளையும் இக்கருவி மூலம் சோதனை செய்து தோல் புற்றுநோய்க்கான அறிகுறி உள்ளதா என்பதை உடனடியாகக் கண்டறிய முடியும்.

மெலனோமா என்ற தோல் புற்றுநோய் உயிர்க்கொல்லி நோய். விரைவாகப் பரவும் தன்மை கொண்டது.

தற்போது உள்ள கருவிகள் மூலம் ஓரளவு பரவிய பிறகே இந்நோயைக் கண்டுபிடிக்க முடிகிறது.

சந்தேகத்துக்கு இடமான தோற் பகுதியில் டைனி லேசர் கருவி மூலமாக மின்காந்த அலைகள் செலுத்தப்படும். இதில் இருந்து வெளியேறும் இரட்டை லேசர் கதிர்கள் நோய்ப் பாதிப்பு மற்றும் நோய்த்தன்மையைத் துல்லியமாகக் கணிக்கும்.

தோல் புற்றுநோயை உருவாக்கும் கிருமிகளின் தன்மை மற்றும் எண்ணிக்கையையும் இதன் மூலம் துல்லியமாகக் கணிக்க முடியும்.

## கூகுளின் அடுத்த பிரமாண்ட தயாரிப்பு Google cloud connect

கடந்த சில வாரங்களுக்கு முன் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் Office மென்பொருளிற்கும் Google Docs இற்கும் இடையில் கூகுள் ஒரு பாலத்தினை ஏற்படுத்தி உள்ளது.

இந்த வசதியானது அனைத்துக் கூகிள் பாவனையாளர்களும் உபயோகப்படுத்தும் வகையில் வெளிவந்துள்ளது.

இந்த Google cloud connect இனை கணினியில் நிறுவிக் கொள்வதன் மூலம் கூகுள் கணக்கில் காணப்படும் ஆவணங்களை மைக்ரோசொப்ட் office மென்பொருளினைப் பயன்படுத்தித் தொகுக்கலாம்.

மேலும் நாம் ஆவணங்களைத் தொகுக்கும் போது அவற்றை நேரடியாக எமது கூகுள் டொக்ஸ் கணக்கில் சேமிக்கும் வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. இந்தச் சேவையானது தற்போதைக்கு விண்டோஸ் இயங்கு தளத்திற்கு மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.

அவ்வாறு நிறுவிய பின்னர் மைக்ரோசொப்ட் இல் ஏதாவது ஒரு மென்பொருளினைத் திறந்து குடிஞ்ண டிண என்பதை க்ளிக் செய்து கூகிள் கணக்கினை உள் நுழைதல் செய்வதன் மூலம் நமது ஆவணங்களைக் கூகுள் டொக்ஸில் சேமித்துக் கொள்ள முடியும்.

இந்தப் புதிய சேவையினைப் பயன்படுத்தி உங்கள் ஆவணங்களைப் இணையத்தில் சேமித்து வைப்பதன் மூலம் எங்கும் எப்போதும் ஆவணங்களினைப் பயன்படுத்தும் வசதியினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமபிரான் தரிசித்த இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இலங்கையில் காத்தல் கடவுளான விஷ்ணுவும் அழித்தல் கடவுளான சிவனும் ஒரே இடத்தில் இருந்து அருள்பாலிக்கும் அற்புதத் திருத்தலங்களில் ஒன்றாக இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயம் விளங்குகின்றது.

இராமபிரான் இலங்கை நோக்கி வானர சேனைகளுடன் வருகை தந்ததற்கும் இந்த ஆலயத்துக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இராமபிரான் சீதாப்பிராட்டியை சிறை மீட்பதற்காக வானர சேனைகளுடன் இலங்கை நோக்கி இந்து சமுத்திரத்தின் ஊடாகப் புறப்பட்ட போது சமுத்திராதேவி வழிவிட்டதாகவும் இந்த நேரத்தில் இந்தப்படைகள் பாதை அமைத்துத் தரை இறங்கிய இடம் கட்டைக்காடு எனவும் கூறப்படுகிறது. கற்களைக் கொண்டு அமைக்கப்பட்ட இறங்குதுறைப் பாதை என்பதே கட்டைக்காடு என மருவி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு வந்திறங்கிய இராமபிரானும் வானர சேனைகளும் தங்கியிருந்த இடங்களில் ஒன்றாக எம்பெருமானது ஆலயப் பிரதேசமும் கூறப்படுகிறது. இராமபிரானும் 20 வெள்ளம் வானர சேனைகளும் படையெடுத்து வந்ததாகவும் இந்த 20 வெள்ளம் வானர சேனைகளும் தாகசாந்தி செய்வதற்கு இராமபிரானால் மல் என்னும் தனது வில்லின் மூலம் குடிதண்ணீர் பெற்ற இடம்தான் மல்வில் சுனை எனவும் கூறப்படுகிறது. இங்கே 20 வெள்ளம் என்பது அக்கால வழக்கில் உள்ள அளவுப் பிரமாணமாகும். இதற்குரிய எண்ணிக்கையளவு பற்றிக் கூறமுடியாதுள்ளது. இராமபிரானால் வில் ஊன்றி நீர்பெற்றதனால் இன்றும் இடையுறாது வற்றாது, நறுமணம் கமழும் நீராகக் காணப்படுகிறது. இவ்வாறு இராமபிரான் தங்கிச் சிவபூசை செய்வதற்காகப் பிரதிஷ்டை செய்யப்பட்டதனால்தான் சிவனும் சக்தியும் இன்றும் இங்கிருந்து அருளாட்சி புரிகின்றனர். இந்த ஆலயம் இராமபிரானால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவனும் சக்தியும் கொண்ட சிவாலயமாகவும் இராமபிரான் இங்கு தங்கியதன் பயனாக விஷ்ணுவாலயமும் அமையப்பெற்றதாகக் கூறப்படுகிறது.



இதனைவிட ஆலயத்தின் கிழக்குப் புறமாக ஒரு காதவழி தூரத்தில் இலட்சுணான் வைரவர் என்னும் காவல் தெய்வம் உள்ளார். இராமபிரானுக்குச் சேவகனாகத் தம்பியின் படைகள் இவ்விடத்தில் தங்கியிருந்ததாகவும் அதனால் இலட்சுணான் என மருவி வந்ததாகவும் கூறப்படுகின்றது. இங்கு மருதமர நிழலில் வைரவப் பெருமான் எழுந்தருளி இருந்து காவல் தெய்வமாக வீற்றிருக்கின்றார்.

இந்த ஆலயத்தின் தென்கிழக்கில் வற்றாத சுனை ஒன்று தாமரைத் தடாகமாகக் காணப்படுகின்றது எனவும் இராமபிரான் தங்கி சிவபூசை செய்த மல்வில் சுனையில் பெறப்பட்ட செந்தாமரை மலர்களாலேயே இங்கு பூஜை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதனைவிட அழகிய மஞ்சள் நிறப் பூக்களை வாரி இறைக்கும் கொண்டல் மரங்களும் கடப்ப மரங்களும் சுனையைச் சூழ இன்றும் காணப்படுகின்றன. இந்த மலர் இனங்களும் சிவபூசையின் பொருட்டு இராமபிரானால் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இன்றும் கூட சிவ, விஷ்ணு ஆலயத்தில் காவல் தெய்வமாக வைரவப் பெருமானும் வீற்றிருப்பது ஆலய வரலாற்றில் ஓர் அங்கமாகும்.

ஆலயச் சுற்றாடலில் மூன்று இடங்களில் வைரவப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு காவல் செய்வதற்கு வழி செய்யப்பட்டிருந்தது. இதில் நவக்கிரக நாயகர்களுடன் வீற்றிருப்பது இலட்சுணான் வைரவரே என மூதாதையர்களால் கூறப்பட்டுள்ளது.

மேலும் இராமபிரானும் வானர சேனைகளும் இங்கு தங்கிச் சென்றதனாலும் கிருஷ்ண பெருமானின் அவதாரப் புருஷராகிய இராமபிரானின் சேனைகளை நினைவு கூரும் வகையிலும் கடந்த தசாப்தங்களில் அனுமாரே எம்பெருமானைத் தாங்கிச் செல்லும் வாகனமாக இருந்து வந்துள்ளார். ஐந்து தலைகளைக் கொண்ட சர்ப்பவாகனமும் அனுமானும் கருடனுமாக மூன்று வாகனங்கள் இங்கே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இவ்வாறு வந்த வானர சேனைகளின் வழித் தோன்றல்களே இன்றும் ஆலயச் சூழலிலுள்ள மருத மரங்களில் மந்தி இனமாகத் தாவிக் கொஞ்சி விளையாடுகின்றன. இதேபோல ராஜாளி கள் மருத மரங்களில் கூடுகள் அமைத்து கருடனாக வாழ்ந்து வருகின்றன. எம்பிரான் தலத்தில் இவ்வாறு வானர சேனைகள் இளைப்பாறி சிவ பூஜைகளை நிறைவு செய்த சிவமூர்த்தி விஷ்ணு ஆலயம் என்பதனால் இன்றும் சிவசக்தி ஆலய வாசலில். நந்திப் பெருமானும் பலிபீடமும் காவல் தெய்வமாக வைரவப் பெருமானும் உள்ளனர்.

இவ்வாறு இளைப்பாறிச் சென்ற இராமபிரானும் சேனைகளும் தமது பயணத்தினைத் தொடங்கும் போது கணங்களுக்கும் அதிபதியாம் முதல் தெய்வம் மூத்த கணபதியை வழிபட்டுச் செல்வதற்காகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட வரே பச்சிலைப்பள்ளியின் வடகிழக்கு அந்தத்தில் அருளாட்சிச் செய்து வரும் மண்டலாய் செல்லப்பிள்ளையார் எனக் கூறப்படுகிறது. இவ்வாறு இலங்கை மணித் திருநாட்டில் இராமபிரானால் பிரதிஸ்டை செய்யப்பட்ட மண்டலாய் செல்லப் பிள்ளையார் ஆலயம் இன்றும் கூட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலயமாகக் காணப்படுகின்றது.

(தொடரும்)

# மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்

தொகுப்பு:ஜயந்தன்




இலங்கை அந்நியர் ஆட்சியின் பிடியில் சிக்குண்டிருந்த வேளை நாடு முழுவதும் கிறிஸ்தவமதம் ஆதிக்கம் செலுத்தியது. சைவமும் தமிழும் அழிந்திடுமோ என்ற நிலையிலிருந்து தமிழருக்கு ஆங்கிலக் கல்வியைப் பெறவேண்டிய கட்டாய காலமாக இருந்தது. அதுவும் கிறிஸ்தவ மிஷனரிமாரினால் நடத்தப்படும் கல்விக் கூடங்களிலேயே ஆங்கிலக் கல்வி பெற வேண்டி இருந்ததால் தமிழும் சைவமும் போதிக்கக் கூடிய திண்ணைக் கல்விமுறை கூட அருகியிருந்தது.

அரசும் மிஷனரிப் பாடசாலைகளுக்கே உதவி செய்தது. அடிப்படைக் கல்வியும் பாடசாலைகளும் ஆசிரியர்களும் மிஷனரிமாரின் அகப்பைகளிலிருந்துதான் வெளிவர வேண்டும். ஆறுமுகநாவலர் தமிழ், சைவம் இரண்டையும் [illegible] துயிர் பெறத் தன்னை அர்ப்பணித்தும் அந்த முயற்சியைத் தொடர ஏனையோரால் முடியவில்லை. நாவலர் குரு பரம்பரையின் தோன்றல் உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை ஆசிரியர் மட்டுவில் வடக்கில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார். ஆனால் அதுவும் மிஷனரிமாரின் கைக்கு மாறியது.

அந்தக் காலத்தில் மட்டுவில் பகுதியில் சைவமும் தமிழும் சங்கீதமும் இணைந்து கற்கக் கூடிய பாடசாலையொன்றை நிறுவ சரசாலையூர் வித்துவான் கந்தையாப்பிள்ளை இராமலிங்கம் என்பவர் முயற்சிகளை மேற்கொண்டார். இவரின் முயற்சியை மட்டுவில் சரசாலை மக்கள் ஏளனப்படுத்தினர். அத்துடன் இது நடவாத காரியம் எனவும் வர்ணித்தனர். கைதடியைச் சேர்ந்த மகா சாமர்த்தியம் படைத்தவரும் பிரபுவுமாகிய முத்துக்குமாரசாமி மணியகாரர் கூட இவரை அழைத்து இந்த முயற்சியைக் கைவிடுமாறு அறிவுரை கூறியிருந்தார். மட்டுவிலைச் சேர்ந்த கல்விமான் லோச் செல்லப்பா கூட வித்துவான் சித்தசுவாதீனமற்றவர் எனக் கூறியதுண்டாம். வித்துவான் [illegible] யைக் [illegible] உடல், பொருள், ஆவி அனைத்தையும் தான் ஆரம்பித்த பாடசாலைக்கென்றே அர்ப்பணித்தார்.

வித்துவானின் முயற்சியின் பயனாக 1917 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமி அன்று மட்டுவில் வடக்கில் கமலாசனி வித்தியாலயம் என்னும் நாமத்துடன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

வித்துவானின் இரண்டு வயது மகளான கமலாசனி இறந்தமையால் அந்தக் குழந்தையின் நினைவாக ஆரம்பிக்கப்பட்டது. வித்துவானின் மாமனாகிய சபாபதி சரவணமுத்து திண்ணைப் பள்ளிக்கூட முறையில் மாணாக்கர்களைச் சேர்த்து கல்வி புகட்டினார்.

1918 ஆம் ஆண்டு தராதரம் பெற்ற தலைமை ஆசிரியராக வே.சுப்பையாவும் வேறு சில ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டு அரச கல்விசார் முறைப்படி நடைபெறத் தொடங்கியது. 1921 ஆம் ஆண்டு அரச நன்கொடைக்குரிய பணமும் கிடைத்தது. இந்தக் கால கட்டத்தில் மிஷனரிமாரின் எதிர்ப்புகளால் பல சோதனைகளைச் சந்திக்க நேரிட்டது.

எதிர்ப்புக்களின் மத்தியில் அயற்கிராமங்களில் வாழ்ந்த சைவப் பெரியார்கள் பலரின் உதவியுடன் பாடசாலையை வளர்த்து வந்தார். இவரின் விடாமுயற்சியும் ஆர்வமும் தூண்டுதலாலும் மட்டுவில் சாந்தநாயகி, சரசாலை ஸ்ரீகணேசா சரஸ்வதி ஆகிய வித்தியாலயங்கள் தோற்றம் பெற்றன.

இந்த வித்தியாலயம் பிற்காலத்தில் தாமும் தமது சுற்றமுமே அனுபவிக்கப்பட வேண்டியது என்று எண்ணாது அதன் அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டு சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் வித்துவான் ஒப்படைத்தார். பாடசாலை அவரது தூய இருதயம் போல பெருவளர்ச்சி கண்டுள்ளது. வித்தியாலயத்தில் கற்ற பலர் சைவத் தமிழ் அறிஞர்களாகவும் வித்துவான்களாகவும் உருவாகியுள்ளனர்.

மட்டுவிலில் உள்ள பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளைச் சாவகச்சேரியில் உள்ள கல்லூரிகளில் இணைப்பதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

அந்த நிலையிலும் இவ்வித்தியாலயத்தில் இணையும் மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டல்களை வழங்க வித்தியாலய அதிபர்கள் தவறியதில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

(தலைவர், அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், சமூக சேவையாளனுமாகிய அமரர் சின்னத்தம்பி கணபதிப்பிள்ளையின் மறைவுச் செய்தி கேட்டு துயரடைகின்றோம்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அமரரின் குடும்பத்தினருக்கும் அனலைதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி, யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை.

(28-20-22)

## பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.11

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் இலவச தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பு வாராந்தம் சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.

இந்தப் பயிற்சி வகுப்பில் ஆர்வமுடைய மாணவர்கள் பங்குபற்றலாம் என மன்றத்தின் அமைப்பாளர் சி.கிருஸ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (ஐ-313)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சுகன்ஜா சதீஸ்குமார் அவர்களின் பாசமிகு தந்தை


### வீரகத்தி கனகசபை

இறைபதமடைந்த செய்திகேட்டு துயரடைவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

(39-19-20)

## கண்ணீர் அஞ்சலி



லயன்

### ஐயாத்துரை இராமச்சந்திரா

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்தகாரர் RDA, RDD, உரிமையாளர், ஆஷா சிவில் எஞ்சினியரிங் வேக்ஸ், முன்னாள் தலைவர் - லயன்ஸ் கழகம், உரும்பிராய்)

தொலைபேசியில் உங்கள் செய்திகேட்டு
ஒரு நிமிடம் திகைத்து நின்றோம் ஐயா
ஆறாது உங்கள் மறைவு

உங்கள் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு உங்கள் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

க.கனகநாயகம் குடும்பத்தினர்
உமா பன்சி உரிமையாளர்.

(28-20-22) (1424)

## தவறி விட்டது

கலட்டிலேன், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியுடைய உதயகுமார் வதனராஜ் என்பவரது தேசிய அ.அட்டை (840694593v), விசேட அ.அட்டை, பல்கலைக்கழக அ.அட்டை, இரத்த வங்கி அட்டை ஆகியவை பேர்கடன் கோண்டாவிலுக்கும் இணுவிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P: 0773910355, 0213206190

## ஈசன் திருமண சேவை

அரச பதிவு: VW/Fin/R/I/13/2008 உள்நாடு, வெளிநாடு டாக்டர், எஞ்சினியர், ஆசிரியர், வர்த்தகர் உட்பட அனைத்து மணமக்களும் எம்மிடம் உள்ளனர். நேரடியாகவோ, தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: ஈசன் திருமண சேவை,
வட்டு வடக்கு, வட்டுக்கோட்டை.
T.P: 0773618507,0217900315 Fax: 0212223734
Email: esan thirumana servi@gmail.com.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1976 ஆம் ஆண்டு பிறந்த மூலம் நட்சத்திரம், பாவம் 33 கொண்ட பட்டதாரி ஆசிரியருக்கு அரச உத்தியோகம் உடைய அழகிய மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:0774950873

## விற்பனைக்கு

- TV
- Secutrity Camera System
- YAMAHA Sound Speaker & PIONEER Stereo Amplifier
- Generator 3 Kv (Petrol - Self Start)
- Air Condtioner Flip Model
- PANASONIC Intercom System (8+3)
- வியாபார நிலையத்துக்குரிய கண்ணாடி சோகேஸ்

தொடர்பு: 0750394503

பிற்பகல் 3.00 - 6. 00 மணிவரை பார்வையிடலாம்

## 31ஆம் நாள் நினைவுடன் நன்றி கூறுகின்றோம்



அமரர்

### அன்ரன் லோகர்சன் மகேந்திரன்

அன்னை மடியில்
13.06.1977


கர்த்தருக்குள்
09.02.2011

அன்னாரின் அகாலமரணச் செய்தி கேட்டு நாம் கலங்கி நின்ற வேளையில் உடனடியாக வந்து எமக்கு ஆறுதல் தந்தவர்களுக்கும், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் எம்மை நேரடியாகச் சந்தித்தும் கடிதங்கள், அனுதாப அட்டைகள், தந்தி, மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலை பேசியூடாக ஆறுதல் தெரிவித்த பாடசாலைகள், நிறுவனங்கள், ஆலயங்கள் மற்றும் அனைவருக்கும், இணைய பக்கங்களிலும் பத்திரிகைகளிலும் அஞ்சலிகள், மரணஅறிவித்தல்கள் பிரசுரித்தோருக்கும், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் உணவூட்டி எம்முடன் கூட நின்று தம் தோளில் தாங்கிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் தாமாக பணவுதவிகளை வழங்கிய அன்ரனின் நண்பர்கள் மற்றும் அனைவருக்கும், இறுதி வழிபாடுகள், உடல் அடக்கம் போன்ற விடயங்களில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பங்களித்து ஆறுதல் கூறிய அனைத்து சபை குருக்களுக்கும் அருட்சகோதரிகளுக்கும், பொது நிலையாளருக்கும் அவரின் விபத்து நடைபெற்ற வேளையில் கூட நின்று ஒத்தாசை வழங்கியோருக்கும் உடல் விரைவாக இலங்கை வந்தடைய உதவிய அனைத்து நண்பர்களுக்கும் டுபாய் வங்கி பணியாளர்களுக்கும் கூடவே வந்த நண்பர்களுக்கும் தொடர்ந்தும் எமக்கு பலவிதங்களிலும் உதவியளித்துவரும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இதைத் தயவாய் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிநிற்கின்றோம்.

அளவெட்டி தேவாலயம்,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி. (28-20-22)

அன்ரன் லோகர்சனின்
பெற்றோர், சகோதரர்கள்.

# கண்ணீர் அஞ்சலி



தொலைபேசியில் வந்த செய்தி கேட்டு தொலைத்து நின்றோம் ஒரு நிமிடம் - ஏழைகளின் நண்பனாக இருந்த உங்கள் மரணம் கேட்டு மனம் உடைந்து போனோம் ஒரு கணம். கள்ளம், கபடம் இல்லா வெள்ளை மனம் படைத்த இராமச்சந்திர ஐயா இறைவனா உங்களை பறித்துச் சென்றான் பாதியிலே. பாசத்தின் பங்காளி நீங்கள். உங்களைப் பார்ப்பது எப்போது நாங்கள்.

அன்னாரின் மறைவை எண்ணி வேதனையில் வாடி நிற்கும்
அவரது குடும்பம் மற்றும் உறவினர்களுக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரர்

### லயன் ஐயாத்துரை இராமச்சந்திரா

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் R.D.A,
ஆஷா சிவில் என்ஜினியறிங் வேக்ஸ்)

லலிதா ரெக்ஸ்
உரிமையாளரும் ஊழியர்களும்
(5,6 நவீன சந்தை, யாழ்ப்பாணம்)

(28-19-24) (ஓ/576612)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகத்தில் அபிவிருத்தி அவசியமான ஒன்று ②

கடல் உணவுகளைப் பிடித்தல் அவற்றைப் பதப்படுத்தல், சந்தைப்படுத்தல் என்பவற்றை மையப்படுத்தி மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற் கொள்ளலாம். பெருந்தொகையானோருக்கு வேலை வாய்ப்பையும், வருமானத்தையும் புரோட்டின் உணவையும் வழங்கக்கூடிய வாய்ப்புக்கள், வளங்கள் இப்பகுதியில் அதிகமாகவுள்ளன.

வருடம் பூராவும் பலமான காற்று வீசுவதனால் காற்றாடிகள் மூலம் சக்தி வளங்களை உருவாக்கலாம். அதே போல் சூரிய ஒளி, கடல்நீர் ஓட்டங்களையும் பயன்படுத்தி மாற்று சக்தி வளங்களை உருவாக்கலாம். கடற்கரை சேற்றுப் பகுதிகளில் ''மீதேன்'' வாயு உற்பத்திக்கான வாய்ப்புக்கள் உள்ளன. கடற்கரையோரத்தின் சில பகுதிகளில் மணல் நிறைந்திருப்பதால் சவுக்கு மரங்களை நாடலாம். இதன் மூலம் பல்வகைப் பயன்கள் கிடைக்கின்றன. பயிர்ச்செய்கை மற்றும் மீள் நடுகை மூலம் விறகைப் பெறலாம். மண்ணின் நிலை விருத்தியடைந்து, பலப்படுத்தப்படுகின்றது. சூழலின் கடுமையான தன்மை தணிகிறது.

சிறு காடுகளை வீளர்க்கக்கூடிய நிலைமை தீவகத்தில் காணப்படுகின்றது. பூவரசமரம் மிகவும் இலகுவாக வளரக்கூடிய தாவரமாகும். இன்று இந்த மரத்துக்கான தேவை அதிகரித்துள்ளது. வீட்டு வேலிகள் மதிலாக மாற்றமடைந்ததன் காரணமாகத் தகனக் கிரியைகளுக்கும் பூவரசமரம் பெற முடியாத சூழல் உருவாகிவருகின்றது. இந்த மரத்தேவையைப் பூர்த்திசெய்வதற்குத் தீவகத்தில் சிறுசிறு காடுகளை வளர்க்கலாம்.

சுற்றுலாத்துறையை நோக்கினால் எழிலும் பல்வேறு வடிவங்களுடனும் அமைந்துள்ள சிறிய சிறிய தீவுகளும் அவற்றின் சூழலும் முறையான பராமரிப்புடன் பண்பாட்டு அம்சங்கள் சிதையாமல் பாதுகாக்கப்பட்டால் சுற்றுலாத் தொழில் துறை அபிவிருத்தியடையும்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் கடமையாற்றிய நோர்வே நாட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி ஒருவர் கடந்த சில வருடங்களுக்கு முன்பு பருத்தித்தீவை முழுமையாகக் கொள்வனவு செய்ய விருப்பம் தெரிவித்திருந்தார். இவ்வாறான தீவுக் கூட்டங்கள் "நோட்டிக்" நாடுகளில் காணப்படுமாயின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியின் உச்சத்திலிருக்கும் என்ற கருத்தையும் அவர் வெளியிட்டிருந்தார்.

பனைமர அபிவிருத்தி பற்றிப் பரவலாக இன்று பேசப்படுகின்றது. சனத்தொகைப் பெருக்கமும் தேவைகளின் மாற்றமும் பனம்பொருள் உற்பத் திப் பொருள்களின் தேவையை முதன்மைப்படுத்துமா? என்ற வினாவும் எழுப்பப்படுகின்றது. இருந்தபோதும் பன்னெடுங்காலமாகத் தீவக மக்களை போசித்த வளமாகப் பனைமரம் காணப்படுகின்றது. சமகாலத் தேவைகளுக்கு ஏற்ப இந்தத் தொழில்துறையை வளர்த்தெடுக்க வேண்டிய தேவையும் மீள் நடுகைமூலம் தக்கவைக்க வேண்டிய அவசியமும் உள்ளதால் அதற்கு மிகவும் பொருத்தமான தீவகத்தில் இது தொடர்பான் திட்டமிடல் அவசியமானதாகும்.

தீவகத்தின் அபிவிருத்திக்கு அடிப்படையாக அமைவது சிறந்த முறையில் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படும் போக்குவரத்தும், தொலைத்தொடர்பு வசதியுமாகும். கடல்வழி, தரைப் போக்குவரத்து வலைப்பின்னல் அபிவிருத்தி செய்யப்படவேண்டும்.

ஒரு பிரதேசத்தின் மிகப்பெரிய மூல வளமும் புதுப்பிக்கப்படக்கூடிய மூல வளமும் அப்பகுதியின் மக்களாவர். இந்த வளத்தில் பெரும் பகுதியை இப் பிரதேசம் துரதிஷ்டவசமாக இழந்து விட்டது. இதனால் அபிவிருத்திக்கு ஏற்றதான மக்கள்தொகை அதாவது மத்திமமான சனத்தொகை (Optimum Popu- lation) அவசியமாகும். தீவுப்பகுதியைப் பொறுத்தவரை குறைவான சனத் தொகையே (Under Population) காணப்படுகின்றது. இது பிரதேச அபிவிருத்திக்குப் போதுமான மனித வளத்தைப் பெறுவதில் சிக்கல்களை ஏற்படுத்தலாம். தொழில்நுட்ப விருத்தியடைந்த மனித வளத்தை ஏற்படுத்தவேண்டும். அதற்கான ஏற்பாடுகள், வாய்ப்புக்கள் பற்றி சிந்திக்கவேண்டியுள்ளது.

இப்பிரதேசத்தின் மீது விசேட கவனம் செலுத்தப்படாவிட்டால் சனத் தொகை மேலும் குறைவடையும். இந் நிலைமை

**ஜே.எக்ஸ். செல்வநாயகம்**

இப்பிரதேச அபிவிருத்தியில் மட்டுமல்ல மாவட்ட, மாகாண அபிவிருத்திகளிலும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்.

எனவே வடக்குமாகாண அபிவிருத்தி பற்றி சிந்திக்கும் அனைவருக்கும் இப்பிரதேசத்தின் உள்ளார்ந்த வளங்களை மதிப்பீடுசெய்து ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரித்து சீராகக் குறிப்பிட்ட காலத்துக்கு நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். (முற்றும்)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மார்ச் 11

மாதகல் பாணாகவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தின் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை உற்சவம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 18 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 19ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 20 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் இடம் பெறும். (ற-313)

* * *

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தினமும் காலை 8.30 மணிக்கு திருவிழா ஆரம்பமாகிப் பிற்பகல் ஒரு மணி வரையும், மாலைத் திருவிழா மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இரவு 10 மணியுடனும் நிறைவுபெறும். தேர்த்திருவிழா எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கும் மறுநாள் சனிக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 8மணி முதல் சங்காபி ஷேக மும் நடை பெறவுள்ளன. (ற-28)

* * *

சுதுமலை ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுமுன் தினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.12 நாள்கள் தொடர்ந்து திருவிழா நடைபெறும். 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் 19 ஆம் திகதி தீர்த்தத் திருவிழவும் நடைபெறும். (ற-311)

* * *

சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தின் வருடாந்தத் திருநாள் திருப்பலி எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகினது. தினமும் மாலை 5 மணிக்கு நவநாள் ஆராதனைகள் செபமாலை வழிபாட்டுடன் நடைபெற்றுவருகிறது. (ற-51)

* * *

வட்டு.சங்கரத்தை வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிறு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் (ஓ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் நாகப்பர் செல்லையா**

(Retired Physiotherapist)

மண்ணில்: 06.10.1935
விண்ணில்: 10.02.2011

கடந்த 10.02.2011 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் பல வழிகளிலும் இதயபூர்வமாக உதவிய உற்றார், உறவினர்கள், மாணவர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டதுடன் நினைவஞ்சலி வெளியிட்டு சிறப்பித்த பாடசாலைச் சமூகத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைக் கூறி நிற்கின்றோம். இன்று (11.03.2011) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் (மருதங்கண்டு, கரவெட்டி கிழக்கு) நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மருதங்கண்டு,
கரவெட்டி கிழக்கு. (48,19,26)


பிரிவால் துயருறும்: செல்லையா இளங்கோ (ஆசிரியர், பா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) மற்றும் குடும்பத்தினர்

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்:
01.06.1933

மறைவு:
11.03.2008



**அமரர்**
**இளையவன்**
**வல்லிபுரம்**

(இளைப்பாறிய அதிபர், சமாதான நீதிவான், சமூக சேவையாளர், உதயன் செய்தியாளர்)

பார் போற்ற வாழ்ந்த எம் பாசமிகு தந்தையே!
பதைபதைப்பாறவில்லை ஆண்டு மூன்றாகியும்
வாழ வழிகாட்டிய வம்சத் தலைமகனே! மறைந்தும்
வாயாறாது ஊர் புகழ்ந்ததால் பெருமையடைந்தோம்
இருண்டு கிடந்த சமூகத்திற்கோர் பொறியாகினீரே
இருக்கிறோம் நாம் உம் புகழ் இன்னும் சொல்ல
அமைதியாகி மூன்றாண்டாகினும் - உறுதியே
அகிலம் போற்ற வாழ்வோம் உம் அருமை வித்துக்கள்

'ஜெயமஹால்',
மானிப்பாய் வடக்கு, மானிப்பாய். குடும்பத்தினர்

(48,21,23)

## தவறிவிட்டது

இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த சின்னத்துரை தயாபரன் என்பவரின் தே.அ.அ. (883412192V) கோண்டாவில் சந்திக்கும் இருபாலைச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 0779602709

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978 திருவோணம் முதலாம் பாதம், பிரபல தனியார் நிறுவனமொன்றில் Manager ஆக தொழில் புரியும் சொந்தமாகவும் வியாபார ஸ்தாபனம் நடத்தும் மணமகனுக்கு மணமகள் தேவை. 7இல் செவ்வாய், தனி 77 [illegible]
C/O இல.4121, உதயன் பணிமனை

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்:
26.07.1931
விண்ணில்:
13.02.2008

திதி: சப்தமி
(11.03.2011)



**அரியாலையூர் அமரர்**
**செல்லையா**
**அருளம்பலம்**

(முன்னாள் கணக்காளர்/ முகாமையாளர்)

(Jaffna Co-Operative Stores Ltd & A Baur & Co)

ஆண்டுகள் மூன்று சென்றதப்பா
ஆறவில்லை எங்கள் மனம்-அன்று
நிஜமாய் நின்ற எங்கள் தெய்வம்- இன்று
நிழலாய்த் தோன்றி மறைவதேன் -அப்பா
என்றும் உம் நாம வரிகளுடனே
எங்கள் வாழ்க்கைப் பயணம் தொடருதப்பா
என்றும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்

2 ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா. (48,19,20)

588/2, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் விஷமண், தண்ணீரால் 400 இற்கும் அதிகமான குழந்தைகள் உயிரிழப்பு

அபுஜா, மார்ச் 11

நைஜீரியாவின் வடக்கில் சட்டத்திற்குப் புறம்பாகத் தோண்டப்பட்ட சுரங்கங்களில் இருந்து, வெளியான ஈயம் கலந்த விஷ மண், தண்ணீர் ஆகியவற்றில் விளையாடிய 400இற்கும் அதிகமான குழந்தைகள் இதுவரை பலியாகியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. 500 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து நைஜீரியா தேசிய அவசர நிலை மேலாண்மை ஏஜன்சி இயக்குநர் ஜெனரல் முகம்மது சானி சிதி, ஈயம் கலந்த விஷம், இதனுடன் தொடர்புடைய தங்கச் சுரங்கம் பற்றிய தேசிய கருத்தரங்கில் பேசினார்.

அப்போது, ''ஈயம் கலந்த விஷத்தால் கடந்த நவம்பர் மாதத்திலிருந்து 400இற்கும் அதிகமான குழந்தைகள் பலியாகி உள்ளனர். 500இற்கும் மேற்பட்ட குழந்தைகள் ஜம்பாரா மாநில வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

குழந்தைகளின் உடம்பில் போதிய நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாததால் எளிதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சில குழந்தைகளின் கை, கால்கள் முடக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், பலி எண்ணிக்கை 400ஐ கடந்துள்ளது'' என்றார்.

கடந்தாண்டு ஜூன் மாதம் சட்டத்திற்குப் புறம்பாக, சுரங்கங்களில் இருந்து எடுக்கப்பட்ட ஈயம் கலந்த பொருள்களை நுகர்ந்து பார்த்த 163 பேர் பலியாகினர் என்று மூத்த சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்நாட்டின் சுகாதாரத்துறை தலைமை கொள்ளை நோய் ஆராய்ச்சியாளர் ஹென்றி ஆக்பன் கூறுகையில், ''சட்டத்திற்குப் புறம்பான சுரங்கங்கள் அருகே ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீர், ஈயம் கலந்த மண் ஆகியவற்றில் விளையாடிவிட்டு விரல்களை வாயில் வைக்கும் குழந்தைகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்'' என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் வடக்கிலுள்ள, கிராம மக்களின் உடம்பில் அதிகளவில் ஈயம் பாதிப்பு இருப்பதை சுகாதார அதிகாரிகள் பரிசோதனையில் கண்டறிந்துள்ளனர்.



வியட்நாம் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பராகுவே நாட்டின் அதிபர் பெர்ணான்டோ லுகோ மெண்டஸ் (வலது) தலைநகர் ஹனோயில் வியட்நாம் அதிபர் நுகுயன் மின்ச் டிரியட்(இடது)டை சந்தித்தார்.

# 'மல்லிகைப் புரட்சி' செய்தி சேகரிப்பு: சீனாவில் ஊடகவியலாளர் மீது தாக்குதல்

பீஜிங், மார்ச் 11

சீனாவின் முக்கிய நகரங்களின் பிரதான இடங்களில் நடப்பதாக அறிவிக்கப்பட்ட, அரசுக்கு எதிரான 'மல்லிகைப் புரட்சி' பற்றி செய்தி சேகரிக்கச் சென்ற வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் சீனப் பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். பலர் மிரட்டலுக்கு ஆளாகினர்.

டுனீஷியாவில் நிகழ்ந்த 'மல்லிகைப் புரட்சி' போல சீனாவிலும் நடக்கவேண்டும் என்றும், வாரந்தோறும் ஞாயிறன்று பீஜிங், ஷாங்காய் உள்ளிட்ட பல்வேறு நகரங்களிலுள்ள பிரதான இடங்களில் மக்கள்கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவேண்டும் என்றும், 'பேஸ்புக்' உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் அடையாளம் தெரியாத சிலர் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்தப் பிரசாரத்தால் உந்தப்பட்ட சிலர், பீஜிங் உள்ளிட்ட நகரங்களில் கடந்த இருவாரங்களுக்கு முன்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றனர். ஆனால் அவர்களைப் பொலிஸார் அப்புறப்படுத்தி சிலரைக் கைது செய்தனர்.

கடந்த 6ஆம் திகதி ஷாங்காய் நகரில், ஆர்ப்பாட்டம் நடக்கவிருந்த 'பீஸ் சினிமா' என்ற இடத்தில் ஐரோப்பிய, ஜப்பானிய பத்திரிகையாளர்கள் செய்தி சேகரிப்பதற்காகத் திரண்டிருந்தனர்.

அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சாதாரண உடை அணிந்திருந்த பொலிஸார் அவர்களைக் கைதுசெய்து, எங்கோ ஓர் இருட்டறையில் இரண்டு மணி நேரம் அடைத்து வைத்தனர்.

இது போல பல பத்திரிகை யாளர்கள் அடித்து உதைக்கப்பட்டோ அல்லது அவர்களின் வீடுகளுக்குள் புகுந்து பொலிஸாரால் மிரட்டப்பட்டோ மிகக் கேவலமாக நடத்தப்பட்டனர்.

அவர்களில் நியூயோர்க் ரைம்ஸ், அசோசியேட்டட் பிரஸ், சி.என்.என்., என்.பி.சி., ப்ளூம்பெர்க் போன்ற செய்தி நிறுவனங்களின் நிருபர்களும் அடங்குவர்.

கடந்த 6ஆம் திகதி பீஜிங்கில் ஆர்ப்பாட்டம் நடக்க இருக்கிறது என அறிவிக்கப்பட்ட, வாங்பூஜிங் (சீன மொழியில் மல்லிகை என்று பொருள்) என்ற இடத்தில், சீருடையிலும், சாதாரண உடையிலும் நூற்றுக் கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

பலர் தெரு கூட்டுபவர்கள், பொது மக்கள் உடைகளில் இருந்தனர். சிலரது கைகளில் இரகசிய புகைப்படக்கருவிகள் இருந்தன. 'மெக்டொனால்ட்' வளாகம் முன்பாக, போலியாக ஒரு கட்டுமானம் எழுப்பப்பட்டு அதன் வழியாகவே மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இது குறித்து அறிக்கை வெளியிட்ட பீஜிங் நகர அரசு செய்தித்தொடர்பாளர், ''மல்லிகைப் புரட்சி சீனாவில் தோல்வி அடைந்துவிட்டது. ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் மக்களின் விருப்பத்திற்கேற்பவே செயற்படுவர்'' என்று தெரிவித்தார்.

## ஜப்பானில் நில நடுக்கம்

டோக்கியோ, மார்ச் 11

ஜப்பானில் நேற்று அதிகாலை பலமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிச்சர் அளவுகோலில் 6.0 ஆக பதிவாகி உள்ளது.

அதனைத் தொடர்ந்து மீண்டும் ஏற்பட்ட நிலநடுக்கம் 6.8 ஆக பதிவாகி உள்ளது.

இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை.

ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்சர் அளவு கோலில் 7.3 ஆக பதிவாகி இருந்தது.

இதனால் லேசான சுனாமி அலைகள் உருவானன. தொடர்ந்து நிலநடுக்கம் ஏற்பட்டு வருவதால் சுனாமி அச்சத்தில் மக்கள் [illegible]ளனர். (ம)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை
திருமதி இராஜினிதேவி கணேஸ்குமார் அவர்களின்
அன்புக் கணவர்

**வல்லிபுரம் கணேஸ்குமார்**

அவர்களின் மறைவினையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
(19,23,30) யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் வீதி பராமரிப்பு
ஒப்பந்தகாரராக கடமையாற்றிய

**லயன் ஐயாத்துரை இராமச்சந்திரா**

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
ஒப்பந்தகாரர் RDA, RDD)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், குடும்ப உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாகாணப் பணிப்பாளர் அலுவலகம் (வடக்கு),
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம். (19,23,30)

மாகாணப் பணிப்பாளர் (வடக்கு),
பிரதம பொறியியலாளர்,
சக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.



## ஆனைக்கோட்டை உத்துங்க விநாயகர் ஆலயம்

## கேள்வி அறிவித்தல் - 2011

கீழ்க் குறிக்கப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள் ''இக்ராட்'' நிறுவனத்தில் தரம் ''C8'' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் கடைசித்திகதி - 18.03.2011 வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிவரை
கேள்விகள் ஏற்கப்படும் இறுதித்திகதி - 19.03.2011 சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி - 19.03.2011 சனிக்கிழமை பி.ப. 5 மணிவரை

பொருளாளர் க.ஜெயபாலனுடன் தொடர்புகொண்டு கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவும் கேள்விகள் தயாரிக்கப்பட்டு ''தலைவர், உத்துங்க விநாயகர் ஆலய பரிபாலன சபை, ஆனைக்கோட்டை'' என முகவரியிட்டு உத்துங்க விநாயகர் ஆலய மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலிடவேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கக்கூடிய வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணம் |
|---|---|---|---|
| 01 | ஆனைக்கோட்டை உத்துங்க விநாயகர் ஆலயம் தேர்த்தரிப்பிடம் அமைத்தல் | ரூ.50,000.00 | ரூ.750.00 |

உத்துங்க விநாயகர் ஆலயம்,
ஆனைக்கோட்டை.
10.03.2011 (1411) (20,23,30)

இராசரத்தினம் அரு[illegible]
தலைவர், உத்துங்க விநாயகர் ஆலய
பரிபாலனசபை, ஆனைக்கோட்டை.



## 2 ஆம் ஆண்டு நினைவு நாள்

**செல்வன் முருகவேல் ஸ்ரீவக்ஷன்**

மண்ணில் 2000.08.17 விண்ணில் 2009.03.11




பத்துமாதம் சுமந்துபெற்று பாலூட்டி
பக்குவமாய் வளர்த்தெடுத்து
பள்ளிசென்று நீ பயின்று
பாரினிலே உயர்ந்திடுவாயென
பார்த்திருந்த வேளையிலே நீயும்
பாதியிலே எமை பரிதவிக்கவிட்டு
பாதைமாறி சென்றதும் ஏனோ
பாரினிலே மீண்டும் பிறப்பாயென
பாசமுடன் பார்த்திருக்கும் உன்

திதி: ஷஷ்டி

அப்பா, அம்மா, சகோதரன்,
சகோதரிகள், உறவினர்.

**திருமதி முருகேசு தங்கமுத்து**

மண்ணில் 1942.12.21 விண்ணில் 2009.03.11



தங்கமான மனசும் தயவான பார்வையும்
தன்னிகரில்லா தாயான தயாசீலியே
தங்கமுத்து எனும் நாமம் கொண்டு
தனித்துவமாய் இருந்த நீங்கள்
பெற்றவரைப்போல் மற்றவரையும்
பெருமையுடன் வளர்த்தெடுத்தீர்
தக்க தருணம் வந்ததென்று நீரும்
தரணிவிட்டு சென்றதேன்
பெரியம்மா என நாம் அழைக்க
பெருமையுடன் வரும் நாள் இனி எப்போ

திதி: ஷஷ்டி

124, [illegible]சன் றோட்,
[illegible]நகர், கிளிநொச்சி. (19,23,30)

சகோதரி, பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவுதமாலாவில் செப்ரெம்பர் தேர்தல்

கவுதமாலா சிட்டி, மார்ச் 11

லத்தீன் அமெரிக்க நாடான கவுதமாலாவில் வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெற உள்ள அதிபர் பதவிக்கான தேர்தலில் சான்ட்ரா டோரஸ் போட்டியிடவுள்ளார்.

இவர் தற்போதைய ஆளும் கட்சி சார்பாக போட்டியிடவுள்ளார். இவரின் போட்டி குறித்து முன்னாள் ஜெனரல் ஓட்டோ பெர்ரஸ் மோலினா எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

சான்ட்ரா வெற்றி பெற்றால் குடும்ப ஆட்சி முறை நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்து வருகின்றன.

சான்ட்ரா தேர்தலில் நிற்பதை சட்டத்தின் மூலம் தடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு சான்ட்ராவின் சட்டத்தரணி எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

சான்ட்ரா அனைவருக்கும் அறிமுகமானவர். பரிச்சயமானவரும்கூட அவர் ஏழ்மைநிலையை போக்குவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளார்.

அவர் வெற்றி பெற்றால் சமூக அமைதியும் நம்பிக்கையும் ஏற்படும் என சட்டத்தரணி தெரிவித்தார். சான்ட்ரா வெற்றி பெற்றால் கவுதமாலா நாட்டின் முதல் பெண் அதிபர் என்ற பெருமை அவருக்குக் கிடைக்கும். (ம)

# பிரான்ஸின் உதவியை நாடும் ஆபிரிக்க நாடுகள்

போராட்டம் வெடித்துள்ள லிபியாவில் இருந்து மாலியன் பகுதி மக்கள் தாய்நாடு திரும்ப பிரான்ஸ் உதவிக்கரம் நீட்டியுள்ளது. லிபியாவில் இருந்து தப்பி ஓடி வந்த 166 மாலியன் மக்கள் பமாகோவில் அகதிகளாக அடைக்கலம் புகுந்தனர்.

இவர்கள் தாய்நாடு திரும்ப பிரான்ஸ் உதவியது. 4000 எகிப்தியர்கள் தங்களது சொந்த நாட்டிற்கு திரும்ப பல்வேறு ஐரோப்பிய நாடுகள் விமானத் தொடர்பு ஏற்படுத்தி உள்ளன என்று பிரான்ஸ் பிரதமர் பிரான்காய்ஸ் பிலான் தெரிவித்தார். பிரான்ஸ் அமைச்சக அதிகாரி பெர்னார்டு வாலேரோ செய்தியாளர்களிடம் கூறுகையில், "தங்கள் நாட்டு மக்கள் பத்திரமாக திரும்ப பிரான்ஸ் உதவ வேண்டும் என மாலியன் அரசு கேட்டுக் கொண்டது" என்றார். லிபியா போராட்டத்தால் அவதிப்படும் ஆபிரிக்க மக்களை அழைத்துவர பிரெஞ்சு நாட்டின் உதவியை பிலான் நாடினார். ஐரோப்பிய கூட்டு நடவடிக்கை மூலம் 4 ஆயிரம் எகிப்தியர்கள் பத்திரமாக அழைத்து வரப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

## தற்கொலைத் தாக்குதலில் 34 பேர் மரணம்

பெஷாவர், மார்ச் 11

பாகிஸ்தானில், பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் 34 பேர் கொல்லப்பட்டனர். 50 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில், பெஷாவர் நகருக்கு அருகே உள்ள பழங்குடியினர் வசிக்கும் அடிசாய் என்ற கிராமத்தில், தலிபான் இயக்கங்களுக்கு எதிரான அமைதிக்குழுவின் தலைவர் ஹக்கீம் கான் வசித்து வந்தார்.

இவரது மனைவி அண்மையில் காலமானார். அவரது இறுதிச் சடங்குகளில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் 200 இற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ஊடுருவிய பயங்கரவாதி ஒருவன், தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளார். (ம)



கம்போடியாவின் பினோம் பென்ச் நகரில் உள்ள அதிபர் மாளிகையில் கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தின விழாவில் பிரதமர் ஹன்சென் மற்றும் அவரது மனைவி பன் ராணி கலந்து கொண்டனர்.

## கடத்தல் கும்பல் மிரட்டல்; பொலிஸ் அதிகாரி தப்பி ஓட்டம்

மெக்சிகோசிட்டி, மார்ச் 11

மெக்சிகோவில் போதை மருந்து கடத்தல் கும்பலால் கொலை மிரட்டல் வந்ததைத் தொடர்ந்து அந்த நாட்டின் துணிச்சலான இளம் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவர் அமெரிக்காவில் அடைக்கலம் தேடி ஓட்டம் பிடித்துள்ளார்.

லத்தீன் அமெரிக்க நாடான மெக்சிகோ, போதை மருந்து கடத்தலுக்கு பெயர் பெற்ற நாடாகும். இங்கு கும்பல்களிடையே அடிக்கடி மோதல் ஏற்படுவதால், தினம் தினம் பலர் கொடூரமான முறையில் கொல்லப்படுகின்றனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் 3 ஆயிரம் பேர் வன்முறை சம்பவத்தால் கொல்லப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. மெக்சிகோவில் சின்ஹூவா்ஹூவா, சியூடாட், பராக்ஸிடிஸ் ஜி.கரிரோ ஆகிய மாகாணங்கள் தான் போதை மருந்து கடத்தலில் மிகவும் பாதிக்கப்பட்ட மாகாணங்களாகும்.

இவை அமெரிக்காவில் எல்லைப்பகுதியில் உள்ளன. இந்நிலையில் மெக்சிகோவின் தலைமை பொலிஸ் அதிகாரியாக மேரி சோல் வேலாஸ் கார் ஸியா என்ற 20 வயது பெண், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் நியமிக்கப்பட்டார். இவர் குற்றவியலில் பட்டப்படிப்பு படித்தவர்.

இவரின் அதிரடி நடவடிக்கையால் போதை மருந்து கடத்தல் கும்பல்களின் அட்டகாசம் சற்று குறைந்து காணப்பட்டாது. இதனால் மெக்சிகோவின் துணிச்சலான பெண் பொலிஸ் அதிகாரி என பெயர் பெற்றார்.

எனினும் கடந்த சில நாள்களாக பணிக்கு வராமலும், விடுமுறை எதுவும் அறிவிக்காமலும் இருந்ததால் திடீரென பதவி நீக்கம் செய்யப்பட்டார். (ம)

# மும்மர் கடாபியின் இரண்டாவது மனைவிக்கு சொந்தமாக விமானப்போக்குவரத்து நிறுவனம்

## சொத்துகளில் 20 தொன் தங்கம்

துபாய், மார்ச் 11

லிபிய ஜனாதிபதி கடாபியின் இரண்டாவது மனைவி சொந்தமாக விமானப்போக்குவரத்து நிறுவனம் நடத்துகிறார். அத்துடன் 20 தொன் தங்கமும் 30 பில்லியன் டொலர் அளவுக்கு சொத்துகளும் அவரிடம் உள்ளன எனத் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரியவந்துள்ளது.

இது குறித்து அல்-அரேபியா எனும் தொலைக்காட்சி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், "லிபிய ஜனாதிபதியான மும்மர் கடாபி ஜனாதிபதி பதவியிலிருந்து விலகக்கோரி கடந்த பெப்ரவரி 14ஆம் திகதியிலிருந்து பொதுமக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடாபி பதவி விலகாமல் தொடர்ந்து பிடிவாதம் காட்டி வருகிறார். இதனால் நாட்டில் ஏற்பட்டுள்ள வன்முறையில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். பிரான்ஸை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும், போர்க்குற்றங்களுக்கு எதிரான சர்வதேச கூட்டுக்குழு எனும் அமைப்பு மேற்கொண்ட ஆய்வில் கடாபியின் இரண்டாவது மனைவியான சாயிப் பர்காஸ் அல்- பராசி என்பவர், கடாபியின் உதவியால் சொந்தமாக விமானப்போக்குவரத்து நிறுவனம் நடத்தி வருகிறார்.

இந்த நிறுவனம் லிபியாவின் அரசு விமானப்போக்குவரத்து நிறுவனத்திற்கு இணையாக உள்ளது. இதற்குப் பல்வேறு சலுகைகளை கடாபி வழங்கியுள்ளார். சாயிப் பர்காஸ் அல்-பராசியிடம் 20 தொன் தங்கமும், அசையா சொத்துகள் என 30 பில்லியன் டொலர் சொத்துகளும் உள்ளன.

இவர் 1971ஆம் ஆண்டு தாதியாகத் தனது வாழ்க்கையை ஆரம்பித்தார். அப்போது உடல் நலக்குறைவால் சிகிச்சை எடுத்துக்கொள்ள வந்த கடாபி, இவரை பார்த்ததுடன் காதலித்துள்ளார். அதே ஆண்டில் இருவரும் திருமணம் செய்துள்ளனர். இவர்களுக்கு 6 மகன்களும், ஒரு மகளும் உள்ளனர்.

இவ்வாறு அந்த தொலைக்காட்சிச் சேவை வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# எலிசபெத்தின் பேர்த்திக்கு ஜூலையில் திருமணம்

லண்டன், மார்ச் 11

இங்கிலாந்து இளவரசர் வில்லிமஸ்- மெடில்டன் திருமணத்தைத் தொடர்ந்து, ராணி இரண்டாம் எலிசபெத்தின் பேர்த்தியின் திருமணம் ஜூலை 30 ஆம் திகதி நடக்கவுள்ளதாக லண்டன் அரண்மனை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து இளவரசர் சார்லஸின் மகன் வில்லியம்ஸ் அவரது கல்லூரி தோழி கேதிமெடில்டன் திருமணம் வரும் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி வெஸ்ட்மின்ஸ்டர் மாகாணத்தில் உள்ள நூறு ஆண்டு பழமையான தேவாலயத்தில் நடக்கிறது.

இதற்கான ஏற்பாடுகள் கோலாகலமாக நடந்து வருகின்றன.

இந்த நிலையில் இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் மூத்த மகள் இளவரசி ஆன்னியின் மகள் ஜாரா பிலிப் என்பவருக்கும், இங்கிலாந்து ரக்பி விளையாட்டு கிளப் அணியின் கேப்டனான மைக்டின்டால் என்பவருக்கும் எடின்பெர்க் மாகாணத்தில் ஜூலை 30 ஆம் திகதி நடக்கவுள்ளதாக அரண் மனை செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து திருமண வரவேற்பு நிகழ்ச்சிகள் லண்டனின் ஸ்கொட்லாந்து மாகாணத்தில் மன்னர் மாளிகையான ஹோலிரோஸ் மாளிகையில் நடக்கவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

# பூமிக்கு அருகில் வருகிறது சந்திரன்; நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்புள்ளதாம்

அடுத்த வாரம் வானில் ஓர் அதிசயம் நிகழப் போகிறது. 18 ஆண்டுகளுக்குப் பிறகு சந்திரன் மீண்டும் பூமிக்கு அருகில் வரப்போவதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இதனால் நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இந்த மாதம் 19 ஆம் திகதி சந்திரன் பூமிக்கு மிக அருகில் வரப்போகிறது.

அதாவது பூமிக்கும், சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம் 2 லட்சத்து 21 ஆயிரத்து 556 மைலாக குறையும். கடந்த 1992 ஆம் ஆண்டுக்குப் பிறகு பூமியும், சந்திரனும் மிக அருகில் வரப்போகின்றன. வரும் பௌர்ணமி அன்று சந்திரன் வழக்கமான அளவை விட சுமார் 90 சதவீதம் பெரியதாக இருக்கும்.

அடுத்த மாத பௌர்ணமி வரை இதை பார்க்க முடிவதுடன் வெளிச்சமும் அதிகமாக இருக்கும். 'சூப்பர்மூன்' என்ற இது போன்ற நிகழ்வு இதற்கு முன்பு 1955, 1974, 1992 மற்றும் 2005 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்டது. அதாவது 18 முதல் 19 ஆண்டு இடைவெளியில் நிகழ்கிறது.

வானில் அதிசயங்கள் நிகழும் போது நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு உள்ளிட்ட இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். எனினும் பூமியில் நிகழும் மாற்றங்களுக்கு சந்திரன் எந்த வகையிலும் காரணமாக அமையாது.

கடற்கரை நகரங்களில் மட்டும் வானிலையில் சிறு மாற்றங்கள் நிகழ வாய்ப்பு உள்ளது. குறிப்பாக கடலில் அலை அதிகரிக்கும் என வானிலை ஆய்வு மைய அதிகாரி ஜான் கெட்லே தெரிவித்துள்ளார். கடந்த 2005 ஆம் ஆண்டில் 'சூப்பர்மூன்' ஏற்பட்ட போது அவுஸ்திரேலியாவின் டார்வின் நகரை டிரேசி என்ற சூறாவளி புரட்டிப் போட்டதாகவும், 1974 இல் இந்தோனேசியாவில் சுனாமி ஏற்பட்டதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமன்றத் தேர்தலில் எமது அணி மாற்றாட்சி காண்பதில் உறுதியாக இருக்கிறது

## தா.பாண்டியன் பேட்டி



சென்னை, மார்ச் 11

சட்டமன்றத் தேர்தலில் நாம் அமைத்த அணி மாற்றாட்சி காண்பதில் உறுதியாக இருக்கிறது. இவ்வாறு தெரிவித்தார் கம் யூனிஸ்ட் கட்சித் தலைவர் தா.பாண்டியன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.ஆறுமுகம் தலைமை வகித்தார்.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் மத்தியக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர்.நல்லகண்ணு, மாநிலச் செயலாளர் தா.பாண்டியன், துணைச்செயலாளர்கள் சி.மகேந்திரன், கோ.பழனிச்சாமி, தேசியக் குழு உறுப்பினர் ஏ.எம்.கோபு மற்றும் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இந்தக்குழுக் கூட்டத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த போது பாண்டியன் தெரிவித்தவை வருமாறு:

காங்கிரஸ் கட்சியும், தி.மு.க.வும் கூட்டு அணி சேர்ப்பதில் மோதிக் கொண்டதில் இந்தத் தேர்தல் தொடக்க வேலையைக் கூடக் குழப்பத்திற்கு ஆளாக்கப் பார்த்தனர். அமைச்சரவையை விட்டு தி.மு.க. வெளியேறுவதாகவும், தொகுதி உடன்பாட்டிற்கு அவர்கள் கேட்கிற தொகுதிகளைத் தர இயலாத அநியாயக் கோரிக்கை என்றெல்லாம் பேசிவிட்டு ஒரே நாளில் இரண்டு பேருமே மீண்டும் கூட்டுச் சேர்ந்ததாகவும் அறிவித்துள்ளனர்.

இது அவரவர் கட்சிகளுக்கு உள்ள சுதந்திரம். ஆனால் இந்த சட்டமன்றத் தேர்தலில் இரண்டு பேரும் சேர்ந்தே பதில் சொல்ல வேண்டிய குற்றவாளிக் கூண்டில் நிற்கிறார்கள்.

எனவே அந்தக் கட்சிகளை அவர்களின் தவறான கொள்கைகளை தோற்கடித்து, மாற்றாட்சி காணவேண்டும் என்கின்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த முடிவை நிறைவேற்றுவதற்காக நாங்கள் அமைக்கக் கூடிய, மக்களைத் திரட்டக் கூடிய அணியைப் பொறுத்த வரையில் நாங்கள் எடுத்த முடிவில் உறுதியாக இருக்கிறோம்.


இந்த அணி தொடர்ந்து நீடிக்கும். அது மக்களுடைய அணியாக, அநியாயங்களைக் துடைத்தெறிந்து மாற்றங்காணவேண்டும் என்கிற வேட்கை உள்ள அணியாக இருப்பதால் அது வெற்றி பெறும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்தத் தேர்தலில் பணபலம், அதிகார துஷ்பிரயோகம், சமூக விரோதிகளுடைய வெறியாட்டம் ஆகிய அனைத்தையும் சந்திப்பதற்காகக் கட்சியை தயார் படுத்துவதற்கு, திட்டமிடுவதற்கு எங்களுடைய மாநில நிர்வாகக் குழுக் கூட்டம் தொடங்கியிருக்கிறது.

ஊழல் மன்மோகன்சிங் ஆட்சி ஆறு முறை டீசல், பெற்றோல் விலைகளை உயர்த்தி இருக்கிறது. மேலும் உயர்த்துவதற்காகத் திட்டமிட்டு, எண்ணெய் துறையினருக்கே அந்த அனுமதியையும் வழங்கியிருக்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக அது கடைப்பிடித்து வரும் கொள்கைகளில் ஊழல் மலிந்து நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்பட்டதற்கு நானே பொறுப்பு என்று ஒப்புக்கொள்கின்ற அளவிற்கும், ஆனால் ஏன் நடந்தது என்று தான் தெரியவில்லை, யார் செய்தார் என்றும் தெரியவில்லை என்று பதில் கூறக்கூடிய ஒரு அவலநிலையும் ஒரு பிரதமருக்கு ஏற்பட்டுள்ளதை இந்த நாடு அண்மையில்தான் கண்டது. என்றார் அவர்.

# ஈழத்திலிருந்து எடுத்து வந்த மண்ணை நெற்றியில் பூசிக் கொண்டார் வைகோ



சென்னை, மார்ச் 11

ஈழத்திலிருந்து எடுத்து வந்த மண்ணை வாங்கி நெற்றியில் பூசிக் கொண்டார் வைகோ.

உலக மகளிர் தினவிழா ம.தி.மு.க. சார்பில் எழும்பூரில் உள்ள தாயகத்தில் கொண்டாடப்பட்டது. இதில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கலந்து கொண்டார்.

இந்த விழாவில் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் நோய்வாய்ப்பட்டு இருந்தபோது அவரைச் சந்தித்து தஞ்சை திரும்பிய பத்மாவதி என்ற பெண் கௌரவிக்கப்பட்டார். அவருக்கு வைகோ நினைவுப் பரிசு வழங்கினார்.

பத்மாவதி ஈழத்திலிருந்து மண் எடுத்து வந்திருந்தார். அந்த மண்ணை வைகோவிடம் கொடுத்தார். அதை அவர் நெற்றியில் பூசிக் கொண்டார்.

பின்னர் வைகோ கூறியவை வருமாறு -

பெண்கள் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் அமெரிக்காவில் பெண்கள் அமைப்பு போராடியது. அந்த நாளை உலக மகளிர் தின விழாவாகக் கொண்டாடுகிறோம். தமிழக வரலாற்றில் பெண்களுக்கு முக்கிய பங்கு உள்ளது.

இந்த விழாவில் இலங்கையில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் தாயாரை சந்தித்துத் திரும்பிய தஞ்சைப் பெண் பத்மாவதிக்கும் பாராட்டு விழா நடந்தது.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. கடந்த நான்கரை ஆண்டுகால ஆட்சியில் 4,787 கொலைகள் நடந்துள்ளன. பெண்கள் கற்பழிக்கப்படும் சம்பவம் அதிகரித்துள்ளது. - இவ்வாறு வைகோ கூறினார்.

# ரங்கசாமி கட்சிக்கு அங்கீகாரம் வழங்கியது தேர்தல் ஆணையம்

புதுச்சேரி, மார்ச் 11

புதுச்சேரியில் முன்னாள் முதல்வர் என். ரங்கசாமி தொடங்கியுள்ள அகில இந்திய என்.ஆர். காங்கிரஸ் கட்சிக்கு இந்தியத் தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் புதன்கிழமை அங்கீகாரம் வழங்கியது.

இந்தக்கட்சியின் பொதுச் செயலர் வி. பாலன், கட்சியின் வழக்கறிஞர்கள் பிரிவைச் சேர்ந்த நிர்வாகி பக்தவச்சலம் ஆகியோர் டில்லியில் தேர்தல் ஆணையத்திடம் இருந்து இதற்கான சான்றிதழ்களைப் பெற்றனர்.

தன்னுடைய புதிய கட்சிக்கு தேர்தல் ஆணையம் அங்கீகாரம் கொடுத்தது குறித்து இக்கட்சியின் தலைவரும் முன்னாள் முதல்வருமான ரங்கசாமி கூறியவை வருமாறு:

நாம் ஆரம்பித்த புதிய கட்சிக்கு தேர்தல் ஆணையம் அங்கீகாரம் கொடுத்துள்ளமை மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்ற அடிப்படையில் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலைச் சந்திப்போம். தேர்தலுக்கு மட்டுமின்றித் தொடர்ந்து இந்தக்கட்சியை வலுப்படுத்துவோம் - என்றார் அவர்.


# 10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 31.01.1919
மறைவு: 01.03.2001
திதி: சஷ்டி11.03.2011

அமரர்
**கதிரன் முதலி**




நெஞ்சிருக்கும் வரை
நாம் மறவோம்
உம் நினைவால்
வாழ்ந்திருப்போம்!

குடும்பத்தினர்.
விடத்தற்பளை, உசன், மிருசுவில்.

(48,20,22)



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
26.07.1971

மறைவு:
11.03.2009

**அமரர் கந்தசாமி கமலநாதன்**

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே!
அப்பா நீங்கள் மறைந்து
ஆண்டோ இரண்டாகி விட்டதப்பா!
உங்களின் பிரிவை எங்களால் தாங்க முடியவில்லை
என்அன்புக் கணவரே
எங்கள் அருமை அப்பாவே!
எங்கேயப்பா உங்கள் முகத்தை இனிக் காண்போம்

(48,25,26)

செட்டித்தெரு,
பருத்தித்துறை.


என்றும் உங்கள் நினைவுடன்:
அன்பு மனைவி - ரூபி, பிள்ளைகள் -
சோபிதன், சுரேன், ரூபன்.



# கண்ணீர் அஞ்சலி

லயன் **ஐயாத்துரை இராமச்சந்திரா**

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்தகாரர் RDA, RDD, உரிமையாளர், ஆஷா சிவில் என்ஜினியரிங் வேக்ஸ், முன்னாள் தலைவர், லயன்ஸ் கழகம், உரும்பிராய்)



கடந்த 08.03.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப நண்பன் லயன் ஐயாத்துரை இராமச்சந்திரா அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினர், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.


நண்பன் க.மகாலிங்கம்
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(48,19,20)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக மன்மோகனிடம் விரைவில் விசாரணை

## பொதுக் கணக்குக் குழு தீவிரம்



புதுடில்லி,மார்ச்11

ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கிடம் விரைவில் பொதுக் கணக்குக் குழு விசாரணை நடத்தவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்த ஊழல் காரணமாக அரசுக்கு ரூ. 1.76 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டதாக கணக்குத் தணிக்கைத் துறை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக, நாடாளுமன்றக் கூட்டுக்குழு, பொதுக் கணக்கு குழு, சி.பி.ஐ., அமுலாக்கப் பிரிவு மற்றும் வருமான வரித்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

உயர்நீதிமன்றத்தின் நேரடிக் கண்காணிப்பில் விசாரணை நடத்தி வரும் சி.பி.ஐ., எதிர் வரும் 31ஆம் திகதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய உள்ளது.

அதற்குள் ஸ்பெக்ட்ரம் ஊழலில் தொடர்புடைய அனைவரிடமும் விசாரணையை நடத்தி முடித்து விட சி.பி.ஐ. அதிகாரிகள் தீவிரமாகி உள்ளனர்.

அதுபோல அமுலாக்கப் பிரிவு அதிகாரிகள், ஸ்பெக்ட்ரம் ஊழல் பணம் உலகின் எந்தெந்த நாடுகளில் பதுக்கப்பட்டுள்ளது என்பதை கண்டு பிடிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக பல நாடுகளின் ஒத்துழைப்பை அமுலாக்கப் பிரிவு நாடி உள்ளது.

இதற்கிடையே நாடாளுமன்றப் பொதுக் கணக்குக் குழுவினரும் ஸ்பெக்ட்ரம் முறைகேடு விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளனர். ஏற்கனவே இந்தக் குழு பல்வேறு அரசுத் துறையினரிடம் விசாரணை நடத்தி முடித்து விட்டது.

அடுத்து பிரதமரின் முதன்மை செயலாளர் டி.கே.ஏ நாயர், மந்திரி சபைச் செயலாளர் சந்திரசேகர், அமுலாக்கப்பிரிவு இயக்குநர் அருண்மாத்தூர் ஆகியோரை அழைக்க பொது கணக்குக் குழு முடிவு செய்துள்ளது.

அடுத்த கட்டமாக பிரதமர் மன்மோகன்சிங்கை இந்த குழு விசாரிக்கும் என்பது உறுதியாகி உள்ளது. பிரதமரிடம் நடத்தப்படும் விசாரணைக்காக பொதுக் கணக்குக் குழு விரைவில் அழைப்பாணை அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமரை விசாரிக்க அழைப்பதற்கு காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்பு எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். தற்போது கூட்டுக்குழு விசாரணை நடப்பதால் காங்கிரஸ் எம்.பி.க்களின் எதிர்ப்பு குறைந்து விட்டது. (201)

# ஜெயலலிதா, விஜய், விஜயகாந்த் ஒரே மேடையில் அமர்கின்றார்கள்



சென்னை,மார்ச் 11

அ.தி.மு.கவின் தீவிர ஆதரவாளராக மாறிவிட்ட இயக்குநர் எஸ்.ஏ. சந்திரசேகர் இப்போது தனது மகன் விஜய்யையும், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவையும் ஒரே மேடையில் அமரவைக்க ஏற்பாடு செய்துள்ளார்.

தான் இயக்கிவரும் 'சட்டப்படி குற்றம்' படம் முடியும் தறுவாயில் இருப்பதால் இப்படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழாவை மிகப் பிரம்மாண்டமாக நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

இந்த விழாவில் கலந்துகொண்டு பாடல் இறுவட்டை வெளியிடுமாறு ஜெயலலிதாவை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்படம் ஆளும்கட்சிக்கு எதிரான பல விவகாரங்களை தாங்கி வருவதாலும், தேர்தல் நேரம் என்பதாலும் ஜெயலலிதா இதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா இறுவட்டை வெளியிட நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தையும் சந்திரசேகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த விழாவிற்கு தமிழகம் முழுவதிலும் உள்ள விஜய் ரசிகர்களை மட்டுமல்லாது புதுச்சேரி, கேரளா உட்பட பிற மாநிலங்களிலும் உள்ள விஜய் ரசிகர்களைத் திரட்டத் திட்டமிட்டுள்ளார் எஸ்.ஏ. சந்திரசேகர். மேலும், அ.தி.மு.க. கூட்டணிக் கட்சித் தொண்டர்களையும் திரட்டி மாநாடு போல் நடத்த அவர் திட்டமிட்டுள்ளார்.

இது தேர்தல் பிரசார மாநாடாக அமையும் என்பதால் ஜெயலலிதாவும் இந்த விழா மீது தனிக்கவனம் வைத்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



புதுச்சேரி மாநிலம் ஏம்பலம் தொகுதிக்குப்பட்ட தனிக்குப்பம் கிராமத்தில் சமூக நலத்துறை அமைச்சர் கந்தசாமி வீடு வீடாகச் சென்று முதியோர்களின் காலைத் தொட்டு வணங்கி வாக்குக் கேட்கிறார்.

# 2020ஆம் ஆண்டளவில் இந்தியாவில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படலாம்

2020 ஆம் ஆண்டில் இந்தியாவில் கடும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படலாம் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சக உயரதிகாரி றொபேட் பிளேக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

வரும் 2025 ஆம் ஆண்டில், உலக நாடுகளில் மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் தண்ணீர் பற்றாக்குறையை சந்திக்கலாம். அதாவது கிடைக்கும் தண்ணீரின் அளவு, தேவையை விடக் குறைவாக இருக்கும். குறிப்பாக ஆசிய நாடுகளில் தண்ணீர் பற்றாக்குறை அதிகளவில் இருக்கும். அதிலும் 2020ஆம் ஆண்டில் இந்தியாவில் கடும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்.

இந்த தண்ணீர் பற்றாக் குறையால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியிலும் பாதிப்பு ஏற்படும். திபெத்திய பீடபூமியில் உள்ள பனிக் கட்டிகள் உருகுவதால், ஆசியாவில் 150 கோடி மக்களுக்கு தண்ணீர் கிடைக்கிறது. சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா உட்பட ஒன்பது நதிகளுக்கு இதன் மூலம் தண்ணீர் வருகிறது. அந்தத் தண்ணீரை ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் வங்க தேசத்தை சேர்ந்த ஏராளமான நகரங்கள் மற்றும் கிராமங்களின் மக்கள் பயன்படுத்தி பலனடைகின்றனர்.

பனிக்கட்டிகள் சிறியவையாகும் போது, கிடைக்கும் தண்ணீரின் அளவும் குறைந்து விடும். குறிப்பாக இதர நீர் ஆதாயங்கள் குறைவாகக் கிடைக்கும் வறட்சியான கால கட்டத்தில், நதிகளில் நீரோட்டம் குறைந்து பாதிப்பை ஏற்படுத்தும். கால நிலை மாற்றங்களாலும், பனிக் கட்டிகள் விரைவில் உருகிப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று றொபேட் பிளேக் மேலும் கூறினார். (ம)

# ஜெயலலிதா - பாண்டியன் சந்திப்பு தள்ளிவைப்பு

சென்னை,மார்ச்11

அ.தி.மு.கவில் தொகுதிகளை பங்கீடு செய்வதில் இழுபறி நீடிக்கிறது. தொகுதி பங்கீடு தொடர்பாக நேற்று மாலை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலாளர் தா.பாண்டியன், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதாவை சந்திப்பதாக இருந்தது.

ஆனால் குறைவான தொகுதிகளை ஒதுக்க அ.தி.மு.க. முடிவு செய்திருப்பதால் தா.பாண்டியன் ஜெயலலிதாவை சந்திக்கவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் மார்க்சிஸ்ட், ம.தி.மு.கவுக்கான தொகுதி பங்கீட்டையும் அ.தி.மு.க. முடிவிக்கவில்லை. அ.தி.மு.கவில் இப்படி இழுபறி நீடிப்பதால் அரசியல் களத்தில் பரபரப்பு நிலவுகிறது. (201)

# ஆந்திராவில் குழந்தைகளை கடத்திய கும்பல் கைது

ஆந்திர மாநிலம் நிஜாமாபாத், கரீம் நகர் மாவட்டத்தில் 15 குழந்தைகளைக் கடத்திச் சென்ற கும்பலை பொலிசார் பிடித்துள்ளனர். இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

குழந்தைகளைக் கடத்தும் கும்பல் நடமாடுவதாக பொலிஸாருக்கு முறைப்பாடு வந்ததைத் தொடர்ந்து அந்தக் கும்பலைப் பிடிக்க தனிப்படைகள் அமைக்கப்பட்டன.

தனிப்படை பொலிஸார் நடத்திய தேடுதல் வேட்டையில் நிஜாமாபாத் மாவட்டம் மால்லையா கிராமத்தைச் சேர்ந்த இந்தக் கும்பலைப் பொலிஸார் கைது செய்தனர்.

# எந்தெந்தத் தொகுதிகளில் போட்டியிடுவது? தி.மு.க. - காங்கிரஸ் அடுத்த பலப்பரீட்சை

சென்னை,மார்ச் 11

தி.மு.க. கூட்டணியில் தொகுதிப் பங்கீடு முடிந்துவிட்ட நிலையில் கூட்டணிக் கட்சிகள் எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடுவது என்பதை முடிவு செய்யும் அடுத்த கட்ட பலப்பரீட்சை ஆரம்பமாகியுள்ளது.

குறிப்பிட்ட சில தொகுதிகளைக் காங்கிரஸும், தி.மு.கவும் விரும்புவதால் நெருக்கடி உருவாகியுள்ளது.

காங்கிரஸுடன் தொகுதிப் பங்கீட்டில் ஏற்பட்ட கால தாமதத்தைப்போல் தொகுதிகளை ஒதுக்குவதிலும் தாமதம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில், தி.மு.க. கவனமாக இருக்கிறது. இதற்காக, காங்கிரஸ் போட்டியிட விரும்பும் தொகுதிகளைப் பரிசீலித்து அதை முடிவு செய்வதில் தி.மு.க. தீவிரமாக உள்ளது. கடந்த சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற தொகுதிகளை இம்முறையும் அக்கட்சிக்கு ஒதுக்கிவிட்டு, கூடுதல் தொகுதிகளுக்கு, அடுத்த முக்கியத்துவம் அளிக்க உள்ளனர். தேர்தல் திணைக்களத் தொகுதி சீரமைப்பினால், சில தொகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. சில புதிய தொகுதிகள் உருவாகியுள்ளன.

இதனால், பாரம்பரியமாக இருந்த தொகுதிகளும், சில வி.ஐ.பி. தொகுதிகளும் விடுபட்டுள்ளன. இவற்றுக்கு மாற்றுத் தொகுதிகள் தேடுவதிலும், தொகுதிப் பங்கீட்டுக் குழுவினர் தனிக் கவனம் செலுத்துகின்றனர். தனித் தொகுதிகளைப் பிற கட்சிகளுக்கு தள்ளிவிட்டு, பொதுத்தொகுதிகளைத் தக்க வைத்துக் கொள்வதில் பல கட்சிகள் உஷாராக உள்ளன. ஆனால், ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பொதுத் தொகுதிகள் மற்றும் தனித் தொகுதிகளின் விகிதாசாரம் இருக்கும் என்று தெரிகிறது.

மேலும், சில கட்சிகளுக்கு குறிப்பிட்ட சில மாவட்டங்களில் தான் செல்வாக்கு உள்ளது. எனவே, அந்த மாவட்டங்களில் மட்டும் அதிகத் தொகுதிகளில் போட்டியிட அக்கட்சிகள் விரும்புகின்றன. அதனால், மற்ற கட்சிகளுக்கு அந்த மாவட்டங்களில் தொகுதி ஒதுக்குவதில் சிக்கல் ஏற்படக்கூடாது என்பதையும் கருத்தில் கொண்டு தொகுதிகளை ஒதுக்குகின்றனர். கட்சி மாறி வந்தவர்களுக்கு மீண்டும் வாய்ப்பளிப்பதில் பிற கட்சிகளுக்கு நெருக்கடி ஏற்படுத்திவிடக் கூடாது என்பதிலும் தொகுதிப் பங்கீட்டுக் குழு கவனமாக உள்ளது.

வி.ஐ.பி. தொகுதிகளைப் பட்டியலிட்டு அதை மற்றக் கட்சியினர் கேட்கக் கூடாது என்றும் நிபந்தனை விதிக்கப் பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு தொகுதியைப் பெறுவதில் கூட்டணிக் கட்சிகளுக்கு இடையே போட்டி நிலவும் போது குலுக்கல் முறையில் ஒரு கட்சிக்கு அந்தத் தொகுதியை ஒதுக்கத் திட்டமிட்டுள்ளனர்.

பா.ம.க. - விடுதலைச் சிறுத்தை - கொ.மு.க., ஆகிய கட்சிகளுக்குத் தொகுதிகளை இறுதி செய்யும் பணி முடியும் தறுவாயில் உள்ளது என தி.மு.க. வட்டாரங்கள் கூறுகின்றன.

வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு இன்னும் சில தினங்களே உள்ள நிலையில், தி.மு.க. கூட்டணியில் கட்சி வாரியாக போட்டியிட உள்ள தொகுதிகளின் பட்டியல் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்தமுள்ள 234 தொகுதிகளில் தி.மு.க. - 121, காங்கிரஸ் - 63, பா.ம.க. - 30, விசி. - 10, கொ.மு.க. - 7, முஸ்லிம் லீக் - 2, மூ.மு.க. - 1 தொகுதிகளில் போட்டியிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,மார்ச்.11

யாழ்.சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இன்று யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் 'வாழ்க்கையை வெற்றி கொள்வது எப்படி' என்னும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைதனியா சுவாமிகளின் ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார்.

இந்தச் சொற்பொழிவில் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொள்வார்கள்.


(ம-313)

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 08.03.2011 அன்று இறைவனடி சேர்ந்த

*லயன். ஐயாத்துரை இராமச்சந்திரா*

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்தகாரர் RDA, RDD, உரிமையாளர் ஆஷா சிவில் என்ஜினியரிங் வேக்ஸ்) அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர்க் காணிக்கை அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



உரிமையாளர்,
ஜிலாந்தன் கட்டட ஒப்பந்ததாரர்,
நா. யோகராஜா (சாந்தன்), மற்றும் ஊழியர்கள்.

இல 17, 5ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(35-22-24) (1426)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2206 திகதி 09-03-2011

ஆங்கில எழுத்திற்கும் C

வெற்றி எண்கள் 20 34 58 70

போனஸ் இல: 24

ஜக்பொட் பரிசு ரூ. 15,347,025/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 201708 | 20/- | 4,034,160/- |
| 2 இல | 14257 | 100/- | 1,425,700/- |
| 3 இல | 291 | 1,000/- | 291,000/- |
| 4 இல | - | 1,000,000/- | - |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7980 | 40/- | 319,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 600 | 1,000/- | 600,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 21 | 10,000/- | 210,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,347,025/- | - |
| 1 இல + போனஸ் இல | 9541 | 100/- | 954,100/- |
| 2 இல + போனஸ் இல | 465 | 500/- | 232,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 459 | 200/- | 91,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,582,460/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளில் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 235352 | | 9,182,460/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 202908033-1-31 |
| புத்தளம் | 202915907-3-17 |
| நுவரேலியா | 202919615-3-08 |
| பதுளை | 202917536-9-31 |
| குருநாகல் | 202908947-3-48 |
| வவுனியா | 202914805-8-07 |
| இரத்தினபுரி | 202912868-9-29 |
| கம்பஹா | 202911866-8-21 |
| கண்டி | 202911078-9-36 |
| அம்பாந்தோட்டை | 202909005-1-04 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ.15,897,000/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2011 மார்ச் 12 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

## ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 106
திகதி - 09.03.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: W — அதிர்ஷ்ட இலக்கம்: 10 — வெற்றி இலக்கம்: 7 0 4 2 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத் தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | W 10 7 0 4 2 8 | ரூ. 11,701,851.00 | - |
| 1 பரிசு | 10 7 0 4 2 8 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 7 0 4 2 8 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 0 4 2 8 | ரூ. 10,000.00 | 28 |
| 4 பரிசு | 4 2 8 | ரூ. 1,000.00 | 301 |
| 5 பரிசு | 2 8 | ரூ. 50.00 | 2851 |
| 6 பரிசு | 8 | ரூ. 20.00 | 27443 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத் தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 7 0 4 2 | ரூ. 1,000.00 | 27 |
| 8 பரிசு | 7 0 4 | ரூ. 100.00 | 294 |
| 9 பரிசு | 7 0 | ரூ. 50.00 | 2883 |
| 10 பரிசு | W | ரூ. 20.00 | 11317 |
| 11 பரிசு | W 10 | ரூ. 100.00 | 1285 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,127,800.00

01060241861
01060250448

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ.12,147,732.00

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,மார்ச்.10

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2367ஆம் இலக்க நேற்றுமுன்தினம் சீட்டிழுப்பில் "X" என்ற ஆங்கில எழுத்தும் 4/5/8/8/9/6 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 4/5/8/8/9/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/8/8/9/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/8/9/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 138 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/9/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,319 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

9/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,380 பேருக்கு 5 ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

6 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,32,442 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

இடமிருந்து வலமான அமைப்பில் 4/5/8/8/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/5/8/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 126 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

4/5/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,321 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

4/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,208 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"X" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 53,132 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)

### பெயர் மாற்றம்

அராலி கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி தவராசா மகேந்திரன் லதா (தவராசா லதா) ஆகியோருக்கு 28.12.1992இல் பிறந்த 'குணதீசன்' ஆகிய நான், 08.03.2011 முதல் எனது பெயரை 'ராம்ஜி' என சட்ட ரீதியாக மாற்றியுள்ளேன் என்பதைச் சகலருக்கும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

(32-22-24) தகவல்: தவராசா ராம்ஜி

### பணிப்பெண் தேவை

யாழ். நகரில் வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கு தங்கி நின்று பணிபுரியக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் 10,000/= வழங்கப்படும்

(51-22-24) தொடர்பு -0718474312

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள PSR - 5900 YAMAHA KEYBOARD (ARRANGER WORK STATION) விற்பனைக்கு உண்டு.

(51-22-24) தொடர்பு -0718474312

### தேவை

பிரின்டிங் நிறுவனத்துக்கு கணினி வேலை தெரிந்த பெண்கள் உடன் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(51-22-24) தொடர்பு 0728951673

### வீட்டுடன் காணி தேவை

வீட்டுடன் கூடிய காணி வாடகைக்குத் தேவை.
இடம்: திருநெல்வேலி, பலாலி வீதிக்கு அண்மையில் அமைந்திருத்தல் நல்லது.

தொடர்பு: Ms. V. Thanishka
இல- 125, சென் மைக்கல் வீதி ,கொழும்பு. 03.
தொலைபேசி இல: 011-2323105. பக்ஸ் 011-4611081
email: [illegible]


## கண்ணீர் அஞ்சலி

கடந்த 08.03.2011 அன்று இறைவனடி சேர்ந்த

*லயன். ஐயாத்துரை இராமச்சந்திரா*

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்தகாரர் RDA, RDD),

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



நிறைவேற்றுப் பொறியியலாளர்களும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.
(35-22-24)

## உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 592
திகதி 2011/03/09

சுப்பர் இலக்கம்: 18
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 04 25 54 71

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப்பெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 56,144,836.80 | 01 |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 50,000.00 | 14 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000.00 | 373 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000.00 | 707 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100.00 | 18577 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 40.00 | 10668 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 268379 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 42886 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசுத்தொகை ரூ. 67,807,556.80

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்
ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது
பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு 10,000,000.00

தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி கொழும்பு 03. தொலைபேசி 2470662,2470663
அவசர தேவைக்கு 2473360
இணையத்தளம் - www.nlb.lk

## 31ம் நாள் நினைவஞ்சலி

11-03-2011

மண்ணின் மடியில்: 24 — 04 — 1932

இறைவனடியில்: 09 — 02 — 2011



## வேலும் மயிலும் கனகம்மா

(இளைப்பாறிய அதிபர்)

அல்வாய் தெற்கு, யாழ்ப்பாணம்.

அம்மா! பாசத்தின் திருவுருவே! பண்பின் பிறப்பிடமே! ஐயிரு மாதம் பக்குவமாய் உதரத்தில் எம்மை சுமந்து உலகினிற்கு தந்தவரே!

அன்பினிய தாயாகி அதற்கு மேல் நல் ஆசானாகி பிள்ளைகள் எழுவர் நாம் ஐவரானோம் பிரிவில் துவண்டு பின் எமக்காய் துளிர்த்து.
நாம் வாடிய போதெல்லாம் வதங்கி நாம் இன்பத்தில் நினைத்த போதினில் மனம் குளிர்ந்து கண்ணை இமை காப்பது போல் எமைக்காத்து எடுத்த காரியம் யாவினிலும் வென்றிடுவீர்
எள்ளவும் பிசகாத நாணயத்தின் சிகரம் நீர்! இற்றைவரை எமக்காய் நல்வழிகாட்டி இனிய எம் வாழ்வதனில் நிறைவு கண்டீர்!

முப்பத்தியாறு வருட ஆசிரிய சேவையிலே நீங்கள் நிலைத்திருந்த காலங்கள் எம்மை பெருமை கொள்ள வைக்குதம்மா! உம் மாணவர் உங்கள் பெருமை சொல்ல எம் மனம் பூரித்துப் போனதம்மா!

அப்பாவை நாம் இழந்து ஆறுமாதம் தானே அம்மா!
இல்லறத்தின் நல்லறமோ உம்மை அவர் அழைத்தாரோ! நாம் கலங்கி நிற்கின்றோம்.

காலத்தின் கட்டளையால் பிற தேசமதில் வாழும் நாம் எம்முடனே உம்மை அழைத்து அன்புடனே உபசரித்து பட்ட கடன் நாமடைக்க துடியாய்த் துடித்திருந்தோம் அதற்காய் காத்திருந்தோம்

ஆனால்
காலனவன் முந்திக் கொண்டானேயம்மா.. உங்களை தனியாய் விட்ட துயர் எம்மை வாட்டுதம்மா..

**உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிராத்திக்கும்**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

கொழும்பில் நடைபெற்ற அம்மாவின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கும் சகல வழிகளிலும் எமக்கு ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் தொலைபேசி வாயிலாக எம்முடன் துயர் பகிர்ந்தவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.


எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 11.03.2011 வெள்ளிக்கிழமை பிரான்சில் நடைபெறும். அன்றைய தினம் அல்வாய் குமிழடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பூஜையிலும் அன்ன தான நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், அயலவர்களை அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

நன்றி குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'வடக்கின் மாபெரும் போர்'

# பெரும் எதிர்பார்ப்புடன் நேற்று ஆரம்பம் சென்ஜோன்ஸ் - 118, யாழ். சென்ரல் - 131


பூவா? தலையா?

இரு கல்லூரிகளின் ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நேற்று 'வடக்கின் மாபெரும் போர் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. மைதானம் நிறைந்த ரசிகர்களின் கரகோசத்துக்கு மத்தியில் இரு கல்லூரி அணிகளும் மைதானத்தில் இறங்கின. இந்த ஆட்டத்தைக் காண வெளிநாடுகளில் உள்ள இரு கல்லூரிகளின் பழைய மாணவர்களும் இங்கு வந்து மைதானத்தில் நேற்றுக் கூடியிருந்தார்கள். இன்றைய ஆட்டம் மு.ப. 10 மணிக்கு ஆரம்ப மாகும். நண்பகல் 12 மணியில் இருந்து நண்பகல் 12.40 வரை மதிய இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்படும். பின்னர் ஆரம்பமாகும் ஆட்டம் பி.ப. 2.40 மணியிலிருந்து பி.ப.3 மணி வரை தேநீர் இடைவேளைக்காக நிறுத்தப்படும். பின்னர் மாலை 5 மணிவரை ஆட்டம் இடம்பெறும்.

யாழ்ப்பாணம், மார்ச் 11

'வடக்கின் மாபெரும் போர்' என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரிக்கும் - சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 105 ஆவது மாபெரும் துடுப்பாட்டப் போட்டி நேற்று வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் மிகக் கோலாகலமாக ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணியின் தலைவர் ஜெரிக்துஷாந், சென். ஜோன்ஸ் கல்லூரியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் அணி 32.4 ஓவர்கள் நிறைவில் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஹரிவதனன் 20 ஓட்டங்களையும், அற்றியன் 18 ஓட்டங்களையும், சஞ்சயன் 17 ஓட்டங்களையும், பிரியதர்சன் 15 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்களான ஜெரிக்துஷாந்த் 7.4 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், கோகுலன் 15 ஓவர்கள் பந்து வீசி 68 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், விதுஷன் 6 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 49.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் எட்வேட் எடின் 50 ஓட்டங்களையும் பில்சன் 18 ஓட்டங்களையும் கோகுலன் 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 19 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்களான டல்ஷன் 7 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் விதுஷன் 12 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஹரிவதனன் 16.2 ஓவர்கள் பந்து வீசி 43 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் விமல்ராஜ் 5 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

நேற்றுத் தனது 2 ஆவது இனிங்சை ஆரம்பித்த சென். ஜோன்ஸ் கல்லூரி ஒரு விக்கெட்டினை இழந்து 16 ஓட்டங்களைப் பெற்றது. சன்சயன் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ரஜீவன் 8 ஓட்டங்களுடனும் சத்தியேந்திரா ஓட்டம் எதனையும் பெறாமலும் களத்திலிருந்தனர்.

ஆட்டத்தின் இரண்டாவது நாளான இன்று போட்டி முக்கிய கட்டத்தை அடையும் என ரசிகர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது. (த-23-86)


அணி அறிமுகத்தின்போது....



வீரர்களுக்கு வரவேற்பு


ஆரம்பமானது போர்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கிளிநொச்சி கழகங்களை பதிவு செய்தல்**

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் உதைபந்தாட்டக் கழகங்களை உடனடியாக எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துகொள்ளு மாறு கோரப்பட்டுள்ளது. இதற்கான விண் ணப்பப்படிவங்களை அறிவுநதி புத்தகசாலை யில் பெற்றுக்கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு - தலைவர்
கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக். 0776737535

**காணி விற்பனைக்கு**

தெருமூடி மடத்தடிக்கும் மந்திகைக் கும் இடையில் பிரதான வீதியில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு

தொடர்பு கொள்க
(32-22-24) **0776029104**

## சந்நிதியில் ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி, மார்ச் 11

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த ஆன் மீக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பக்க வாத்தியசகிதம் இன்னிசைக்கச்சேரி இடம்பெறும்.

இந்த நிகழ்வை இசைக் கலை மணி திருமதி. விமலாதேவி ராஜேந்திரம் வழங்குவார். (ம-236)

**கடை குத்தகைக்கு**

ஸ்டான்லி வீதி மற்றும் கஸ்தூரியார் வீதியை முகப் பாகக் கொண்ட கட்டடத்தின் பின்புறமாக அமைந்துள்ள இரண்டு கடைகள் குத்த கைக்குக் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு : 077-1006961

**பணிப்பெண் தேவை**

நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு சமையல் செய்வதற்கு பணிப்பெண் தேவை.
(51-22-24) தொடர்பு :- 0779635988

## கண்ணீர் அஞ்சலி

*அமரர் லயன். ஐயாத்துரை இராமச்சந்திரா*
(பணிப்பாளர், ஆஷா சிவில் என்ஜினியறிங் கன்ஸ்ட்ரக்ஷன் ),



இலங்கை தேசிய நிர்மாணிகர் சங்கத்தின் யாழ். மாவட்ட கிளையின் அங்கத்தவரும் ஆஷா சிவில் என்ஜினியறிங் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தின் பணிப்பாளருமாகிய லயன். ஐயாத்துரை இராமச்சந்திரா அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1432) யாழ். மாவட்ட ஒப்பந்ததாரர்கள் சங்கம்,
இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம் (யாழ். கிளை)

## மரண அறிவித்தல்

*திருமதி கந்தையா செல்லம்மா*



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கந்தையா செல்லம்மா நேற்று (10.03.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், செல்வராணியின் பாசமிகு தாயும், செ. பத்மநாதனின் (இ.போ.ச. முன்னாள் நடத்துநர்) அன்பு மாமியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் சகோதரியும், தயாபரன் - பத்மராணி (நோர்வே), சுதர்சன் - சாந்தி, அனுஷன் - வாணி மற்றும் ராஜ்குமார் - லேக்கா (லதா- இந்தியா) ஆகியோரின் பேர்த்தியும் அபூர்வன், வையகன், நர்த்தனா, கெவிஷன், மொரிஷன், டிலக்ஷன், மர்வின், மௌலின், சந்தோஷ், ராதயன், லக்மிலா, கீதயன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. 021 3006560.

(32-25-27)

தகவல்:
சே. பத்மநாதன்
(மருமகன்).

## மரண அறிவித்தல்

*கந்தையா பேரம்பலம்*



கைதடி, நுணாவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பேரம்பலம் நேற்று (10.03.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கச்சி தம்பதியரின் மகனும் பவளம்மாவின் அன்புக் கணவரும், அருணாசலம், ரத்தினம் (கிளி), ராஜேஸ்வரி, இந்திராணி, பாலசிங்கம், சிங்கராசா (பிரான்ஸ்), துரைசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோரஞ்சினி, சிவகுருநாதன், பாலசுப்பிரமணியம், வாமதேவன், ஜெயவதி, கலாவதி (பிரான்ஸ்), சுயந்தினி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.
தொ.பே. 0771102844, 0774084703.

(32-25-27)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



திருமதி
**பொன்னு பொன்னம்மா**

உரும்பிராய் மேற்கு, ஞானசம்பந்தர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னு பொன்னம்மா நேற்றுமுன்தினம் 09.03.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆண்டி - வெள்ளைச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி ஆண்டி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுவின் அன்பு மனைவியும், தேவன், இராசகமலதேவி (சுவிஸ்), யோகராசா (கனடா), காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சிவலிங்கம் மற்றும் சிவயோகம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், தனலட்சுமி, யோகராசா (சுவிஸ்), லதா (கனடா), சின்னமணி, தனலட்சுமி, பாஸ்கரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ரமேஸ், ரேணுகா - பாஸ்கரன், வினிதா, கஜிதா, கிரிஜா, சிவசர்மன், கௌதமன், நிரூஜன், சிந்துஜன், பிரசாந், மனோஜன், சுபீசா ஆகியோரின் பேரனும், ஜெஸ்மி, லதீபன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (11.03.2011) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அவைரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானசம்பந்தர் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். 021 790 1921.

(32-25-24)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர்கள் தாக்கப்படுகின்றனர். இது தொடர்பாக நாம் பொலிஸாரிடம் முறைப்பாடுகள் செய்தால் எமது முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

தேர்தல் வன்முறை முறைப்பாடுகளைப் பக்கச்சார்பின்றி ஏற்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் பொலிஸாருக்குக் கூறிய போதும் பொலிஸார் அதை ஏற்பதில்லை. பொலிஸார் தமது சீருடையின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் செயற்படவேண்டும்.

இவ்வாறான காரணங்களால்தான் அரசின் மீது வெளிநாடுகள் குற்றஞ் சுமத்துகின்றன. அதுபோல் உள்ளூரிலும் குற்றஞ் சுமத்தப்படுகின்றது. வெளிநாடுகள் அரசின் மீது குற்றஞ் சாட்டுகின்றபோது அது தொடர்பாக உள்நாட்டில் சுயாதீன விசாரணைகளை ஆரம்பிக்குமாறு நாம் கூறினோம். அதற்கு எம்மைத் தேசத் துரோகிகள் என்று அரசு கூறுகின்றது.

ஆனால் இப்போது அரசு ஐக்கிய நாடுகள் சபையுடன் பேச்சில் ஈடுபட்டுள்ளது. அதை நாம் வரவேற்கிறோம். பிரச்சினைகள் பேசித்தான் தீர்க்கப்பட வேண்டும். எமது நாட்டின் மீது சர்வ தேசம் குற்றஞ்சுமத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் - என்றார். (த-சி)

## இரு பிரதியமைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து பிரதியமைச்சர் திசாநாயக்கவின் ஆதரவாளர்கள் கற்களை எறிந்து நந்தமித்திர ஏக்கநாயக்கவை தாக்கியுள்ளனர்.

தாக்குதலில் பிரதியமைச்சர் நந்தமித்திர ஏக்கநாயக்க காயமடைந்துள்ளார். கலவர நிலை குறித்து கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம் ஜயந்தவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இலங்கை - கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாரத்தில் 13 பயணங்கள், எதிர்வரும் பனிக்காலம் முதல் வாராந்தம் 21 பயணங்களாக அதிகரிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

### நீரிழிவா?

பயப்பட வேண்டாம்; நீரிழிவை முற்றாக நீக்க வல்லது :-
வைத்திய நிபுணர்களின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு 100க்கு 100 சக்தி வாய்ந்ததென என சிபாரிசு செய்யப்பட்டது-
பட்னா டயபெட்டிக்டீ 10 நாள்களில் பலன் தெரியும்.
நீங்கள் டீ வாங்கும்போது ''பட்னா டயபெட்டிக் - டீ '' என்று கேட்டு வாங்க மறவாதீர்கள்.
வட இலங்கையின் ஏக விநியோகஸ்தர்கள்
*வைத்தீஸ்வரன் மெடிக்கல்ஸ் .*
(ஆஸ்பத்திரிக்கு முன்பாக) போன்:-
462, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0771172780, 0776237956.

### கண்ணீர் அஞ்சலி

*லயன். ஐயாத்துரை இராமச்சந்திரா*



''இராமச்சந்திரன் ஐயாமேல் தவறான குறியாக இடியொன்று திடீரென எம்மடிமீது வீழ்ந்தது''

தென்மட்டுவில் வேரற்கேணிக் கந்தசாமி கோயில் அறங்காவல் சபை உறுப்பினரும், ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தருமான இராமச்சந்திரா அவர்களின் மரணச் செய்தி எம் பரிபாலன சபையை ஆறாத் துயரில் ஆழ்த்துகிறது. அவரது குடும்பத்தாருக்கும், தேறுதல் கூருகிறோம்.

தென்மட்டுவில். (1442) **வேரற்கேணிக் கந்தசாமி கோயில் பரிபாலன சபையும், திருப்பணிச் சபையும்.**

### இதய அஞ்சலி

*செல்வன் கணேசமூர்த்தி துஸ்யந்தன்*



அன்போடும் பண்போடும் நட்போடும்
வாழ்ந்து வந்த நல்லவனே,
கண்களை விட்டகலாத கண்ணியங்கொண்டவனே,
துடைக்க முடியாத் துயரத்துடன் எம்மைத்
துடிக்க வைத்து எங்கு சென்றாய் தூயவனே?
ஆறாத காயத்துடன் அழுகின்றோம்
உன்பிரிவால்

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்

T.C லேன்,
மனிப்பாய். (1440)

உன் பிரிவால் துயருறும்
நண்பன் பப்பி (சுதாகரன்),
மகாலிங்கம் குடும்பம்.

### கண்ணீர் அஞ்சலி

*லயன். ஐயாத்துரை இராமச்சந்திரா*



பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஆங்கிலத் துறை தலைவர் திருமதி இந்திரமதி இராமச்சந்திராவின் அன்புக் கணவர் லயன். ஐயாத்துரை இராமச்சந்திரா அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1433) **2009 - 2010 ஆங்கிலப் பிரிவு ஆசிரியமாணவர்கள்.**

## தமிழகத்தில் புலிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் நிலப் பிரபுக்களை கொலை செய்வதற்கு அவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

பிரதமரின் இந்தக் குற்றச்சாட்டு இலங்கையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. 70 களின் பிற்பகுதி மற்றும் 80 களின் ஆரம்பத்தில் ஏற்பட்டது போன்ற ஒரு நிலை மீண்டும் உருவாகின்றதோ என்ற பீதியைக் கிளறிவிட்டிருந்தது.

இலங்கையில் அமெரிக்கா காலூன்றுவதைத் தடுப்பதற்காக 80 களில் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு இந்தியா பயிற்சிகளை வழங்கியது. அத்தகைய ஒரு நிலை மீண்டும் ஏற்படுவதான தோரணையைப் பிரதமரின் நாடாளுமன்ற உரை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இலங்கையின் கருத்தை இந்தியா உறுதியாக மறுத்துள்ளது.

''நாம் அறிந்த வரையில் இந்தியாவில் புலிகளின் எந்தவொரு முகாமும் இல்லை. அந்த அமைப்பு இங்கு தொடர்ந்தும் தடை செய்யப்பட்டே இருக்கிறது. அதன் உறுப்பினர்களை எங்கு கண்டாலும் நாம் அவர்களைக் கைது செய்வோம்'' என இந்திய உள்துறை அமைச்சின் செயலாளர் கோபால்பிள்ளை தெரிவித்தார்.

''இலங்கை அரசு ஏதாவது தகவல்களைக் கொண்டிருந்தால் அவற்றை எங்களுக்குத் தரலாம்'' என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

இலங்கைப் பிரதமரின் கருத்துக்கள் அடிப்படையற்றவை, ஆதாரமற்றவை எனச் சீற்றத்துடன் பதிலளித்தார் தமிழகப் பொலிஸ் மா அதிபர் லத்திகா சரண்.

''தமிழ் நாட்டில் புலிகளின் முகாம் எதுவும் கிடையாது. பத்திரிகைகளில் இது தொடர்பாக வெளியாகியுள்ள செய்திகள் அடிப்படையற்றவை, ஆதாரமற்றவை, கள யதார்த்தத்துக்கு முரணானவை'' என்று அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இந்திய மண்ணில் விடுதலைப் புலிகளின் எந்த ஒரு செயற்பாடு குறித்தும் தமிழ்நாடு அதி உச்ச விழிப்பு நிலையைப் பேணி வருகிறது. மாநில அரசின் புலனாய்வுத்துறை புலிகள் பற்றிய எந்தவொரு தகவல் குறித்தும் கூர்ந்து அவதானிப்பதுடன் கரையோரப் பகுதிகளிலும் முழுமையான விழிப்பு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அவ்வாறான எந்தவொரு தகவலும் கிடைக்கப்பெற்றால் பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று லத்திகா சரணின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள உருத்திரகுமார், நோர்வேயிலுள்ள நெடியவன் மற்றும் விநாயகம் ஆகியோர் தலைமையில் தமிழ் நாட்டில் பயிற்சி முகாம்கள் இருப்பதாக தமிழக ஊடகங்கள் விடுத்த செய்தியையும் அவர் மறுத்துள்ளார்.

புலேந்திரன் மாஸ்ரர் என்பவர் இரகசிய முகாமை நடத்துவதாக இலங்கைப் பிரதமர் கூறியதையும் அவர் நிராகரித்தார்.

சென்னையிலுள்ள பௌத்த மகாபோதி தாக்கப்பட்டதற்கும் புலிகளுக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் சென்னை மகாபோதி மீதான தாக்குதலுக்கும் தமிழ் நாட்டில் உள்ள விடுதலைப் புலிகளே காரணம் என பிரதமர் டி.எம் ஜயரட்ண கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த லத்திகா சரண், ''இலங்கைத் தமிழர் அனுதாபிகளாலேயே சென்னையில் உள்ள மகாபோதி தாக்கப்பட்டது. அதில் தொடர்புபட்ட உண்மையான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் பங்கு பணி எதுவும் இல்லை'' என்றும் தெரிவித்தார். (உ-த)

### பணிப்பெண் தேவை

வீட்டுப் பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 0778090989

## அவசரகாலச் சட்டத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது கூறினார். இந்த விடயம் இந்தியாவுக்குத் தெரியுமா? இந்தியாவில் மிகவும் பலம் வாய்ந்த புலனாய்வுப் பிரிவு உள்ளது. அந்தப் புலனாய்வுப் பிரிவுக்குத் தெரியாமல் தமிழ் நாட்டில் புலிகளின் பயிற்சி முகாம்கள் எப்படிச் செயற்பட முடியும்? இந்தத் தகவலை இலங்கைப் பிரத மருக்கு கூறியவர் யார்? இந்தியப் பிரதமரே இதைத் தெரிவித்தாரா அல்லது வேறு எந்த நாடுகளாவது கூறியனவா? இந்தியா அல்லது வேறு நாடுகள் இலங்கைக்குக் கூறியிருந்தால் அத்தகவல் இந்தியாவுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். இலங்கை அரசு அவ்வாறு செய்ததா?

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய எழுதிக்கொடுக்கும் அறிக்கையைத் தான் பிரதமர் நாடாளுமன்றில் வாசிக்கின்றார். அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடித்துக்கொண்டு போவதற்காகத்தான் அரசு இப்படியொரு கதையை அவிழ்த்துவிடுகின்றது - என்றார். (த-சி)

## நல்லிணக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவுபடுத்தியது. ஐக்கிய நாடுகள் சபையில் உள்ளவர்கள் தெரிந்துகொள்வதற்காக நாம் எமது நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்த வேண்டும். அந்த வகையில் ஐ.நாவுக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைத் தூதுக் குழு ஐ.நா. செயலாளருக்கு தெளிவுபடுத்தியது - இப்படி அவர் கூறினார். (த-சி)

### THE PRINCE OF WALES NURSING HOME

132, Kachcheri Nallur Road, Jaffna.
T.p:- 0214922589 Fax:- 0212226180

- கண் சத்திரசிகிச்சைகள், கண் பரிசோதனைகள், கண் பரிசோதனைகளுக்கான ஆலோசனைகள் என்பன பிரபல கண் வைத்தியரினால் 20.03.2011 இற்குப் பின் ஆரம்பமாகவுள்ளன.
- 1. காலை, மாலை கடமையாற்றுவதற்கு வைத்தியர்களின் வரவேற்பாளர்கள் (Medical Receptionist)
  2. அனுபவம் வாய்ந்த தாதிமார்கள் உடனடியாகத் தேவை.
- ஞாயிற்றுக்கிழமை (13.03.2011) காலை 9.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணி வரை சான்றிதழ்களுடனும், 2 புகைப்படங்களுடனும் நேரில் வரவும்.
- காலை 6.30 மணி தொடக்கம் 12.00 மணி வரைக்கும் கடமையாற்றுவதற்கு வைத்திய உத்தியோகத்தர் (H.M.O) தேவை.
- சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

## மரண அறிவித்தல்கள்

### *கிருஷ்ணபிள்ளை கமலாதேவி*

சீனட்டி, வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சின்னையா கிருஷ்ணபிள்ளை (கமலா ஸ்ரோர்ஸ்- வலஸ்முல்லை) அவர்களின் அன்பு மனைவி கமலாதேவி (09.03.2011) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முன்னாள் அல்வாய் வடக்கு, காலஞ்சென்ற விதானையார் பழனிப்பிள்ளை - பாக்கியம் அவர்களது மகளும் கிருஸ்ணகுமாரி, காலஞ்சென்ற விஜயகுமாரி மற்றும் செல்வகுமாரி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.03.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப. ஈஸ்வரநாதன் (சகோதரன்),
மற்றும் குடும்பத்தினர்.

(சி/576628)

### *பிலிப்பு றோசம்மா (பிலிப்பு ஆச்சி)*



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்புறோசம்மா (10.03.2011) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலிப்புவின் அன்பு மனைவியும் வரப்பிரகாசம் (வவுனியா), பீற்றர், மரியசெப மாலை, அலெக்சான்டர் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் வேவி (வவுனியா), சறோஸ், காலஞ்சென்ற எட்வேட் மரியதாஸ் மற்றும் தீபா (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு மாமியும் ஜெயந்தி பீற்றர் (பருத்தித்துறை), நாதன் (சுவிஸ்), செல்லக்குமார் (ஜேர்மனி), பட்டு (சுவிஸ்), ஜெனிற்றா றமேஸ், ஜெகஸ்ரின் (வவுனியா), பிறேமதாஸ், பசில் தாஸ் காலஞ்சென்ற நிறஞ்சன் மற்றும்கொன்சலா, றோசலியா, றாஜ்மோகன், ஜயன்சியா, அலெனா, கஜேந்திரன் (டென்மார்க்), கென்சன், ஜென்சன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிறைன்சன், லிவின்சன், நிக்சன், றென்சியா (சுவிஸ்), கவிசாந் றொசின், றொசிக்கா (வவுனியா), ஹரன்சிகா, கிரிஷாந், நிருஷாந் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (12.03.2011) சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித காணிக்கை அன்னை ஆலயத்தில் இரங்கற்திருப்பலியின் பின் மிருசுவில் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தவசிகுளம், மிருசுவில். (1441)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

CSE
COLOMBO STOCK EXCHANGE

ங்குச்சந்தை μ யாழ்ப்பாணம்
ங்குனி 10, 2011
ங்குச்சந்தைச் சுட்டிகள்
னைத்துப்பங்கு(ASPI) 7383.92↑
லங்கா(MPI) 6879.24↑
ரிமைமுதல் தகவல்கள்
யாபாரப்புரள்வு(Rs.) 1723.15Mn
ங்குகளின் அளவு(No.) 49.33Mn
யாபாரம்(No.) 17100
லை அசைவுகளின் அடிப்படையில்
திகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ங்கெம் சிலோன் 63.50
ய்ஜெ 139.00
ற்றஸ் 23.40
ன்னலி 293.40
ற்றஸ் 75.10
றைவு(Top 5 losers) - விலை Rs.
பி கிறியேசி 2810.00
ர்டியன் இன்வெஸ்ர்மன்ர் 1600.00
சேவிஸ் 810.00
ருவளை 113.60
ங்கா அசோக் 2700.00
மலதிக தகவல்கள்- www.cse.lk

# சபையில் அமைச்சர் விமலுக்கு சரணபவன் எம்.பி. சாட்டை



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான விவாதம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றிய அமைச்சர் விமல் வீரவன்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீதான தாக்குதல் சோடிக்கப்பட்ட ஒரு புனைகதை என்றார். சிறிதரனின் வாகனத்தின் சக்கரங்களுக்கு மட்டுமே சுடப்பட்டது என்றும் அவர் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை என்றும் கூறினார்.

இதற்கே தகுந்த ஆதாரங்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தக்க சாட்டையடி கொடுத்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி சோடிக்கப்பட்ட ஒரு கட்டுக்கதை என்கிறார் அமைச்சர் விமல் வீரவன்ஸ. வாகனத்தின் டயர் மீது மட்டுமே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றும் ஏனைய விடயங்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் கூறினார்.

பொலிஸ் மா அதிபரை நேரில் சந்தித்துச் சம்பவம் பற்றி அறிவதற்கு சபாநாயகர் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் இருந்து சற்று முன்னரே இந்தச் சபைக்கு வந்திருந்தோம்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியை பொலிஸ் மா அதிபர் அந்தச் சந்திப்பில் உறுதிப்படுத்தினார். சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட ஒளிப்படங்களையும் அந்தப் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் சம்பவம் தொடர்பில் வழங்கிய அறிக்கையையும் காண்பித்தார்.

உண்மை இவ்வாறு இருக்க அமைச்சர் வீரவன்ஸ பொறுப்பற்ற வகையில் பேசுகின்றார்.

நாட்டில் பல ஆயுதக் குழுக்கள் இருந்துள்ளன. இன்றும் பல ஆயுதக் குழுக்கள் இயங்கத்தான் செய்கின்றன. இக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவில்லை. இந்த விடயத்தைப் பொலிஸ் மா அதிபரிடம் நான் நேரடியாகவே கூறி இருக்கின்றேன்.

இது தொடர்பில் ஒரு விடயத்தை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். விடுதலைப் புலிகள் இல்லை என்று பிரகடனப்படுத்தப்பட்டு விட்டது; அதிகாரபூர்வமாகப் படையினர் மட்டுமே ஆயுதங்களை வைத்திருக்க முடியும். அப்படி எனில் எப்படி மற்றையவர்கள் ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள்?

வடக்கில் இன்றும் அதிகளவில் கொலைகள் மற்றும் சாவுகள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு மாதமும் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் விவாதத்தில் உயிரிழந்தவர்களின் பட்டியலை நாம் வாசிக்கின்றோம். அதனால், படையினர் தவிர்ந்த ஏனையவர்களும் ஆயுதங்களைக் கொண்டிருக்கின்றனர் என்பது தெளிவானது.

தமிழ் ஆயுதக் குழுக்கள் எவற்றிடமும் ஆயுதங்கள் இல்லை என்று நீங்கள் சொல் வீர்களாக இருந்தால், குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் படையினருக்கு எதிரானவையாகவே இருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

சபையில் பேசிய மற்றொரு அமைச்சரான சம்பிக்க ரணவக்க இங்கு வேறொரு கதையை அவிழ்த்து விட்டார். புலிகளின் தலைவர் பிரபாகரன் கொழும்பில் சட்டத்தரணிகள் குழு ஒன்றை வைத்திருந்தார் என்றும் தெற்கில் கொலை செய்யப்பட வேண்டியவர்களின் பட்டியல் அவர்கள் மூலமே தயாரிக்கப்பட்டது என்றும் கூறியிருந்தார்.

இது உண்மையானால் ஏன் இவ்வளவு காலமும் இது பற்றி அமைச்சர் தெரியப்படுத்தவில்லை. ஊடகங்களில் கூட அப்படியான செய்திகள் வெளியிடப்படவில்லையே?

அமைச்சரால் அவர் கூறியவற்றை நிரூபிக்க முடியுமா? முடியாது. ஏனெனில் அவர் கூறியதில் எந்த உண்மையும் இல்லை. இந்த உயர் சபையில் எதையும் பேசி விடலாம் என்ற சிறப்புரிமையைத் தவறாகப் பயன்படுத்தி எல்லாவற்றையும் பேசக் கூடாது. மற்றொரு விடயத்தையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்த நாட்டின் எந்த ஒரு பிரஜையும் நாட்டின் எந்த ஒரு பகுதிக்கும் சுதந்திரமாகச் சென்று வரலாம் என்று ஜனாதிபதி கூறிய 15ஆவது நாளில் - கடந்த 7ஆம் திகதி- நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீதான தாக்குதல் இடம்பெற்றது.

தன் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தனது அரசியல் எதிரிகளே என்று அவர் கூறி இருக்கிறார். உள்ளூராட்சி சபைத் தேர்தல்களும் நடைபெற உள்ள நிலையில் அதற்கான சாத்தியங்கள் உள்ளன. இதனையும் நாங்கள் சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம்.

அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்கான ஒவ்வொரு விவாதத்தின் போதும் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்காகவும் முறியடிக்கப்பட்ட பயங்கர வாதம் பற்றியுமே பேசுகிறீர்கள். எந்த ஒரு விவாதமும் புலிகளைப் பற்றிப் பேசாமல் முற்றுப் பெற்றதில்லை.

அதாவது பரவாயில்லை, புலம்பெயர் தமிழர்களின் சூழல் மற்றும் கஷ்டங்கள் பற்றி எதுவுமே தெரியாமல் அவர்களின் கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் அவர்களை புலி முத் திரை குத்தி விமர்சிக்கிறீர்கள்.

புலம்பெயர் தமிழர்களிடம் இருந்துதான் இந்த நாட்டுக்குப் பெருமளவு அன்னியச் செலாவணி கிடைக்கிறது என்பதை இங்குள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மத்திய வங்கிக்குச் சென்று பார்த்தால் இது புரியும். எந்தெந்த நாடுகளில் இருந்து அந்நியச் செலாவணி வருகின்றது என்பதைக் கண்டு கொள்ளலாம். அந்தப் பணம் முழுவதும் இந்த நாட்டின் அபிவிருத்திக்குத் தானே பயன்படுத்தப்படுகிறது? எனவே எதைக் கூறுவதற்கும் முன்னர் நிதானமாகவும் அவதானமாகவும் பேசுங்கள் - என்றார். (உ)

# விடுதிகளில் உள்ள நோயாளருக்கு ஒப்பந்தகாரர்கள் மூலம் உணவு

## மாகாண சுகாதார அமைச்சின் செயலர் ஏற்பாடு

வடமாகாணத்தில் உள்ள அரச வைத்தியசாலைகளின் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு உணவு ஒப்பந்தகாரர் மூலம் உணவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்தத் தகவலை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு:

வட மாகாண வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கான உணவு விநியோகம் வட மாகாண ஆளுநரால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. உண்மையில் வடமாகாண ஆளுநரால் இப்படியான எந்தவொரு அறிவுறுத்தலும் விடுக்கப்படவில்லை.

வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் விடுதிகளில் ஐந்து நோயாளர்களுக்குக் குறைவாக உள்ள வைத்தியசாலைகளில் உணவு விநியோகத்தை இடைநிறுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. உணவு விநியோகத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விடச் செலவீனம் மிகக் கூடுதலாக அதிகரித்துச் சென்றதைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இந்த அறிவுறுத்தலை மீளாய்வு செய்யுமாறு பல்வேறு தரப்பினராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலைப் பணியாளர்களுக்கு உண வுக்குப் பதில் பணம் வழங்க அவர் களது அபிப்பிராயம் பெறப்படும்.

நோயாளர் அனைவருக்கும் உணவு ஒப்பந்தகாரர்கள் மூலம் அல்லது அந்தப் பிரதேச பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்-என்றுள்ளது.

இதேவேளை மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் விடுக்கப்பட்ட மேற்படி உணவு வழங்குவதை நிறுத்தும் அறிவித்தலை வடாகாண ஆளுநர் நேற்று ரத்துச் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-14)

# கிணற்றில் வீழ்ந்து குடும்பஸ்தர் மரணம்

தென்மராட்சி, மார்ச்.11

குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் கிணற்றில் வீழ்ந்து பலியானார். இந்தச் சம்பவம் கடந்த 9ஆம் திகதி நாவற்குழி தெற்கு ஐந்து வீட்டுத் திட்டத்தில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கனகரத்தினம் கனகேந்திரன் (வயது - 35) என்பவரே மரணமானவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

மரணம் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரிப் பிரிவு திடீர் மரண விசாரணை அதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார். (த-207)

# யாழ்.திணைக்களங்களின் வாகனங்கள் தேர்தல் பணிக்காக புத்தளத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச்.11

புத்தளம் மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்காக யாழ்.மாவட்டத்தில் உள்ள சில அரச திணைக்களங்களின் வாகனங்கள் அங்கு கொண்டு செல்லப்பட வுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளமையால் இங்குள்ள அரச திணைக்களங்கள் சிலவற்றின் வாகனங்களை தேர்தல் கடமைக்காகப் புத்தளம் மாவட்டத்துக்கு அனுப்பி வைக்குமாறு தேர்தல் ஆணையாளரால் யாழ். மாவட்ட செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களிடம் உள்ள வாகனங்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ். செயலகத்திடம் தேர்தல் ஆணையாளர் கேட்டிருந்தார். இதன்படி இந்த வாகனங்களின் விவரம் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இந்த வாகனங்களைத் தேர்தல் கடமைக்காகப் புத்தளம் மாவட்டத்துக்கு அனுப்புமாறு தேர்தல் திணைக்களத்தால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து யாழ். மாவட்டத்திலும் அரச திணைக்களங்களின் சேவைகள் பாதிக்கப்படாத வகையில் புத்தளம் அரச அதிபருடன் கலந்துரையாடி அங்கு தேவையான வாகனங்களை மட்டும் அனுப்பி வைப்பதற்கு யாழ்.அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வாகனங்கள் அடுத்த வாரம் புத்தளத்துக்குக் கொண்டு செல்லப்படும் எனவும் கூறப்பட்டது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் புதிய தலைவராக நெடியவன்

விடுதலைப் புலிகளின் புதிய தலைவராக நோர்வேயிலிருந்து செயற்படும் நெடியவன் என்பவரே தற்போது செயற்படுவதாக ஆஸ்திரேலியாவில் வாழும் பயங்கரவாத ஆய்வு நிபுணரான ஷானக்க ஜயசேகர தெரிவித்துள்ளார்.

'பொஸ்டன் நியூஸ்' எனும் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவிலிருந்து இயங்கும் வி.உருத்ரகுமார் தரப்பினருக்குத் தமிழ் மக்கள் மத்தியில் போதிய ஆதரவு இல்லையென்றும் அதற்குப் பதிலாக நெடியவன் என்பவரே பெரும்பா லான தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும் புதிய தலைவராகக் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தலைமைத்துவப் போட்டி நிதிப் பொறுப்பு என்பன காரணமாக உருத்திரகுமார் மற்றும் நெடியவன் இருவரும் முரண்பட்டு ஆளுக்காள் மோதிக் கொண்டிருப்பதாகவும் ஷானக்க ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் முள்ளிவாய்க்கால் மோதலின் பின் விடுதலைப் புலிகளின் அனைத்து நிதிப் பரிமாற்றங்கள் மற்றும் பொறுப்புகளும் நெடியவன் ஊடாகவே நடைபெறுவதாகவும் ஷானக்க ஜயசேகர தனது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

(தமிழ்வின்)

இணையச் செய்திகள்

## இலங்கை மின்சார சபைக்கு 5 பில்லியன் ரூபா இலாபம்

இலங்கை மின்சார சபை இந்த நிதியாண்டில் ரூபா 5 பில்லியன் இலாபத்தைப் பெற்றுள்ளதாக மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

2000ஆம் ஆண்டு முதல் கடந்த ஆண்டுவரை சுமார் 10 வருடகாலமாக 115 பில்லியன் ரூபாய் நட்டத்தை அடைந்த வந்த இலங்கை மின்சார சபை இந்த முறை இலாபமடைந்துள்ளதாக தெரிவித்தார்.

(தமிழ்மிரர்)(த-10)

## ஐ.தே.க ஆதரவாளர் வாகனம் தீப்பற்றியது

கலிகமுவ பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் பயணம் செய்த வாகனமொன்று மரத்தில் மோதிய பின் தீப்பற்றிக் கொண்டுள்ளது.

இந்த வாகனத்தில் பயணம் செய்தவர்கள் ஐ.ம.சு. முன்னணி ஆதரவாளர்களுடன் மோதலொன்றில் சம்பந்தப்பட்ட பின்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(தமிழ்மிரர்)(த-10)

## 2017 ஆண்டு வரை ஜனாதிபதி தேர்தல் இல்லை

எதிர்வரும் 2017ஆம் ஆண்டு வரை ஜனாதிபதித் தேர்தலோ அல்லது எதிர்வரும் 2016ஆம் ஆண்டு வரை பொதுத் தேர்தலோ நடத்தப்பட மாட்டாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

எவருக்காவது புதிதாக அரசாங்கமொன்று வேண்டுமானால் 2016ஆம் ஆண்டு வரை காத்திருக்கவேண்டும் என நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் ஜனாதிபதி கூறினார்.

(தமிழ்மிரர்)(த-10)

# திருமலை, இரத்தினபுரி அபிவிருத்திக்கு ஜப்பான் அரசு 18 மில்லியன் ரூபா உதவி

திருகோணமலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இரண்டு வாழ்வாதார திட்டங்களை முன்னெடுப்பதற்காக ஜப்பானிய அரசு அடிமட்ட மனித பாதுகாப்பு நன்கொடை திட்டத்தின் கீழ் 18 மில்லியன் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.



இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் குனியோ தக்காஷியும் இலங்கை சமூக நடவடிக்கைகளுக்கான அபிவிருத்தி சங்கம் மற்றும் சமூக அபிவிருத்தி மன்றம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் நேற்று வியாழக்கிழமை ஜப்பானிய தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற வைபவத்தின் போது இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் சமூக முன்னேற்றச் செயற்றிட்டத்திற்காக இலங்கை சமூக நடவடிக்கைகளுக்கான அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படவுள்ளது.

இதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில் பெருந்தோட்ட மக்களின் சுகாதார மற்றும் வதிவிட சூழல் முன்னேற்ற செயற்றிட்டத்துக்காக சமூக அபிவிருதத்தி மன்றத்தின் ஊடாக எட்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படவுள்ளது.

குறித்த 18 மில்லியன் நிதி மூலம் திருகோணமலை, சேருவில பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள குளங்கள், விவசாயக் கிணறுகள் மற்றும் மீன்பிடி நிலையங்களும் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள மூன்று தோட்டங்கள் மற்றும் இரண்டு பாடசாலைகளும் புனரமைக்கப்படுவதுடன் விழிப்புணர்வு செயற்றிட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் விவசாய, மீன்பிடி உபகரணங்கள் விதைகள் மற்றும் நாற்றுகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் 1520 குடும்பங்கள் நேரடியாகவும் 3,500 குடும்பங்கள் மறைமுகமாகவும் இரத்தினபுரி மாவட்டத்தில் 485 குடும்பங்கள் நேரடியாகவும் நன்மையடையவுள்ளன.

ஜப்பானிய அரசினால் அடிமட்ட மக்களை கட்டியெழுப்புவதற்காக உருவாக்கப்பட்ட திட்டமே அடிமட்ட மனித பாதுகாப்பு நன்கொடைத் திட்டமாகும்.

இந்தத் திட்டத்தின் ஊடாக கடந்த 2010 ஏப்ரல் முதல் 2011 ஏப்ரல் வரையான காலப்பகுதியில் 10 திட்டங்களுக்காக 190 மில்லியன் ரூபா நிதியை ஜப்பான் அரசு இலங்கைக்கு ஒதுக்கியுள்ளது.(தமிழ்மிரர்) (த-10)

# இலங்கைத் தூதுவர்களை நிராகரித்த வெளிநாடுகள்

முன்னாள் கடற்படைத் தளபதியை ஆஸ்ரேலியாவுக்கும், பாலித் கொஹன்னவை பிரித்தானியாவுக்கும் தூதுவர்களாக நியமிக்க இலங்கை அரசு முன்மொழிந்த போதும்- அதை இந்த நாடுகள் நிராகரித்துள்ளதாக ஆங்கில இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் திசார சமரசிங்கவை ஆஸ்திரேலியாவுக்கான தூதுவராகவும், தற்போது ஐ.நாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக உள்ள பாலித கொஹன்னவை பிரித்தானியாவுக்கான தூதுவராகவும் நியமிக்க இலங்கை அரசு திட்டமிட்டிருந்தது.

இவர்களின் நியமனங்கள் தொடர்பான முன்மொழிவை இந்த நாடுகளின் அரசுகளுக்கு இலங்கை அதிகாரபூர்வ மாக அறிவித்திருந்தது.

ஆனால் பிரித்தானியாவும், ஆஸ்திரேலியாவும் இலங்கை அரசு முன்மொழிந்த பாலித கொஹன்னவையும், அட்மிரல் திசார சமரசிங்கவையும் தூதுவர்களாக ஏற்க மறுத்துள்ளன.

இறுதிப்போரின் போது சரணடைய முன்வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் அளிப்பதாக இலங்கை அரசின் சார்பில் வாக்குறுதி கொடுத்திருந்தார் பாலித கொஹன்ன.

அவருக்கு எதிராக அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க்குற்ற வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இறுதிப்போரின் போது இலங்கைக் கடற்படையின் நடவடிக்கைத் தளபதியாக இருந்து பொதுமக்கள் மீதான பீரங்கித் தாக்குதல்களுக்கு பொறுப்பாக இருந்தவர் என்ற வகையில் அட்மிரல் திசார சமரசிங்க மீதும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் உள்ளன. இவரை ஆஸ்திரேலியாவுக்கான தூதுவராக ஏற்கக் கூடாது என்று அந்த நாட்டின் நாடாளுமன்றத்திலும் குரல் எழுப்பப்பட்டிருந்தது.

இலங்கை அரசு முன்மொழிந்த தூதுவர்களை ஏற்க பிரித்தானியாவும் ஆஸ்திரேலியாவும் மறுத்துள்ளதால்- வேறு புதியவர்களை முன்மொழிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவை தூதுவராக ஏற்றுக் கொள்வதற்கு ஜப்பானிய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. (புதினப்பலகை)

## இலங்கையில் சிறுவர் உரிமைகள் உறுதி செய்யப் பட்டுள்ளதாம்

இலங்கையில் சிறுவர்களின் உரிமைகளை உறுதி செய்வதற்கான சர்வதேச சாசனங்கள் முழுமையாக அமுலாக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் மாநாட்டில் வைத்து, இலங்கையின் பிரதிநிதியான வெளிநாட்டு அமைச்சின் ஆலோசகர் சரோஜா சிறிசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தை முழுமையாக அமுல்படுத்தச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் போர் ஓய்ந்து இரண்டு வருடங்கள் ஆகின்ற நிலையிலும் அன்றாடம் கஞ்சிக்கே அல்லல்படும் பிஞ்சுகளை வன்னிப் பெருநிலப்பரப்பில் தற்போதும் காணக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (தமிழ் சி.என்.என்)(த-10)

## நோர்வே இராஜதந்திரிக்கு இலங்கையில் அபராதம்

நோர்வேயின் உயர்மட்ட இராஜதந்திரி ஒருவருக்கு இலங்கையால் ஒன்றரை இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையே இந்த அபராதத்தை விதித்துள்ளது. கொழும்பு நகரில் இந்த வாரம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள் குடிதண்ணீர் திருட்டுத் தொடர்பான சோதனைகளை மேற்கொண்டனர்.

அப்போது கிறகரி வீதியில் வதிவிடத்தைக் கொண்டுள்ள நோர்வேயின் உயர் இராஜதந்திரியின் இல்லத்தில் குடிதண்ணீர் திருடப்பட்டு வந்தது கண்டு பிடிக்கப்பட்டது. (புதினப்பலகை)

## ஊடக அமைப்புகளின் கடிதம் ஐ.நாவின் கவனத்தில்

ஊடகவியலாளரான பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனமை தொடர்பில் ஐ.நா.வின் செயலாளர் நாயகத்துக்கு ஐந்து ஊடக அமைப்புகள் கூட்டாக எழுதிய கடிதத்தில் சில தவறுகள் காணப்படினும் அந்த விடயத்தில் கவனம் செலுத்தி வருவதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு உட்பட ஐந்து ஊடக அமைப்புகள் அனுப்பிய கடிதம் கிடைத்துள்ளதாக ஐ.நா.வின் பேச்சாளர் மார்ட்டின் நெசெக்கி இக்கடிதம் குறித்துக் கேட்டபோது கூறினார்.

மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகமும் யுனெஸ்கோவும் காணாமல் போன ஊடகவியலாளர்கள் பற்றி ஆராய்ந்து வருகின்றனர். இது தொடருமெனவும் ஐ.நா. பேச்சாளர் தெரிவித்தார்.

(தமிழ்மிரர்)(த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாந்துறைப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.



# உள்ளூராட்சித் தேர்தல் மூலம் அரசைக் கவிழ்க்க முடியாது

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 11

உள்ளூராட்சித் தேர்தல்களின் மூலம் அரசைக் கவிழ்க்க முடியாது. கிராமசபை வேலைத்திட்டத்தின் மூலம் நாட்டிலுள்ள சகல மாவட்டங்களிலும் உள்ள கிராமங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தல்களால் அரசைக் கவிழ்க்க முடியாது. இந்தத் தேர்தலில் அரசுக்கு 2005ஆம் ஆண்டு போன்று மக்களின் ஆணை கிடைக்கும் என்பது நிச்சயமாகும். ஜனாதிபதி தனது முதலாவது ஆட்சிக்காலத்தில் பெரும் முதலீடுகளைச் செய்தார். இரண்டாவது ஆட்சிக்காலத்திலும் விமானம், துறைமுகம் உட்பட பெரும் முதலீடுகளை அரசு ஆரம்பித்தது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்லுக்குப் பின்னர் கிராம மட்டத்தில் அபிவிருத்திகளை முன்னெடுக்கவுள்ளோம். திவிநெகும திட்டத்தினூடாக கொழும்பு மாவட்டத்தைப் போன்று ஏனைய மாவட்டங்களையும் அபிவிருத்தி செய்யவுள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்தில் கொழும்பு 3 மட்டுமே அபிவிருத்தி அடைந்தது. அன்று நாட்டின் பொருளாதார அபிவிருத்தி 1.5ஆகக் காணப்பட்டது. கொழும்பைத் தவிர ஏனைய மாவட்டங்கள் அபிவிருத்தி அடையவில்லை என்று இன்று எவராலும் கூறமுடியாது.

1980களில் வீதியோரங்களில் சடலங்கள் காணப்பட்ட நேரங்களில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஆனால் இன்று அவ்வாறான சூழ்நிலைகள் மாற்றப்பட்டுள்ளன. மக்களின் வாக்குரிமைகளைத் துப்பாக்கி முனையில் பறித்த ஜே.வி.பிக்கும், ஐ.தே.கவுக்கும் வாக்குரிமை குறித்து பேசத் தகுதியில்லை.

மக்களின் எதிர்ப்புகள் மத்தியில் 5 நாள்கள் கடந்து எகிப்திய ஜனாதிபதி முபாரக்கின் பதவி விலகினார். ஆனால், மக்களினதும் கட்சி உறுப்பினர்களினதும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ரணில் விக்கிரமசிங்க தலைவர் பதவியை கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்- என்றார். (த-சி)

# வவுனியா நகரபிதா நாதன் நேற்றுப் பதவி துறந்தார்

## நீண்டகால இழுபறி நிலை முடிவுக்கு வந்தது

கொழும்பு, மார்ச் 11

வவுனியா நகரசபைத் தலைவராக கடந்த 15 மாத காலம் பதவி வகித்த எஸ்.என்.ஜி.நாதன் நேற்றுத் தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

தனது இராஜினாமா கடிதத்தை வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார். தனிப்பட்ட காரணங்களுக்காகத் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்வதாக அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். கடிதத்தின் பிரதிகளை வடமாகாண ஆளுநர், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார். இந்த நிலையில் அடுத்த தலைவர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. கடந்த 2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற வவுனியா நகரசபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி நகர சபை நிர்வாகத்தை கைப்பற்றியிருந்தது.

11 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் ஐவர் தமிழரசுக் கட்சியையும், மூவர் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியையும் இருவர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியையும் ஒருவர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸையும் சேர்ந்தவர்கள்.

தலைவருக்கு எதிரான பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு சபை நிர்வாகம் குளறுபடியான நிலையிலிருந்து விசாரணைகளும் நடைபெற்றன. ஆனாலும் சபை உறுப்பினர்களின் ஒத்துழைப்பின்றி நிர்வாகம் நடைபெற்று வந்தது.

முக்கிய தீர்மானங்கள் கூடச் சபையில் நிறைவேற்ற முடியாத இழுபறி நிலையிலிருந்து வந்தது.

இந்த நிலையில்தான் வவுனியா நகர சபையின் தலைவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார் எனக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்திருந்தார்.

இப்படியான நிலைமையிலேயே இவரது இராஜினாமா தற்பொழுது இடம்பெற்றுள்ளது. (த-10)

# உள்ளூராட்சித் தேர்தல் மூலம் இலங்கையை ஜனநாயக நாடாகக் காட்ட அரசு முயற்சி

## விக்கிரமபாகு கருணாரட்ண சாடல்

சென்னை, மார்ச் 11

உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதன் மூலம் இலங்கையில் ஜனநாயகம் நிலைபெற்றுள்ளது என சர்வதேசத்துக்குக் காட்ட அரசு முயற்சிக்கிறது - என்று விக்கிரமபாகு கருணாரட்ண குற்றம்சாட்டியுள்ளார்.

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் மூலம் இலங்கையில் ஜனநாயகம் நிலைபெற்றிருக்கிறது என சர்வதேசத்தை ஏமாற்றிவிட்டு, மறுபுறத்தில் அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் ஆணையாளரையும் மிரட்டி வாக்குகளைக் கொள்ளையடிக்கும் முயற்சிகளை அரசு மேற்கொள்கிறது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஒரு காலத்தில் அவசர காலச்சட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் அதனைப் பயன்படுத்தி தங்களுக்குத் துன்பம் விளைவிக்கப்படும் தற்போதுதான் அதன் பயங்கரத்தை உணர்ந்திருக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மற்றும் சட்டம் என அனைத்தையும் அரசு தவறாகக் கையாண்டு அடக்கியாண்டு கொண்டிருக்கின்றது. அவசர காலச்சட்டம் அப்பாவிகள் மீது பாய்கின்றது. அப்படியான நிலையில் இலங்கையை ஜனநாயக நாடாக காட்டும் முயற்சிகள் எடுபடவே மாட்டா என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-சி)

# மிருசுவில் கொலை நடைபெற்ற இடத்தை 10 வருடங்களின் பின் பார்வையிட முடிவு

கொழும்பு, மார்ச் 11

10 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம், மிருசுவில் பகுதியில் எட்டு பொதுமக்களை கொலை செய்த இடத்தை, நேரில் சென்று பார்வையிடக் கொழும்பு மேல் நீதிமன்ற மூவர் அடங்கிய நீதிபதிகள் தீர்மானித்துள்ளனர்.

இதற்கு ஏற்ற நடவடிக்கைகளை, பாதுகாப்பு செயலாளர் மற்றும் நீதியமைச்சின் செயலாளர் ஆகியோர், மேற்கொள்ளுமாறு இந்த நீதிபதிகள் குழு கோரியுள்ளது.

2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற இந்தக் கொலை தொடர்பில், குற்றம் சுமத்தப்பட்ட ஐந்து இராணுவத்திருக்கு எதிரான வழக்கு விசாரணை, நேற்றுக் கொழும்பு மேல் நீதி மன்றத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண நீதிவானினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை ஆராய்ந்ததன் பின்னரே, கொலை சம்பவம் இடம்பெற்ற இடத்தை நேரில் சென்று பார்வையிடுவதற்கான தீர்மானம் மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கமைய, யாழ்ப்பாண நீதிவானினால் அறிக்கை ஒன்று நேற்றைய தினம் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்று பல வருடங்கள் ஆகியுள்ள நிலையில் குறித்த இடத்தில் பல்வேறுபட்ட மாறுதல்கள் ஏற்பட்டுள்ளதாக, யாழ்ப்பாண நீதிவானின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்தநிலையில் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற பொதுமக்களே இந்த சம்பவத்தின் போது கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-10)

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்
PHYSICS
Mr.R. குமரன்
2011 A/L - PAPER CLASS
சனிக்கிழமை 10.30 → 1.30
12.03.2011 நடைபெறும்

புதிய பிரிவுகள்
Rs.800 Upwards
Diploma Courses..
*MS Office *Accounting
*Web Devel.* Multimedia
*AutoCAD VB.net, LINUX, ICT,GIT,Kids Prog
International Courses...
Computer Engineering, CIMA,IELTS / Toefl
Cisco-CCNA,CCNP ICDL-CAD, BCS-UK
Oracle Java prog., Red Hat Engineer
Degree Course-BIT-University of Colombo
Free: ICDL, Dip. in English, Hardware, DTP, Internet & Email
SMS your name & course to 0772 395 895 & get Schol.
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு
Closing Date 14.03.2011
MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org
Call 772395895

கணக்கீடு
A/L 2011
காசுப்பாய்ச்சல் கூற்று
ஆரம்பம் ஞாயிறு 4 PM
S.தவா
B.com (Hons) (Acc. spl.)
(தனிப்பாட அனுமதி உண்டு)
Universal
யா/இந்து மகளிர் கல்லூரி அருகில், யாழ்ப்பாணம்.

கணக்கீடு
A/L 2011
காசுப்பாய்ச்சல் கூற்று
ஆரம்பம் நாளை 6 A.M
A/L 2012
முடிவுக்கணக்கு
ஆரம்பம் நாளை 8 A.M
S.தவா B.com (Hons) (Acc. spl.)
தனிப்பாட அனுமதி உண்டு
NIRU TUITION
Kondavil

STUDY AND WORK
in New Zealand,
Cyprus , Singapore
& UK
VISA க்குப் பின்னர் பல்கலைக்கழக / கல்லூரிக் கட்டணம் செலுத்தும் வாய்ப்பு
India- Courses offered
Engineering
BE - Electronics and Communication
BE - Electrical and Electronics
BE - Computer Science
BE - Information Science
BE - Mechanical
BE - Civil
For Placement
0770767114
0750398686
Medical Courses
B.Pharmacy
BSc-Nursing
BPT-Physiotherapy
MBBS, BDS
EASY ACCESS CONSULTANCY
INTERNATIONAL STUDENT PLACEMENT & IMMIGRATION CONSULTANTS
RAIL ROAD LANE, KOKUVIL EAST KOKUVIL.
e-mail: candee015@hotmail.com
Tel: 0770767114 / 0750398686

PRACTICAL ENGLISH
பல்கலைகழக மாணவர், ஆசிரியர்கள் உள்ளடங்கலாக அனைவருக்கும் ஏற்றவகையில், அடிப்படையிலிருந்து இலகுமுறையில் எழுத, வாசிக்க மட்டுமன்றி பேசவும் கிரகிக்கவும்கூட பயிற்றுவிக்கப்படும்!
Duration 3 Months
Fee Rs.3000/-
கட்டணம் பகுதிபகுதியாக செலுத்தலாம்
சனி ஞாயிறு } 9am - 11am
V-Talk English
Chunnakam, (Opposite Commercial bank)
Nearby 'Net Digital Colour Lab' 0777363797
Taught by: Mr.T.Kugan

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பி தர்ஷாவின் அன்புத் தந்தை
*லயன். ஐயாத்துரை இராமச்சந்திரா*

*காரிருளில் வந்த செய்தி*
*கலங்கிட வைத்தது....*
*பார்த்துப் பதிந்த முகம்*
*பலதூரம் சென்றதுவோ....?*
*மரணத்தை மிகத் துணிவாய்*
*வரவேற்று தெய்வத்துள் சேர்ந்தவரின்*
*சாந்திக்காய் வேண்டுகின்றோம்!*

நண்பர்கள்
30ஆம் அணி
யாழ். மருத்துவபீடம்

(1444)

## மரண அறிவித்தல்



*செல்வன்*
*கணேசமூர்த்தி துஸ்யந்தன்*

நவாலி தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் கணேசமூர்த்தி துஸ்யந்தன் (02.03.2011) இல் மலேஷியாவில் காலமானார்.

அன்னார் கணேசமூர்த்தி - புஸ்பராணி (கே.ஜி.எம். போட்டோ) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், துஸ்யந்தி, பிரசன்னா (யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருடம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் றஞ்சித்குமாரின் (கனடா) அன்பு மைத்துனரும் வர்சிகா (பூஜா), யதாகினி (யஸ்மி) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று (11.03.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணியளவில் பூதவுடல் நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நவாலி தெற்கு,**
**மானிப்பாய்.** (1437)

தகவல்:
கணேசமூர்த்தி குடும்பத்தினர்
*(கே.ஜி.எம்.போட்டோ)*

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org